# தேனகம்

முத்தமிழ் விழாச் சிறப்புமலர் - 2014




## மரபும் மாற்றமும்

பிரதேச செயலக கலாசாரப்பேரவை, மண்முனை வடக்கு

# தேனகம்

இருபத்தியொராவது ஆண்டு முத்தமிழ் விழாச் சிறப்புமலர்

மண்முனை வடக்கு பிரதேச மரபும் மாற்றமும் - சில பதிவுகள்

**பிரதேச செயலக கலாசாரப் பேரவை**

**மண்முனை வடக்கு - மட்டக்களப்பு**

**2014**

# தேனகம்

மண்ணில் எம் கலைகளைக்
கண்ணென மதிப்போம்

இருபத்தியொராவது ஆண்டு
முத்தமிழ் விழாச் சிறப்புமலர்


பேராசிரியர். சி. மௌனகுரு
திரு. மு. சதாகரன்
திரு.கதிர்பாரதிதாசன்
திருமதி. தி. ஹரிதாஸ்
திரு. நா. சிவலிங்கேஸ்வரன்
திருமதி. சு. வேதநாயகம்
திரு. வி. மைக்கல் கொலின்

த.சங்கர்

ஸ்ரீ கமலச்சந்திரன்

வணசிங்கா பிரிண்டர்ஸ்

வெளியீடு
பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
2014


## மண்ணில் எம் கலைகளைக் கண்ணென மதிப்போம்


திரு. வெ. தவராஜா
பிரதேச செயலாளர்

திரு. மு. சதாகரன்
கலாசார உத்தியோகத்தர்

பேராசிரியர். சி. மௌனகுரு
திரு. க. கணேசானந்தம்
திரு. இ. பாக்கியராசா
திரு.கதிர்பாரதிதாசன்
திருமதி. தி. ஹரிதாஸ்
திரு. தெ. ரவீந்திரமூர்த்தி
திரு. எஸ். சந்திரகுமார்
திருமதி. ம.மகேந்திரன்
திருமதி. சு. வேதநாயகம்
திரு. நா. சிவலிங்கேஸ்வரன்
திருமதி. ம. சிவஞானசோதிகுரு
திரு. எ. பிரியகாந்தன்
திரு. எஸ். பாக்கியநேசன்
திரு. வி. மைக்கல் கொலின்

# வாழ்த்துச் செய்தி



மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையால் வருடாவருடம் கொண்டாடிவரும் பிரதேச முத்தமிழ் விழாவை முன்னிட்டு ஆவணப்பதிவாக மலரவிருக்கும் "தேனகம்" எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் கலைஞர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், முதியோர்கள், பலதுறைவிற்பன்னர்கள் ஆகிய பலதரப்பட்ட சமூகத்தினரையும் தலைநிமிர தரணியில் புகழ் பூக்க களம் அமைத்திடும் இக்கலாசார விழா மலராக "தேனகம்" மக்கள் மனதில் தேன்போன்று பாய்ந்திடும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எனவே எமது தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களைத் தாங்கி வரும் "தேனகம்" மலர் மக்களின் அகத்தில் தேனாக இனிக்கவும், செந்தமிழ் மணம் கமழ்வதற்காக ஊக்கமளித்த பிரதேச செயலாளருக்கும், இதற்கு முன்னின்று உழைத்த ஆக்கக்குழு, மற்றும் விழாக் குழுவினர்களுக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

**திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

புத்தி, அறிவு இருந்தால் மட்டும் உண்மையான இலக்கிய வாதிகளாக வலம்வர முடியாது. ஆக்கபூர்வமான சிந்தனையுள்ள உண்மை இலக்கியவாதிகள் சமூகத்தில் குறைவாகவே உள்ளனர். கலையின் மென்மைத் தன்மையை ரசனையுடன் மனித சமூகத்திற்கு வழங்கும் போது, அது சகல சமூகத்தையும் விழி திறந்து விருது வழங்கப்படும் போது அவர்கள் உண்மையான மற்றும் திறமையான இலக்கியவாதிகளாக இனங்காணப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் எமக்கு உரித்தான கட்டுரைகள், கவிதைகள், நிகழ்கால சமுதாய வாழ்வுக்கு மற்றும் புதிய படைப்புக்கள் படைப்பதற்கு இலக்கியவாதிகள் முன்வரவேண்டும்.

அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலமாக வருடாவருடம் நிகழ்த்தப்பட்டு வருகின்ற அரச இலக்கிய விழாவுக்கு ஒத்ததாக நாடளாவிய ரீதியில் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்ட இலக்கிய ஆக்கத்திறன் போட்டிகள் அவற்றிடையில் ஒரு விசேட நிகழ்ச்சியாகும்.

இவ்வாக்கத்திறன் போட்டியில் இம்முறை காணக்கிடைக்கின்ற விசேஷங்கள் பல. இதுவரை பாடசாலைப் பிரிவில் கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த எனும் பிரிவுகள் உட்படும் வகையில் கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடலாக்கம் போன்ற துறைகள் உட்பட்டதாக போட்டிகள் மேற் கொள்ளப்படுவதோடு இவ்வாண்டில் இருந்து இதன் துறைகளை மேலும் விஸ்தீரணப்படுத்தி சிறுவர் கதை ஆக்கம், நாட்டார் கதைகள், பாட்டு இரசித்தல் என்ற வகையில் சுதேசிய கலாசாரத்தின் பண்டைய இலக்கிய அம்சங்களை பிரதேச மட்டத்தில் இருந்தே ஒரு போட்டிகரமான முறையில் தேடிப்போக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மேலும் உயர்த்துவதற்காகவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உரித்தான மண்முனை வடக்கு பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக வருடந்தோறும் "தேனகம்" என்ற மலரை வெளியிட மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் எடுத்த முயற்சியானது வரவேற்றகத் தக்கது. இதன்மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

**விஜித் கனுகல**
பணிப்பாளர்.
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# வாழ்த்துச் செய்தி



மண்முனை வடக்குப்பிரதேச கலாசார பேரவை யால் இவ்வருடம் நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழாவின் பொருட்டு வெளிவரும் 'தேனகம்' மலருக்குச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றேன்.

பண்பாடு பாரம்பரியங்களும், கலைகலாசார விழுமியங்களும் அருகிவரும் இக்காலகட்டத்தில் அவற்றைப் பேணவும் வளர்த்தெடுக்கவுமாக ஆண்டு தோறும் முத்தமிழ் விழாவினை நடாத்தி ஊக்கப்படுத்தி வரும் மண்முனை வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை இவ்வருடம் இருபத்தியொராவது தேனகம் மலரை வெற்றியுடன் பிரசவிக்கின்றமை மகிழ்ச்சி தருகின்றது.

பண்பாட்டுப் பாரம்பரிய தேடல் முயற்சிகளும், ஆவணப் படுத்தலும் முதன்மையடைந்து வரும் இந்நிலையில், எம்பிரதேசம் சார்ந்த பண்பாட்டியியலை, பல்துறை அம்சங்களை தொடர்ச்சியாக ஆவணப்படுத்தி வரும் நாம் இவ்வருடமும் மரபும் மாற்றமும் எனும் தொனிப்பொருளை முதன்மைப்படுத்தி கடந்த கால விழா மலர்களைப் போல் இம்மலரையும் ஆவணப்பதிவேடாக வடிவமைத்துள்ளோம்.

எமது சமூக விழுமியங்களையும் அதன் வேர்களையும் வெளிக் கொணர்வதும் பாதுகாப்பதும் வளர்த்தெடுப்பதும் எமது கடமையாகும். அந்த வகையில் புதிய பரம்பரையினருக்கு எமது பாரம்பரியங்களை அறிமுகப்படுத்தும் பணியாக இது அமைகின்றது.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்களையும் கருத்தெடுத்து வெளிவரும் இம்மலர் வெளிவர முன்னின்று உழைத்த கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, விழா சிறப்புற வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வெ. தவராஜா**
பிரதேச செயலாளரும்,
கலாசாரபேரவைத் தலைவரும்
மண்முனை வடக்கு



# வாழ்த்துச் செய்தி

அழகிய வாவிகளையும், வயல் நிலங்களையும் ஒருங்கே அமையப் பெற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் திகழ்கின்றது. இம் மாவட்டத்தில் சிறந்த கல்விமான்களையும், கலைஞர்களையும் கொண்ட பிரதேசமாக மண்முனை வடக்குப் பிரதேசம் அமைந்துள்ளது. இப் பிரதேசத்தில் கூத்து, நாடகம், ஆடல், பாடல் போன்ற அனைத்துக் கலை வடிவங்களும் இன்றுவரை போற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கால நாகரிக மோகத்தில் சிக்குண்ட மக்கள் தாங்கள் போற்றுகின்ற கலைகளைக் கைவிட்டுச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது. மக்களின் செம்மையான வாழ்விற்கு அப்பிரதேச மக்களால் பேணப்பட்டு வந்த கலை, கலாசாரம், பண்பாடு, கட்டுக்கோப்பு என்பன காரணியாக அமைந்துள்ளது. இவற்றை மேம்படுத்திச் செல்லும் நோக்குடன் மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தினால் இவ்வருட இலக்கிய விழாவை முன்னிட்டு "மரபும் மாற்றமும்" எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எனவே பல்வேறு சிரமங்களிற்கு மத்தியிலும் இவ் இலக்கியப் பணியினையும் மலர் வெளியீட்டினையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கும் கலாசாரப் பேரவையினருக்கும் கலாசார உத்தியோகத்தருக்கும் மற்றும் கலை இலக்கியவாதிகளிற்கும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**W. A. L. விக்கிரம ஆரச்சி**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

# வெளியீட்டுரை



மண்முனை வடக்கு கலாசார பேரவையின் 21வது தேனகம் மலர் இதுவாகும். இம்மலரும் வளமை போன்று காத்திரமான ஆக்கங்களுடனும், பிரதேசத்தின் ஆவணப்பதிவாகவும் வெளிவருகின்றது.

கடந்த 20வது மலரானது மரபும் மாற்றமும் எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பின் குறிப்பாக மண்முனை வடக்கு பிரதேச மக்களின் மரபாக இருந்த பண்பாட்டம்சங்கள் கால ஓட்டத்தில் மாற்றமடைந்து வந்துள்ளமையை பல்வேறு கட்டுரைத் தலைப்புகள் வாயிலாக ஆராய்ந்திருந்தது. இம்மலரும் அம்மலரின் தொடர்ச்சியாகவே வெளிவருகின்றது. மரபும் மாற்றமும் எனும் பொருளில் எஞ்சிய கட்டுரைத் தலைப்புகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் யாவும் முக்கிய ஆவணப்பதிவுகள் என்பது வாசிக்கும் போது புரியவரும்.

பண்பாடு என்பது மாறும் தன்மையது. வெளி, உட்தாக்கங்களால் பண்பாடு காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. இம்மாற்றத்தையும் புரிந்து கொள்ளும், ஏற்றுக் கொள்ளலும் முக்கியமானது. இருப்பினும் எமது பண்பாடு கால ஓட்டத்தில் அள்ளுண்டு போக விடமுடியாது. அவை எமது அடையாளங்கள்.

இதனால் எமது பண்பாட்டின் அடிவேர்களைப் புரிந்து கொண்டு அவற்றைக் கட்டிகாக்க முன்வருவது எம் அனைவரினதும் கடமையாகும். அவ்வுணர்வினை இவ்விரண்டு மலர்களும் உங்களுக்கு ஏற்படுத்தியிருப்பின் அவை எமது வெற்றியாகும்.

இம்மலர் வெளியிடுவதற்கு ஒத்துழைத்த பிரதேச செயலாளர் அவர்கட்கும், கலாசார பேரவை மலர்க் குழு, மற்றும் உறுப்பினர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய அறிஞர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியோர்களுக்கும், நிதி உதவி நல்கியோருக்கும், மற்றும் மலரை சிறப்புற வடிவமைத்த திரு. த. சங்கர் அவர்களுக்கும், மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த வணசிங்கா அச்சகத்திற்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**மு. சதாகரன்**
கலாசார உத்தியோகத்தரும்
கலாசாரபேரவை செயலாளரும்
மண்முனை வடக்கு

# பொருளடக்கம்





மரபுக் கலைகளும் மாற்றமும் 09

உணர்வுகள் உதிப்புக்கள் 17

மண்முனை வடக்கு பிரதேசத்தில் நவீன கவிதை 18

கர்ப்பம் பிறப்பு 23

பரதக்கலை 26

தாய்மொழி தள்ளாடுகின்றது 31

சித்த மருத்துவம் 33

மண்முனை வடக்கு பிரதேச நாவல்கள்,
சிறுகதைகள் அன்றும் இன்றும் 44

முக்குவச் சட்டம் 49

பிணங்கள் 57

கலைஞர் கௌரவம் 62

இனிய நிலம் 69

மட்டக்களப்பு மண்முனை வடக்குப்
பிரதேச செயலாளர் பிரிவில் சிற்றிதழ்
வளர்ச்சிப் போக்குப்பற்றிய ஒரு பார்வை 70




# பிரதேச செயலக கலாசாரப் பேரவை-2014


## மண்முனை வடக்கு - மட்டக்களப்பு



முன் வரிசை இடமிருந்து வலமாக 1. திரு. தெ. ரவீந்திரமூர்த்தி 2. திரு. மு. சதாகரன் 3. திரு. வெ. தவராஜா 4. திரு. க. கணேசானந்தம் 5. திருமதி. தி. ஹரிதாஸ்

பின் வரிசை இடமிருந்து வலமாக 1. திருமதி. சு. வேதநாகம் 2. திருமதி. ம. மகேந்திரன் 3. திரு. நா. சிவலிங்கேஸ்வரன் 4. திரு.எஸ். பாக்கியநேசன் 5. திரு. எ. பிரியகாந்தன் 6. திரு. எஸ். சந்திரகுமார் 7. திரு. கதிர் பாரதிதாசன் 8. திரு. வி. மைக்கல்கொலின் 9. திருமதி. சா. மதனகுமார் 10. திருமதி. ம. சிவஞானசோதிகுரு

சமூகமளிக்காதோர் 1. பேராசிரியர் சி. மௌனகுரு 2. திரு. இ. பாக்கியராஜா 3. திரு. சு. ரவீந்திரன்



# மரபுக் கலைகளும் மாற்றமும்

இக் கட்டுரையின் தலைப்பானது தன்னிச்சையாக எம்மை மூன்று விடயங்களைப் பற்றிய புரிதலின் அவசியத்தை நோக்கித் தூரத்துகிறது. இங்கு குறிப்பிடப்படும் "மரபு", "கலை", மற்றும் "மாற்றம்" ஆகிய மூன்று சொற்களும் வெறுமனே ஒரு வாக்கியத்தினூடாகவோ அல்லது வரைவிலக்கணத்தினூடாகவோ இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் அவை தனித்தனியாக தமக்கான தனித்துவத்தைக் கொண்டமைந்தவை மட்டுமன்றி தனித்தனியான மூன்று கட்டுரைகளுக்கான தலைப்புகளாகவும் காணப்படுகின்றன. எனவே நாம் சற்று விரிவாக இவற்றை ஆராய்வதினூடாக எமது புரிதலை இலகுபடுத்திக்கொள்வோம். நாம் மரபு எனும் சொல்லைச் சாதாரணப் பேச்சு வழக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாவிக்கின்றோம். மரபுக்கவிதை, மரபணு, மரபுத்தொடர், மரபியல் நோய், மரபுக்கூறு, மரபுக்கலை போன்றவை அவற்றுட் சில. இவற்றில் மரபணு அல்லது மரபணுச் சோதனை (DNA Test) மற்றும் மரபியல் நோய் (Inherited Diseases) எனும் சொற்கள் தற்காலத்தில் மிகவும் பிரபலமடைந்திருப்பதுடன் அனைவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் காணப்படுகின்றன. அவை மரபு எனும் சொல்லும் எமக்கு மூந்திய சந்ததியும் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டுள்ளதையும் கோடிட்டுக் காட்டுகிறது. மரபியல் விஞ்ஞானமானது (Genetics Science) மரபு என்பதை ஒரு செய்தியெனவும் அச்செய்தியை தலைமுறைகளினூடாக எடுத்துச் செல்லும் கருவியே மரபணு (Gene) எனும் மிகச்சிறிய மூலக்கூறுகள் எனவும் விளக்குகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அல்லது பரம்பரையில் சில தலைமுறைகள் கடந்தபின்னரும் உருவ ஒற்றுமை காணப்படுவதற்கும், சில கலைத் திறமைகளும், நல்ல குரல்வளம் போன்ற அரிய வரங்களும் தலைமுறை தலைமுறையாக தொடர்வதற்கும் இந்த மரபணுக்களே காரணமாகும். அவ்வாறே பரம்பரையினூடாக இம் மரபணுக்களினால் காவிச் செல்லப்படும் நிறக்குருடு, குருதி உறையாமை போன்ற நோய்களும் காணப்படுகின்றன. அவையே பரம்பரை நோய்கள் (Genetic Diseases) எனக் குறிப்பிடப் படுகின்றன.

**ப.முரளிதரன்**



ஓர் குறிப்பிட்ட இனத்தில் அல்லது பரம்பரையில் பிறக்கும் மனித உடல் தொடர்பான செய்திகள் மரபணுக்கள் மூலம் தலைமுறைகளினூடாக தொடர்வதைப் போன்றே அக்குறிப்பிட்ட இனத்தின் அல்லது பரம்பரையின் வாழ்க்கைமுறை தொடர்பான செய்திகளும் தொடர்கின்றன.

இவையே பாரம்பரியம் என்றும், பண்பாடென்றும், நாட்டுப்புற மரபென்றும், இன்னும் பல சொற்களாலும் குறிப்பிடப்படுகின்றது. சமய நம்பிக்கைகளும், சடங்குகளும், வாழ்க்கை முறைகளும், வேட்டையாடுதல், விவசாயம், சேமித்தல், உபசரித்தல், தற்காப்பு, பொழுது போக்கு போன்ற அத்தனை செய்திகளும் தலைமுறைகளினூடாக கடத்தப்படுகின்றன. இவற்றைக் காவிச்செல்ல எம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட கருவிகளையே நாம் இன்று கலைகள் என்று போற்றுகின்றோம்.

கலை என்றால் என்னவென்பதற்கு பல்வேறு முறைகளில் விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. கலை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு என்று உளவியலாளர்கள் கூறுவர். நாம் காண்பதை மட்டுமல்ல உணர்ந்ததையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஓர் உத்தியே கலை எனவும் கூறலாம். பொதுவாகக் கலைகள் அதனைப் படைப்பவர்களுக்கும், அக்கலையை இரசிப்பவர்களுக்கும் மனதிற்கு மகிழ்ச்சி தருவதுடன் பல்வேறு வகையான செய்திகளையும், அறிவுரைகள், நற்பண்புகள், பண்பாட்டு விழுமியங்கள், அறிவியல் போன்றவற்றை பரப்புவதற்கும் ஏதுவாக அமைகின்றன. நாம் எதனைப் போற்றிப் பாராட்டுகின்றோமோ அதுவும் கலையாகிறது. எனவேதான் வெறுமனே பார்த்து இரசிப்பதனை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு



படைக்கப் படுவதனைவிட இரசிகர்களை சிந்திக்கத் தூண்டும் படைப்புகள் காலம் காலமாக நின்று நிலைத்து பாராட்டைப் பெறுகின்றன. கலை காலத்தால் அழியாதது எனும் பெருமையைப் பெற்றதும் இவ்விதம் தான்.

நாலு வேதம், ஆறு சாத்திரம், பதினென் புராணம், அறுபத்துநாலு கலைஞானம் என்பது பழந்தமிழ் இலக்கிய பாகுபாடாகும். "ஆயகலைகள் அறுபத்திநான்கு" என கம்பர் குறிப்பிடுவதும் இதனைத்தான். அந்த அறுபத்தி நான்கு கலைகளும் எவையென்பதனை இங்கு குறிப்பிடுவது இக்கட்டுரைக்கு அத்தனை அவசியமானதல்ல, எனினும் நாம் பொதுவாகக் கலைகள் என்பதால் விளங்கிக்கொள்ளுவதை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. நிகழ் கலைகள்: (நடனம், இசை, நாடகம், கூத்து, பொற்பொறிவு, தற்காப்பு கலை போன்றவை)
2. எழுத்துக் கலைகள் (கதை, கவிதை, கட்டுரை, நாடகம் போன்றவை)
3. கட்புலக் கலைகள்: (ஓவியம், சிற்பம், புகைப்படம், கட்டடக்கலை போன்றவை)
4.கட்புலனாகாக் கலைகள்: (மருத்துவம், மாந்திரீகம், சூனியம் போன்றவை)

கலை என்பது ஓர் பணிபு எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும் அங்கு ஓர் படைப்பாளியாக மனிதன் நிச்சயம் தொடர்புபட்டிருப்பதனைக் காணலாம். மனிதனால் ஆக்கப்படாத எதனையும் நாம் கலை என்று குறிப்பிடுவது கிடையாது. நாம் வாழும் சூழலில் எம்மைச் சுற்றி ஏராளமான அழகிய பொருட்கள் இயற்கையாகவே காணப்படுகின்ற போதும் இயற்கையின் அழகை நாம் கலை என்றோ கலைப் பொருள் என்றோ குறிப்பிடுவதில்லை. வானத்திரையில் மேகத் தூரிகைகள் தீட்டும் அற்புத ஓவியங்களோ, கடலின் தாளத்திற்கு கரை

> கூத்தென்று ஓர் தனியிடம் காணப்படுகின்றது. கூத்து என்பது நடிப்புக்கலையையும், ஆடற்கலையையும் உள்ளடக்கியது என்பதால் இச்சொல் நாடகம் - நாட்டியம் இரண்டுக்கும் பொதுவானது. பழந்தமிழர் வாழ்வில் இறைவழிபாடு மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த வேளையில் அவர்கள் ஆடியும், பாடியும் இறைவனை வழிபட்டதே கூத்தின் சிறப்பு.

யில் ஆடும் அலைகளின் அதிசய நடனமோ அல்லது காட்டு மரங்களிலிருந்து மீட்டப்படும் சில்வண்டுகளின் ரீங்கார இசையோ கலை என்று போற்றப்படுவது கிடையாது. அன்றலர்ந்த ரோஜாப் பூ ஓர் கலைப்படைப் பன்று, மாறாக அதனை ஓவியமாகத் தீட்டினாலோ, ஒளிப்படம் எடுத்தாலோ கவிதையாகப் பாடினாலோ அது கலையாகிறது. ஓர் படைப்பாளியின் கைவண்ணத்தில் பிறப்பதே கலையாகும்! ஓர் உன்னதக் கலைப்படைப்பின் பெருமையெல்லாம் அதனை ஆக்கிய கலைஞனையே சென்றடைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. எனினும் அம்மாபெரும் கலைஞன் வாழும் சூழலும், அக்கலைஞனைச் சுற்றி நடப்பவையும், சூழலிலும் அக்கலைஞனின் உள்ளதிலும் ஏற்படும் மாற்றங்களும் கலைப்படைப்பின் தரத்தினை தீர்மானிப்பதில் அளப்பரிய பங்கினை வகிக்கின்றன.



சுமார் நானூற்றி ஐம்பது கோடி (4.54 Billion) வருடங்களுக்கு முன்பு உருவாகியதாக கணிக்கப்பட்டுள்ள இப் பூமி முதற்கொண்டு 200,000 வருடங்களுக்கு முன்னர் தோன்றி இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதகுலம் உட்பட இங்குள்ள அனைத்து உயிரினங்களும் சடப் பொருட்களும் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உட்பட்டே வந்திருக்கின்றன. மாறிவரும் இவ்வுலகில் மாறாதிருப்பது மாற்றம் மட்டுமே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு கூற்று. ஐம்பூதங்களும் மாறுகின்றன. அவற்றில் உருவாகிய தாவரங்களும், அவற்றை சுகிக்கும் விலங்குகளும் கூட மாற்றத்திற்குட்படுகின்றன. எல்லாவற்றையும் மாற்றியமைக்கவல்ல மனித குலத்திலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. கட்புலனுக்கு வசப்படுபவை மட்டுமன்றி. தத்துவங்கள், கோட்பாடுகள், பண்பாட்டு நெறிகள், வழி பாட்டு முறைகள், கலாசார விழுமியங்கள், கலை மரபுகள் என கட்புலனாகாதவை கூட இம் மாற்றங்களுக்கு தப்பியதில்லை.

ஒன்றிலிருந்து இன்னுமொன்றாகப் போதலே மாற்றம் எனப்படுகிறது. எமது மூதாதையர் மரபு வாழ்க்கையிலிருந்து தரை வாழ்க்கைக்கு மாற முற்பட்டபோதே நாகரீகம் வளரத் தொடங்கியது. தமக்கான கலை கலாசார மரபுகள் தோற்றம் பெற்றதிலும், மெருகூட்டப்பட்டதிலும் மாற்றத்தின் பங்கு இருந்தே வந்திருக்கிறது. கலை கலாசார மரபுகளின் மாற்றத்திற்குப் பிரதானமாக புதிய கண்டுபிடிப்புக்கள், நவீனமயமாதல், தொழில்மயமாதல், நகரமயமாதல், கலாசாரப் புரட்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி, மேற்கு நாடுகளின் காலணித்துவ ஆட்சி மற்றும் மேற்கத்தைய கலாசாரக் கலப்பு போன்ற பல்வேறு காரணிகளைக் கூறலாம்.

மாற்றம் நல்லது என பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பினும் மாற்றத்தின்

விளைவுகள் அல்லது மாற்றம் ஏற்படுத்தும் தாக்கங்கள் எப்பொழுதும் நன்மையானதாக மட்டுமே இருந்ததில்லை.

எல்லா துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும் மாற்றத்தின் நிழல் கலைத்துறையில் குறிப்பாக மட்டக்களப்பின் மரபுக் கலைகளில் படியாமலிருக்க வாய்ப்பில்லை. ஆயின் அது எமது கலை மரபுகளில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது அல்லது ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்டக்களப்பின் மரபுக் கலைகள் எவையெவை என்று பட்டியலிடுவதோ அல்லது அக்கலைகளின் சிறப்பம்சத்தினை விபரிப்பதோ இக்கட்டுரையின் பிரதான நோக்கமன்று. அவ்வரலாற்று முக்கியத்துவப் பணியைப் பல்வேறு அறிஞர்களும், ஆய்வாளர்களும் ஏலவே செய்து முடித்துவிட்டனர். மழையில் நனைந்து கொண்டு அந்த ஆனந்தத்தை அனுபவித்தபடியே மழையை அறிந்து கொள்வது ஒரு வகை. யன்னலோரம் அமர்ந்தபடி மழையைப் பார்த்து இரசித்து புரிந்து கொள்ளுதல் இன்னுமொரு வகை. இரண்டாவது வகை அணுகுமுறையினூடாகவே மீதிக் கட்டுரையை தொடர்வோம்.

வரிவடிவத்தில் படைக்கப்படும் "இயல்", ஒலி வடிவத்தில் பாடப்படும் "இசை" மற்றும் உடல்மொழியால் வெளிப்படுத்தப்படும் "கூத்து" ஆகிய முத்தமிழ் கூறுகளில் மட்டக்களப்பின் மரபுவழி வந்த கலையாக கூத்துக் கலையே பிரதான இடத்தை வகிக்கிறது. மட்டக்களப்பின் பாரம்பரிய கலைகளில் கரகம், கோலாட்டம், கும்மி, வயல்வெளிப் பாட்டுகள், மீனவர் பாடல்கள், கொம்புமுறி போன்ற பல்வேறு வகைகள் காணப்பட்ட போதிலும் கூத்திற்கென்று ஓர் தனியிடம் காணப்படுகின்றது. கூத்து என்பது நடிப்புக்கலையையும், ஆடற்கலையையும் உள்ளடக்கியது என்பதால் இச்சொல் நாடகம் - நாட்டியம் இரண்டுக்கும் பொதுவானது. பழந்தமிழர் வாழ்வில் இறைவழிபாடு மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த வேளையில் அவர்கள் ஆடியும், பாடியும் இறைவனை வழிபட்டதே கூத்தின் பிறப்பு.

மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான கூத்து பிரதானமாக கண்ணகி வழிபாட்டினை மையப் படுத்தியே ஆடப்பட்டதெனினும் அது வெறுமனே இறை வழிபாட்டிற்காக மட்டும் தோன்றியதன்று. மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களும், புராணக்கதைகளும், வரலாறுகளும் தலைமுறை தலைமுறையாக அறியப்பட்டு வந்தது கூத்தின் மூலமே. வேளாண்மை, வேட்டையாடுதல் போன்ற சாதாரண வாழ்க்கைமுறைகளும் அவற்றில் சந்திக்கும் இடர்பாடுகளை எதிர் கொள்ளும் தந்திரங்களும் கூத்தின் மூலமே சந்ததி சந்ததியாக கற்பிக்கப்பட்டது. வாகரைப் பகுதிக்கே தனித்துவமான அப்பகுதி மக்களால் இன்றும் ஆடப்படும் "புலிக்கூத்து" ஓர் சிறந்த உதாரணமாகும். காட்டில் வேட்டைக்குச் செல்லும் போது காட்டு விலங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உத்திகளே இதன் கருப்பொருள். அவ்வாறே பொழுது போக்கை மையப்படுத்தி கேலியும் நகைச் சுவையும் கொண்டதாக ஆடப்படும் கூத்துகளும் உள்ளன. மட்டக்களப்பின் சந்தி வெளிப்பகுதியில் ஆடப்படும் ஒருபுறம் முனிவர்களும், மறுபுறம் குறவர்களும் அமர்ந்து மத்திர வித்தைகளால் மோதுவது போன்ற மகிடிக்கூத்து மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் பொழுது போக்குக்கலையாகும். பறைமேளக் கூத்து போன்ற குறிப்பிட்ட ஓர் சாதியினரால் மட்டும் ஆற்றுகை பண்ணப்படும் கலைவடிவங்களும் காணப் படுகின்றன.

இப்பிரதேசத்தில் மூன்று தசாப்தமாக இடம்பெற்ற கொடிய யுத்தம் இப் பாரம்பரியக் கலைகளை வளர்ப்பதிலும் இளம் சந்ததியினருக்குக் கற்பிப்பதிலும் பாரிய சவால்களை ஏற்படுத்தியிருந்ததை எவரும் மறுப்பதற்கில்லை. நான்கு இளைஞர்கள் ஒன்றாய்க் கூடுவதே உயிரைப் பணயம் வைப்பதற்குச் சமன் என்றிருந்த காலகட்டத்தில் முற்றுமுழுதாக ஒரு தலைமுறையே இப்பாரம்பபரியக் கலைகளின் தொடர்ச்சி அறுந்த நிலையில் காணப்படுகின்றதென்பதே யதார்த்தம். அன்றைய உணவிற்கு அதே நாள் வருவாயை மாத்திரம் நம்பியிருக்கும், பொருளாதார ரீதியில் மிகவும் நலிந்த நிலையி

லுள்ள அதே கிராமப்புற மக்கள் தான் இக்கலைகளைச் சாவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்கும் பாரிய பொறுப்பையும் சுமக்கின்றனர். பயிற்சியின் போது ஏற்படும் தினசரி செலவுகளுக்கே திண்டாடும் நிலையில் இக்கலைகளை மேடையேற்றும் செலவுகள் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மேலும் இக்கலைகளைப் பயில வேண்டிய இளம் சமுதாயத்தினரின் இரசனையும், ஆர்வமும் வேறு ஒரு தளத்தில் காணப்படுவது மற்றுமொரு சவால். சினிமாப் படங்களும், தொலைக்காட்சி நாடகங்களும், முகப்புத்தகம் *(FaceBook)* போன்ற சமூக வலைத்தளங்களும், மட்டைப்பந்தாட்டமும் *(Cricket)* அவர்களின் பிரதான ஆர்வமாகக் காணப்படும் இன்றைய நவீன காலகட்டத்தில் கூத்துப் பழகவும், இசை பயிலவும் எத்தனை பேர் முன்வருவார்கள்? உலகின் எந்தவொரு மூலையிலும் நடக்கும் நிகழ்வுகளையும் காணொளியாக *(Video)* சேமித்து வைத்திருக்கும் மிகவும் பிரபல இணையத்தளமான "யு டியுப்" *(You Tube)* தளத்தில் இன்றைய திகதியிலுள்ள அனைத்துக் காணொளிகளையும் ஒருவர் சோறு தண்ணீர் கூட இல்லாமல் அமர்ந்து பார்த்து முடிப்பதென்றாலும் சுமார் 600 வருடங்கள் தேவைப்படும் என்கிறது ஓர் ஆய்வு. கவிதை வாசிக்கவே நேரம் இல்லாமலிருக்கும் பரபரப்பான இவ்வுலகில் கவிதை எழுதுவதற்கு எங்கே நேரம் இருக்கப்போகிறது?

பறை அடிப்பவர்கள் தீண்டத் தகாதவர்கள் போன்ற மனப்பாங்கு உள்ள இச்சமூகத்தில் பறைமேளக் கூத்து போன்றவற்றைப் பழகுவதையும் அரங்கேற்றுவதையும் புதிய தலை முறையினர் தவிர்க்கத்தான் செய்வார்கள். இது போன்ற யதார்த்தங்களும் மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகள் மருவி வருவதற்கான மற்றுமொரு காரணம். பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்கால நிரந்தர வருமான நோக்கில் தொழில் முறைக் கல்வியையே முன்னுரிமைப் படுத்துவதோடு பிள்ளைகள் தாமாகவே கலைகளின் பக்கம் ஈர்க்கப்பட்டாலும் கூட



பரீட்சையில் சிறந்தபெறுபேறுகள் பெறுவ தனைக் கருத்திற்கொண்டு பிள்ளைகளின் கலையார்வத்தைக் கலைத்துவிடும் நில மைகளும் குறிப்பாக நகர்ப்புறங்களில் காணப்படுகின்றன.

கால மாற்றத்தாலும் நவீன கருவி களின் வருகையாலும் சில கலை வடிவங்க ளின் தேவைகள் மங்கிவிட்டன. சித்திரப் பிரதிமை (Portrait) என்பது ஓவியக் கலையின் ஓர் உன்னத வடிவமாகும். ஒரு நபரின் முகத்தை அப்படியே அவரின் அந்தக் கணத்தின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக (Mood) வரைவது சித்திரப் பிரதிமை எனப்படும். நாட்கணக்கில் வரையப்படும் இக்கலை வடிவத்தில் நவீன ஒளிப்படக் கருவிகளின் வருகை மிகப்பெரும் தாக்கத் தினைச் செலுத்தியிருக்கிறது. மின்னல் வெட்டும் நேரத்தில் படமெடுத்து விடலாம். இடி முழங்கிமுடியுமுன் பிரதியெடுத்துவிடலாம் அவ்வாறே மாதக் கணக்கில் இராட்சத அளவில் வரையப்பட்டுவந்த விளம்பர ஓவியங்களும் சினிமா பதாதைகளும் (Cut-out) கணணியின் துணையுடன் சில மணித்தியாலங்களில் சாத்தியமாகின்றன. அடுத்த தலைமுறையில் இப்படிப்பட்ட கலைஞர்களைக் காணக்கிடைக்காது என்பது ஓரளவு உறுதியாகிவிட்டது.

இவ்வாறு பல்வேறு சவால்கள் காணப்படினும் மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகள் முற்றுமுழுதாக முடங்கிப் போய் விடவில்லை. கலாசார அமைச்சும், பிரதேச செயலகங்கள் தோறும் உள்ள கலாசார உத்தியோகத்தர்களும், கிராம மட்ட கலைக் குழுக்கள், கலாசாரச் சங்கங்கள், மூத்த கலைஞர்கள், கிழக்குப் பல்கலைக்கழக சமூ கத்தினர், கலையார்வலர்கள் என பல்வேறு மட்டங்களில் இன்று இக்கலைகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வேலைத்திட்டம் இடம்பெற்று வருவதனைக் காணலாம். எந்த மாற்றங்கள் எம் கலைகளில் தாக்கம் செலுத்துகின்றனவோ அதே மாற்றங்களை ஊக்க சக்தியாக மாற்றி கலைகளை வளர்ப்பதே புத்திசாலித்தனம். நவீன தொழில் நுட்பங்களையும், கருவிகளையும், கணணிப் பயன்பாட்டையும், இலத்திரனியல் ஊடகங் களையும், சமூக வலைத்தளங்களையும் ஒதுக்கிவிட்டு எம் கலைகளை வளர்ப்பதென்பது இனிவருங் காலங்களில் சாத்தியப்படாது. எமது கலை மரபுகளைக் காலக்குதிரையின் முதுகின் மீது ஏற்றிவிடாமலும் அதே வேளை அதன் கடிவாளத்தை விட்டுவிடாமலும் அதற்குச் சமாந்தரமாகப் பயணிக்கவேண்டிய கடப் பாடு ஒவ்வொரு கலைஞனுக்கும் உண்டு.

கவிதைகளும், கட்டுரைகளும் இணையத்தில் ஏறிவிட்டதனால் இன்று பலரைச் சென்றடைகிறது. இசையும், நாடகமும் ஒலி ஒளி வடிவங்களாக பதிவு செய்யப்பட்டு கணணி மூலம் தொகுக்கப் பட்டு வெளியிடப்படும் போது கூடு தல் வரவேற்பைப் பெறுகின்றன. ஒலி வாங்கிகளும், ஒலி பெருக்கிகளும் கண் ணைக் கவரும் பல வர்ணங்களில் பாய்ச்சப்படும் ஒளி வெள்ளமும் இன்று மேடை நிகழ்வுகளுக்குக் கூடுதல் பெறு மதி சேர்க்கின்றன. ஒலிபெருக்கும் சாதனங்களின் வருகை மேடையில் தோன்றும் கலைஞன் சாதாரண குரலில் பேசுவதையோ அல்லது பாடுவதையோ அரங்கின் பின்வரிசைப் பார்வையாளன் வரை கொண்டு சேர்ப்பதினால் மேடைக் கலைஞனின் பணி இலகுபடுத்தப்படுகிறது. அந்நாட்களில் மங்கிய ஒளியில் மேடையில் தோன்றும் கலைஞனின் முகபாவங்கள் தூர த்திலிருக்கும் பார்வையாளனுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக முகத்தில் சற்று தூக்கலாக ஒப்பனைக் கலைஞர்கள் தம் கைவரிசையைக் காட்டியிருப்பர். இதனால் அருகிலிருந்து ஒருவரையொருவர் பார்க்கும் சக கலைஞர்கள் தம்மையறியாமல் சிரித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு. சற்றுக் கூடுதலாக கண்மையை அல்லது உதட்டுச்சாயத்தைத் தீட்டியிருக்கும் ஒருவரைப் பார்த்து "கூத்திற்கு வேடமி ட்டதைப் போன்று" எனும் கேலி இன்றும் எம்மத்தியில் இருக்கிறது. ஆனால் தற்பொ ழுது மேடை நிகழ்வுகள் பெரும்பாலும் பிரகாசமான வெளிச்சமும் சமகாலத்தில்

உருப்பெருக்கி இராட்சதத் திரைகளில் ஒளிபரப்பப்படும் வசதிகளைக் கொண்ட அரங்குகளில் நிகழ்த்தப்படுகின்றன. எனவே யதார்த்தமான அழகான ஒப்பனைகள் தற்பொழுது சாத்தியமாகியிருக்கின்றன. ஒளியமைப்பினால் மேடையின் கட்புலனாகும் பகுதிகள் தற்பொழுது கட்டுப்படுத்தப் படுகிறது. எனவே அரங்கின் வெளிச்சமான பகுதியில் நிழ்வுகள் அரங்கேறிக்கொண்டி ருக்கும் போது இருளான பகுதியில் அடுத்த காட்சிக்கான தயாரிப்புகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இதனால் தற்பொழுது திரை திறந்து மூடுதல் எனும் செயற்பாடு அற்றுப் போனதுடன் நேரத்தை சேமிக்கவும் உதவுகின்றது.

நவீன தொழில்நுட்ப வசதிகள் எமது பாரம்பரியக் கலைகளைப் பழகு வதிலும், அரங்கேற்றுவதிலும் மாத்திரம் கைகொடுக்கவில்லை, மாறாக அவற்றை ஆவணப்படுத்துவதிலும், பிற நாடுகளில் - பல சமூகத்தினரின் மத்தியில் சிறப்பம்சங்களை எடுத்தியம்பவும் பயன்படுகின்றன. கடந்த 11/04/2014 அன்று பேராசிரியர் மௌனகுரு அவர்களின் இராவணேசன் கூத்து சிங்கப்பூர் நகரில் காணொளிக்காட்சியாக அரங்கேற்றப்பட்டதுடன் இலங்கைத் தமிழ் கூத்துக்களும் அது நாடகமாக வளர்ந்த வரலாறு பற்றியும் இராவணேசன் கூத்து தயாரிப்பைப் பற்றியும் பேராசிரியரினால் ஓர் அறிமுகம் வழங்கப்பட்டது. இவ்வாறான விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளின்றி ஓர் கலையின் ஆயுளை நீடிக்க முடியாது. ஒரு கலையை படைப்பவனின் உத்திகளும் சிந்தனைகளும் மெருகேற அதற்கேற்றாற் போல் பார்வையாளனின் இரசிப்புத்திறனும் வளரவேண்டியது அவசியமாகிறது. அந்தவகையில் பார்வையாளனைத் தயார்படுத்தும் பொறுப்பும் கலையைப் படைப்பவனையே சாரும். இவ்வாறு நவீன தொழில்நுட்ப வசதிகளையும் வாய்ப்புக்களையும் உள்வாங்கிக் கொண்டு இக்கலைத்துறையில் ஈடுபடுபவர்கள் எமது பாரம்பரியக் கலைகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இசை மற்றும் நாடகக் துறைகளைப் பொறுத்தமட்டில் இத்தொழில் நுட்பப் பயன்பாடுகள் அக்கலைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுதுவதில்லை. ஆனால் அக்கலைகளைப் பார்வையாளனிடம் கொண்டு சேர்க்கும் உத்தியில் தான் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக நவீன தொழில்நுட்பங்களின் ஆதிக்கத்தினால் கூத்தின் பிரதான அம்சங்களான களரி கட்டுதலோ, பின்பாட்டுக்காரர்களோ, இசைக் கருவிகளோ, கட்டியங்காரர்களோ ஏன் ஆடை அணிகலன்களோ கூட மாறிவிட வில்லை. இவ்வாறு மாறாமல் மரபைப் பேணுவது அக்கலையில் ஈடுபடும் ஒவ் வொரு கலைஞனதும் கடமை.

நன்னூல் நூற்பா எண்: 387 இல் மரபு என்பது என்னவென்று இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும் என்பதே இதன் பொருள். உதாரணமாக பசு ஈன்றதைக் "கன்று" என்றும் நாய் ஒலியெழுப்புதலை "குரைத்தல்" என்றும் கூறுவது மரபு. பசுவின் பிள்ளையென்றோ அல்லது நாய் பேசியதென்றோ கூறுவது மரபு அல்ல. சொல்லையும் பொருளையும் மட்டும் அல்லாது அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் படைத்த கலைகளையும் அவ்வாறே பின்பற்றுவது தான் மரபு. இன்று நேரமின்மை காரணமாகவும், இடப்பற்றாக்குறையினாலும், போதிய தெளிவின்மையினாலும் எமது கலை கலாசார நிகழ்வுகள் சில மரபை மீறியதாகவும் நிகழ்த்தப்படுகின்றன. நாட்டியக் கலையில் பின்பாட்டுக்காரர்கள் ஓர் முக்கிய அங்கமாகும். ஆனால் சில மேடை நிகழ்வுகளில் பின்பாட்டுக்காரர்களைக் காணக்கிடைப்பதில்லை. அவர்களின் இடத்தை இசைத்தட்டுக்களும் இசை நாடாக்களும் ஈடுசெய்கின்றன. ஆனால் அவை எமது மரபல்ல.


முற்றத்திலிட்ட அரிசிமாக் கோலம் இன்று அச்சடிக்கப்பட்டு ஒட்டும் வடிவி லிருக்கிறது. வாசலில் தொங்கும் மாமாவிலைத் தோரணம் கடதாசியில் வந்தாயிற்று. விற கடுப்பு மூட்டி வாசலில் வைத்ததைப் பொங்கல் பானை சமையல் அறைக்குள் சென்று எரிவாயு அடுப்பில் ஏறிவிட்டது. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் நிலவும் இடப்பிரச்சினை மற்றும் பரபரப்பு வாழ்க்கை போன்றவை இந்நிலைக்குக் காரணமாக இருப்பதுடன் அதைத் தவறென்றும் கூறமுடி யாது. இருப்பினும் அது எமது மரபல்ல.

யோ.நிசந்தராசன், (நாடகமும் அரங்கியலும் - சிறப்புக்கற்கை) என்பவர் தனது "பறை மேளக்கூத்தும் அதன் இன்றைய நிலையும்" எனும் கட்டுரையில் பின்வருமாறு தனது ஆதங்கத்தை வெளிப் படுத்துகிறார்.

"பறைமேளக்கூத்தினுடைய மரபுத் தன்மைகள் மாற்றமடையாமல் ஆற்றுகைகள் இடம்பெறுதல் வேண்டும். ஆனால் இன்று படித்தோர் மட்டங்களிலே நவீனத்துவ சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு பாரம்பரியக் கலைகளை மாற்றுவது ஒரு மனம் வருந்தத் தக்க செயற்பாடாகவே அமைகின்றது. கடந்த 2011 பங்குனி 25, 26, 27ஆம் திகதி களிலே யாழ்ப்பாணத்திலே இடம் பெற்ற இசை விழாவிலே பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இவ்விழாவில் பறைமேளக் கூத்தானது மட்டக்களப்பு விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவக நாடகத்துறை மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சொர்ணாலி என்ற வாத்தியக் கருவி வாசிக்கப்படவில்லை. அத்தோடு உடையமைப்பு பரதநாட்டிய பாணியில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அத்தோடு இதன் ஆட்டமுறைகள் கூத்துடனும், கண் டிய நடனங்களுடனும் தொடர்புபட்டனவா கவே இருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் பாரம்பரியத்தன்மைகளினை மீறுவதாகவே இருக்கின்றது."

இவ்வாறான மரபை மீறும் செயற் பாடுகள் தொடருமேயானால் நிச்சயமாக அடுத்து வரும் சந்ததியினரிடம் நாம் எமது அடையாளங்களைத் தொலைத் தவர்களாகவே வாழ்வோம்.

"பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக்கொள் ளப்பட்ட நியதியே மரபு" (Tradition) என்கி றது தமிழ் அகராதி. மரபின் முக்கிய அம்சங்களே பழமையைப் பேணுதலும், எம் முன்னோர்கள் சொன்னதைக் கண்ணெனப் போற்றுதலும்தான். ஏனெனில் எமது முன் னோர்கள் கண்டறிந்து சொல்லிய உண்மை களும் நன்மைகளுமே தலைமுறை தலை முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இன்று மரபாக நிலைத்திருக்கின்றது. மரபுக் கலைகள் என்பவை எமது முன் னோர்கள் பயணம் செய்த பாதைகள். மனப்பாரங்களை இறக்கி வைக்க அமைக் கப்பட்ட சுமைதாங்கிகள். வாழ்கையின் வாசலை அலங்கரிக்க அவர்கள் கட்டிய அழகிய தோரணங்கள். எமது வாழ்க்கையை அவ் அழகிய பாதையினூடே பயணிக்க நாம் கடமைப்பட்டவர்கள். பாதையை செப்பனிடுவதும் அலங்கரிப்பதும் இன்றைய காலத்தின் தேவையாக இருக்கலாம், ஆனால் பழமை மாறாதிருப்பதை அத்த னை கலைஞர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளுவது அவசியமாகும். நவீனத்துவச் சிந்தனைகள் கலைத் தோரணங்களைக் கலைத்துவிடக்கூடாது என்ற எண்ணம் படைப்பாளிக்கும் இருக்கவேண்டும். பார்த்து இரசிப்பவர்களுக்கும் வரவேண்டும்.
கால மாற்றத்தில் கலைகள் பயணிக்கும் வாகனமும், வேகமும் மாறட்டும். ஆனால் கலை மரபுகள் மாறாதிருக்கட்டும்!



# உணர்வுகளின் உதிப்புக்கள்

கலாபூஷணம். பொன். தவநாயகம்

1. ஆளும் வாழ்வு
உள்ளமது மலர்கின்ற கமலமானால்
உணர்வுகளோ மணக்கின்ற கொள்கையாகும்
எள்ளளவுங் குறைவின்றி எட்டும்வாழ்வில்
ஏற்றமுறும் பாராட்டு இணைவிலாகும்.

2. தடைதாண்டல்
வீழ்வதுவு மெழுவதற்கே என்னும் உண்மை
விளங்கிவிடின் மனிதனுக்கு வீழ்ச்சியில்லை
தாழ்வதுவு முயர்விற்கே என்று எண்ணித்
தடைதாண்டி முன்னேறின் தலைமை வாழ்வே!

3. ஓரமாகும் ஒருவன்
குளக்கரையில் நிற்கின்ற கொக்குப்போலக்
குறிக்கோளில் கண்ணானால் கூடும் வெற்றி
உளக்கறையில் நிற்கின்ற ஒருவனென்றும்
ஒறுக்கின்ற மனிதனென ஓரமாவான்.

4. கொடியவர்கள்
கடிநாய்க்கும் சோறிட்டால் காணும்வேளைக்
கருணையொடு வாலாட்டும் கலக்கம்நீங்கக்
கொடையீந்தோர் தமைமறக்குங் கோலமானோர்
கொடியவரா மவர்காணல் கொடுமையம்மா!

5. இவனும் மாண்டவனே!
ஆண்டவனை மதிக்காது அநீதிநாடி
அறவாழ்வைப் புறக்கணிக்கும்
அகந்தைகொண்டோன்
மாண்டவனாய் மதித்திடுவர் மக்கள்போற்றும்
மானிடனாய்ப் பிறந்தபயன் மண்ணாமன்றோ!

6. நடைப்பிணம்
பணக்காரன் ஏழைக்குப் பரிவுகாட்டாப்
படாடோபம் பட்டுடையில் பாடையேறும்
பிணமாவான் நடமாட்டம் பேயின்காட்டுப்
பிரயாணம் புரிந்தவர்க்குப் பிழையா வாழ்வே!

7. ஊழின் மகன்
வாழ்வளித்த மாதாவை வரித்தாளுக்க
வயோதிபரின் மடத்தினிலே வலிந்து சேர்க்கும்
ஊழளித்த மகனாவான் உகுக்குங்கண்ணீர்
உலர்வதன்முன் நீழ்துயிலின் உணர்விலாவான்.

8. வேறு
இனத்தரத்தில் நாய்நரிகள் இணைவி
லொன்றாய்
இருந்தாலும் குணநலத்தில் இரண்டும் வேறாம்
மனத்தரத்தில் பெயர்கொண்ட மனிதன் நாளும்
மாறுகிறான் வாழ்வதனை மாற்றிக் கொண்டான்.

9. ஆளுமின்பம்
விடியலுக்குத் தலைகொடுத்த வேதம் பொய்த்து
விடுவதில்லை எடுபிடிகள் வீழ்ந்து போக
அடிமையிருள் அகன்றுவிடும் ஆட்சி கொள்ளும்
ஆதவனும் தோன்றிடுவான் ஆளும் இன்பம்.

10. பாரினாட்டம்
மழைமுகிலைக் கண்டுமயில் மகிழ்வி லாடும்
மதிவரவைக் கண்டுஅல்லி மலர்வி லாடும்
பழமைகிளர் வழியினிலே படையாய் மக்கள்
பகைமுடிப்ப ரதுகண்டு பாரே யாடும்.

முத்தமிழ் விழா திறந்த மட்ட கவிதைப்போட்டியில் முதலாமிடம் பெற்ற கவிதை



# மண்முனை வடக்கு பிரதேசத்தில் நவீன கவிதை : மரபும் மாற்றமும்

மட்டக்களப்பு (அம்பாறை உள்ளிட்ட) மாவட்ட நவீன கவிதை ஏறத்தாழ ஐம்பதுகளில் முகிழ்த்தபோது முன்னோடிக் கவிஞர்களாக விளங்கியோரில் முதன்மையானவர் நீலாவணன் என்பது இன்று வரலாறாகி விட்ட தொன்று. அன்னார் ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் முக்கியமானவரென்பதும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றுதான். இதே காலப்பகுதியிலே கவிதை எழுத முற்பட்ட ஏனையோருள் முக்கியமானதொருவர் திமிலை துமிலன் அவரோடு திமிலைக் கண்ணன், திமிலை மகாலிங்கம் ஆகிய அவரது சகோதரர்களும் அடங்குவர். மண்முனை வடக்குப் பிரதேசம் சார்ந்த திமிலைத் துமிலனே இன்று மட்டக்களப்பு மாவட்ட (அம்பாறை தவிர்த்து) நவீன கவிதை முன்னோடிகளுள் முதன்மையிடம் பெறுபவராகத் திகழ்கின்றார். இன்றுவரை ஓயாது எழுதிக் கொண்டிருக்கும் திமிலைத் துமிலன் சமூக, காதல், மொழி முதலான பல விடயங்களையும் கவிதைப் பொருளாக்கியவர். மரபுக்கவிதை வடிவங்கள் பலவற்றை அநாயாசமாகக் கையாண்டு வருபவர். மாதிரிக்காக, "நாளை பிறப்பது நம்முலகை" என்ற கவிதையின் ஓர் பகுதி இங்கே தரப்படுகின்றது.

ஆழிப் புதையலை மேழிக் கரத்தினால்
அள்ளிக் குவிக்க அனற்குளிக்கம்
ஏழை உழவனைத் தேடிக் கலயத்தை
ஏந்தி நடக்கிறாள் செங்கமலம் - அவள்
தோழமை கொண்டநற் காதற் கொழுநனின்
தோளிலே தங்கக் குவைமிதக்கும் - பெரு
நாளை நினைத்தவள் கீதம் இசைக்கிறாள்
நாளை பிறப்பது நம்முலகு!

கட்டி இரும்பைக் கனலிற் கொழுத்தியே
காய்ச்சி அடித்துக் கனியவைத்து
வெட்டிட மண்வெட்டி, கத்தி, கொழுவிவை
வேர்வையை ஊற்றி மிகப்படைத்தும், - குடல்
ஒட்டியபள்ளம் நிமிரவில்லை, கூரை
ஓட்டை மழையும் ஓயவில்லை அவன்
நட்பில் உருகிடும் நாகி சொல் வாள் இது
நாளை பிறப்பது நம்முலகு !

ஐம்பதுகளிலே ஈழத்துக் கவிதையின் முக்கியபாடு பொருளாகியது மொழி உணர்ச்சி. இத்தகைய கவிதைகள் புனைந்தவருள் ஒப்பீட்டுரீதியில் கிழக்கிலங்கைக் கவிஞர் களே கணிசமானவர்கள். இத்தகைய கவிஞர்களுள் தலைமையானவர் என்று கூறிப்பிடக் கூடியவர் கவிஞர் காசி ஆனந்தன். தமிழ்நாட்டிலும் பரவலாக அறியப்பட்ட, இன்று வரை எழுதிவருகின்ற கவிஞர் காசி ஆனந்தனின் ஆரம்பகாலக் கவிதையொன்றின் ஆரம்பம் இவ்வாறு

பேராசிரியர் செ. யோகராசா

அமைகின்றது.

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - என்றன்
கட்டுடல் வளைந்து கை கால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் - வாழ்வு

கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் - மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

கவிஞர் காசி ஆனந்தனின் மெல்லிசைப்பாடல்களும், போர்க் காலப் பாடல்களும் வெகு பிரசித்தமானவை மேற்கூறிய விடயம் பற்றி எழுதிய ஏனையோருள் பரவலாக அறியப்படாத இருவருள்ளனர். இவர்களிலொருவர் சி.மௌனகுரு மற்றொருவர் செங்கதிரோன். இவர்களுள் முன்னவர் தற்போது கவிதை எழுவதில்லை. மற்றையவர் அரிதாக எழுதி வருகின்றார்.

இக்காலப் பகுதியிலெழுதத் தொடங்கி, "எழுதாத விடயங்களில்லை" என்னுமளவிற்கு தொடர்ந்தும் இன்றுவரை எழுதி வருபவர் செகுணரத்தினமாவார். மரபுக் கவிதை வடிவங்களோடு நாட்டார்பாடல் வடிவங்களையும் செம்மையாகக் கையாள்கின்ற ஆற்றலுள்ள இப்பிரதேசக் கவிஞர்கள் சிலருள் இவருமொருவர். வாழ்வியல் அவலங்களை கூர்மையாகச் சித்தரிப்பது இவரது தனித்துவம் என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக அமைகின்றது பின்வரும் கவிதைப் பகுதி:

இரக்கம்

எங்களது வீட்டிற்கு
இடப்பக்கம் ஒழுங்கை!
அந்த அந்த ஒழுங்கைக்கு
அருகிலே ஓர்குடிசை!
சின்னக் குடிசையது
சிறகொடிந்த பறவையைப்போல்...
வந்துநின்று பாருங்கள்
வடிவாகத் தெரிகிறது!

அறுபதுகளிலே ஈழத்துக் கவிதையுலகில் முற்போக்குக் கவிதைகள் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கின. இவ்விதத்தில் ஈழத்தில் முக்கியம் பெற்றுள்ள கவிஞர்களுள் இருவர் மண்முனை வடக்குப் பிரதேசத்தை சார்ந்தவர்கள். இவர்களிலொருவர் சுபத்திரன்.

சுபத்திரன் ஏனைய முற்போக்குக் கவிஞர்கள் பலர் போலல்லாமல் சமூக, வர்க்க பிரச்சினைகளை மட்டுமன்றி தனிமனித உறவுகள் பற்றியும் கவிதைபுனைந்திருப்பவர். அவரது புகழ் பெற்ற கவிதைகளிலொன்று "சங்கானைக்கென் வணக்கம்". அதன் ஒரு பகுதியை இங்கு எடுத்தாள்வது அவசியமானது.

சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது யாழகத்து
மண்ணிற் பல காலம்
செங்குருதிக் கடல் குடித்து
செழித்த மதத்துக்குள்
வெங் கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரம் செய்யத்
தளைத் தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்

மேற்குறிப்பிட்டோருள் மற்றொருவர் (சுபத்திரனுடன் நெருங்கிப் பழகியவரான) சாருமதி. தமிழ்த் தேசிய இனமுரண்பாடு. முற்போக்குக் கவிஞர்களை இரு பிரிவினராக்கிய போது, சாருமதி, இன ஒடுக்குமுறைக்கெதிரான தீவிர கவிஞராகத் தன்னை இனங்காட்டியவர். முற்போக்கான கருத்துக்களை வரட்சியாகவன்றி உணர்ச்சிப் பாங்குடன் வெளிப்படுத்தியவர்.

மௌனகுருவும் வர்க்க நோக்கிலான கவிதைகள் சில எழுதியுள்ளார். அதிகமெழுதாவிடினும் கூர்மையான சமூக, அரசியல் விமர்சனப்பார்வை கொண்ட குறிப்பிடத்தக்க முற்போக்குக் கவிதைகளெழுதிய மற்றொருவர் வீ.கே.ஆனந்தன். இவ்விதத்தில் கவனத்துக்குரிய இவரது "கள்ளத் தராசுகளே கவனம்" எனும் கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறமைகின்றது.

கர்த்தரால் அருவருக்கப்படும்
கள்ளத் தராசுகளே
உங்கள் தீர்ப்புக்களே
உன்னதமானவை என்று
உயர்த்தப்படுகின்றன.
நீதிமான்களை குற்றவாளிகளே
விசாரணை செய்யும் போது
உங்கள் தீர்ப்புக்கள்
உன்னதமாவதில் ஒன்றும்
ஆச்சரியமில்லை.

எண்பதுகளின் தொடக்கத்தில் ஈழத்துக் கவிதையின் மரபுகள் பெரும் பாய்ச் சலைக்கண்டன. ஓரளவிற்கு மூன்றாமுலக கவிதைகளுக்கு நிகராகச் செல்லத் தொடங்கின.

புதிய பொருள் மரபுகளுள் முதன்மை யிடம் பெறுவது, தேசிய இனப்பிரச்சனை சார்ந்த விடயமாகும். இது தேசிய இன ஒடுக்கு முறை ஆயுதப் போராட்டம், போர்க்கள நிகழ்வுகள், எழுச்சியூட்டல் எனப் பன்முகப் பரிணாமம் கொண்டது. இத்தகைய கவிதை களை எண்பதுகளில் எழுதிய கவிஞர்களுள் முக்கியமானவர் மூத்த தலைமுறைக் கவிஞர் காசி ஆனந்தன். இவர் இக்காலப் பகுதியில் ஆயுதப் போராட்டத்திலீடுபட்ட "எல்.ரீ.ரீ" இயக்கத்துடன் இணைந்துகொண்டவர். இவ்விடத்தில் மெல்லிசைப் பாடல்களாலும் புகழ்பெற்றவர்.

மேற்கூறிய பொருள் மரபுவழிச்சென்ற புதிய தலைமுறையினருள் அடங்குகின்ற வாசுதேவன், ராஜாத்தி, முதலானோரும் இப்பிரதேசம் சாந்தவர்களே. இவர்களோடு பின்னாள் வந்து இணைந்து கொண்டவர்களுள் மைக்கல் கொலின், பாய்வா முதலானோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

வாசுதேவன் கவிதைகள் எனது தெருவிலும் என்ற கவிதை பலராலும் பாராட்டப்பட்டதொன்று. அது இதுதான்

ஓங்கி மேசையில் குத்தி விட்டு
ஓய்தலுற்றுப் போ!
அலைபாயும் என் ஊற்றே
ஆழத்தில் போய் நீ,
அடங்கு! அடங்கு!
இல்லையெனில்
தின்று
புணர்ந்து விட்டு
பேசாமல் திரிதல் அன்றி
எதையேனும் நான்
செய்துவிட நேர்ந்து விடும்!...

புலம்பெயர்ந்து செல்லாவிடினும் அம் மக்களது துயரை நுணக்கமாகச் சித்தரிக்கும் ஆற்றல் ராஜாத்தியிடம் உள்ளது. உதாரணம்.

**"ஏக்கம்"**

கோரப்பனிக்குளிரில்
உதடுகள் வெடித்து
உதிரம் சொட்ட
உறக்கம் இழந்த அந்த இரவில்
ஸ்ரேலிங் பவுண்களை
எண்ணுகிற போது
உன்னுடைய நினைவுகள்
என்னை ஓலமிட்டு அழவைக்கும்.

திருகோணமலை மாவட்ட போர்க் காலக் கவிதைகளை ஏலவே எழுதியிருந்த மைக்கல் கொலின் தொண்ணூற்றி இரண்டின் நடுப்பகுதியிருந்து இங்கிருந்து தன்னை வெளிப்படுத்துபவர். இவரது கவிதைகளில் காணப்படும் சிறப்பம்சங்களிலொன்று இரு விடயங்களை சேர்த்து எழுவது. (உதாரணம்: காதலும் அரசியலும்) மற்றொன்று பூடகமாகச் சொல்லமுற்படுவது இதற்கான சிறந்த உதாரணம்:

**பயணம்**

இது பயணங்களை முடித்த படகா?
இல்லை
இதுவரை யாரும் பயணிக்காத படகா?
யார் சென்றது இந்தப் படகில்
பத்திரமாய் இடம் சேர்த்த திருப்தியில்
மௌனத் தவம் கொள்கிறதோ
இல்லை
யாருக்காகவோவான காத்திருத்தலோ?...

பாய்வாவின் கவிதைகள், கூரிய சமூக விமர்சனப் பார்வை, அங்கதம், சரளமான ஓட்டம் ஆகிய பண்புகளை அடிநாதமாகக் கொண்டு வெளிப்படுவன. எண்பதுகளின் புதிய பொருள் மரபுகளுள் முக்கியமான பிறிதொன்று, பெண்நிலைவாதப் பார்வை. தமிழ்பேசும் நல்லுலகம் முழுவதற்குமான இந் நோக்கிலெழுந்த சொல்லாததேதிகள் என்ற முதற் (கூட்டத்) தொகுப்பைத் தற்போதுள்ள வரலாற்றுப் பதிவிற்குரியவரான அ.சங்கரியும் இப்பிரதேசத்திற்குரியவரேயாவார். இத்த கைய கவிதைகள் கொண்ட வேறு கூட்டுத் தொகுப்புக்கள் சிலவும் இவரால் வெளி யிடப்பட்டுள்ளன. மாதிரிக்கு பின்வரும் கவிதையைத் தரலாம்:

அவர்கள் பார்வையில்
எனக்கு —
முகம் இல்லை

இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன...

சொல்லாத சேதிகள் வழி தொடர்ந்து சென்ற கவிஞைகளுள் வாசுகி குணரத்தினம், கலைமகள், விஜயலட்சுமி சேகர் (ஏலவே எழுத ஆரம்பித்த) கமலா வாசுகி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வாசுகி குணரத்தினம் எழுதிய கவிதைகளுக்கு எடுத்துக்காட்டாகவுள்ளது இது:

குயில் இருக்கும்
தோப்பை விட
வௌவால்கள் தொங்கும்
மரத்தில் வாசம் செய்யவே
இவள் ஆசைப்படுகிறாள்!
தன் பாதையே தெரியாமல்
தவிக்கின்ற குயிலைவிட
தலை கீழாய் நின்று
கெட்டியாகத் தனது
இருப்பை நிலை நாட்டும்
அந்த அரைக் குருட்டு
வௌவால்கள்
அற்புதமானவை!....

"கலைமகள்" கவிதைகளுள் கணிசமானமானவை காதல் உணர்ச்சியை அவ் வழியான மனப் போராட்டத்தை நுண்மையாக வெளிப்படுத்தவன.

கமலா வாசுகி, பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகள் மட்டுமன்றி உலகமயமாக்கம் பின்காலனித்துவம், புலம்பெயர்வு அனுபவம் எனப் பல விடயங்களையும் எழுதி வருபவர். இறுதியாகக் கூறிய விடயங்களுக்கு சிறந்த உதாரணம் "கனவுகளின் புதைகுழியில் ஒரு தேசம்"
(பார்க்க : கலைமுகம்)

ஏலவே மரபுவழிக் கவிதைகள், மெல்லிசைப் பாடல்கள், அரங்கக் கவிதைகள் இயற்றிவந்தவரான மண்டூர் அசோகாவும் அண்மைக் காலமாக பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகளை எழுதிவருகின்றார். இவர் காலத்தில் எழுதிய இப்பிரதேசம் சார்ந்த கமலினி முத்துலிங்கம் தற்சமயம் எழுதுவதில்லை.

எண்பதுகளின் புதிய பொருள் மரபுகளில் பிறிதொன்று புகலிட அனுபவ வெளிப்பாடு. இப்பிரதேசத்திலே இவ்வாறான கவிதைகள் எழுதியோருள் இவ்வேளை நினைவிற்கு வருபவர் மௌ. சித்தார்த்தன் மட்டும். இவரெழுதிய குறிப்பிடத்தக்க கவிதைகளுளொன்று, பின்வருமாறு:

வெளிறிய தோல்களும், இயந்திர மனிதர்களும்

நீ
பஸ்ஸுக்காகக் காத்திரு
வெளிறிய தோல்கள் நிற்கும்
இயந்திரமாக
நீ, கடை அருகில் நில்
உன் அருகில் வெள்ளைத் தோல்
சற்றுத்தலை நிமிர்த்தி
எங்கோ பார்க்கும்
அது நிற்கும் உன்னைக் கவனியாமல்
வெள்ளைத் தோல் இயந்திரம்...'

எண்பதுகள் தொடக்கம் எழுதிவரனும் இப்பிரதேசத்தில் தொண்ணூறுகளின் பிற்பகுதியிலிருந்து தனது இருப்பை வெளிப்படுத்தி வருபவர்களுள் முதன்மையானவர் சி.ஜெயசங்கர் பேரினவாத ஒடுக்கு முறை, சூழலியல், பின்காலனித்துவம், உலகமயமாக்கம் முதலான சமகால விடயங்கள் பலவற்றை விமர்சனமும், அங்கதமும் விரவிவரும் பல கவிதைகள் எழுதிவருபவர்.

நவீன காவியமுயற்சியும் நவீன கவிதையின் ஒரு வெளிப்பாட்டு முறை தான். இப்பிரதேசக் கவிஞர்களுள் திமிலைத் துமிலன், காசி ஆனந்தன், வாகரைவாணன், எஸ்.பொன்னுத்துரை, செ. குணரெத்தினம் முதலானோர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பலரும் சமகால வாழ்வியல் அல்லது இனப்பெருமை அல்லது அரசியல் குறித்துப் பாடியிருக்கின்றனர். நீலாவணனின் வேளாண்மைக் காவியத்தை முழுமையாக்கும் நோக்குடன் செங்கதிரோன்

அண்மையில் எழுதியுள்ள காவியமும் விதந்துரைக்கப்படவேண்டியதொன்றாகிறது! சிறுவர் பாடல் முயற்சியும் "நவீன கவிதை" யோடு தொடர்புபட்டதே, இப்பிரதேசம் சார்ந்த இத்துறைக் கவிஞர்களுள் சா. கி. கமலநாதன், திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், வாகரைவாணன், மட்டுநகர் முத்தழகு, செ.குணரத்தினம் முதலானவர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் திமிலைத்துமிலன், தமிழகத்தின் தலை சிறந்த குழந்தைக் கவிஞர். அழ. வள்ளியப்பாவின் பாராட்டுதலுக்குப்பட்டவர். சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் சிறுவர் பாடல் களியற்றியிருப்பதுபோன்று (கிழக்கு) முஸ்லீம்களின் பண்பாட்டினை வெளிப் படுத்தியுள்ள சிறுவர்பாடல் எழுதியிருப்பவரான நாகூர் ஆதம்பாவாவும் இப்பிரதேசக் கவிஞரே.

மிக அண்மையில் இப்பிரதேசத்தின் வந்து சேர்ந்த மேரா இளந்தலைமுறைக் கவிஞரென்ற விதத்திலே முக்கியமானவர். மிகக்குறுகிய காலத்தில் இரண்டு கவிதைத் தொகுப்புகளைத் தந்துள்ள மேரா போருக்குப் பிற்பட்ட கால வாழ்வியலை இப்பிரதேச ஏனைய கவிஞர்களை விடக்கூடுதலாகப் பதிவு செய்துள்ளவர் என்ற விதத்தில் கவனத்திற் குரியவர்.

மண்முனை வடக்குப் பிரதேசம் நவீன கவிதைப் பிரசுரகளமாகவுள்ள கலை இலக்கியச் சஞ்சிகையினை அவ்வப்போது வெளியிட்டுவந்துள்ளது, வெளியிட்டு வருகின்றது. இவ்விதத்தில் மலர், தாரகை, பூவரசு, வயல், படி, அரங்கம், தொண்டன், பெண், போது, சுவைத்திரள், தென்றல், பீனிக்ஸ், மகுடம் முதலிய இவ்வேளை நினைவிற்கு வருகின்றன. இவ்விதத்தில் ஏனைய பிரதேசங்களில் ஒட்டுமொத்தமாக ஈழத்தின் நவீன (உட்பட பொதுவான) இலக்கிய வளர்ச்சிக்கும் வழிகோலியுள்ளது, வழிகோலி வருகின்றது. மண்முனை வடக்குப் பிரதேசம் நீண்டகாலமாக வெளியிட்டுவரும் "தேனகம்" ஏனைய பிரதேச மலர்களுடன் ஒப்பிடும் போது பல புதிய கவிஞர்கள் (எழுத்தாளர்கள்) இனங்காட்டி வருவதில் முன்னணியில் நிற்பதுபற்றியும் குறிப்பிட்டே ஆகவேண்டும்

இதுவரை கூறியவற்றிலிருந்து, ஏறத்தாழ ஐம்பதிலிருந்து இன்றுவரை இப் பிரதேச நவீன கவிதை மரபுகள் காலத்திற்குக் காலம் பெற்றுவந்த மாற்றங்களை இப் பிரதேச கவிஞர்கள் பெருமளவு வெளிப்படுத்தி வந்திருப்பது தெளிவாகின்றது என்றே நம்புகின்றேன். முன் குறிப்பிட்ட கவிஞர்களுள் சிலர் உள்ளூர் பெயர்வினாலும் வேறு சிலர் வெளியூர் இடம்பெயர்வினாலும் இப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்து இப்பிரதேச நவீன கவிதை வளர்ச்சியை வளம்படுத்தி வந்திருப்பது இலக்கிய ஆர்வலறிந்துள்ள விடையமே. அத்தகையோர் அனைவரும் பற்றியோ இப்பிரதேசத்தில்லிருந்து எழுதுபவர் அனைவரும் பற்றியோ, மேலே குறிப்பிட்டி ருப்பதாகக் கூற முடியாது. விரிவஞ்சிக் குறிப்பிடத் தவறியோருள் வாகரைவாணன், பொன். தவநாயகம் அற்புதராஜா குருஸ், கா. சிவபாலன், சி. தர்மகுலசிங்கம் வெற்றிவேல் விநாயகமூர்த்தி, வல்லிபுரம் மீனாம்பிகை, பிரான்சிஸ், அன்பழகன் குருஸ் முதலானோர் அடங்குகின்றனர். இவர்களது நூல்களோ கவிதைகளோ உடனடியாக பெறமுடியாமையே அதற்கான காரணமன்றி வேறு காரணமன்று. வேறு சில கவிஞர்கள் (உதாரணம் வெல்லவூர் கோபால், புஸ்பானந்தன்) இப்பிரதேசத்தினுள் இணைந்து கொள்வார்களா என்பது பற்றிய ஐயம் காரணமாகப் பேசப்படவில்லை.

எவ்வாறாயினும் இப்பிரதேச நவீன கவிதை வளர்ச்சியின் மரபும் மாற்றங்களும் ஏனைய பிரதேசங்களின் மரபுகள் மாற்றங் களுடன் இயைந்து வந்திருப்பது இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுமென்பதில் தவறில்லை. இப்பிரதேச சிறுகதை, நாவல் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இப்பிரதேச கவிதை வளர்ச்சியின் வெளிப்பாடுகளே காத்திரமாகவுள்ளது என்பதும் கவனிக்கத் தக்கது.

# தாய்மைப் பேறு

முறைப்படுத்தப்படும் அனைத்துமே கலை என்று அறிஞர் அண்ணா கலைக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார். அப்படியாயின் கர்ப்பம் பிரசவம் எல்லாமே கலைகள் தான். இக்கலைகள் தமிழர்களின் வாழ்வோடு மக்கள நிகழ்வாக பின்னிப்பிணைந்து இருந்தன. காலமாற்றம் மற்றும் நாகரீக மாற்றம் காரணமாக இத்தகு கலை, கலாசார,பண்பாட்டுப்பழக்க வழக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்கிறது தொல்காப்பியம் எனும் இரண்டாவது தமிழ் இலக்கண நூல். இவ்வாறு புதியன புகுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்த மகப்பேற்றுப் பிறப்பு மரபுகளையும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் மீட்டுப்பார்ப்பதே இக்கட்டுரையாளர் நோக்கம்.

திருமணம் முடிந்த ஒருத்தி தலை முழுகாமல் இருக்கின்றாள் என்பதை அறிந்த அவள் குடும்பம் பேருவகை அடையும் தாய்மைப்பேறு கிட்டிய அவள் மீது கண்ணும் கருத்தும் அதிகரிக்கும். அவளுக்கு பிடித்தமான உணவுப் பண்டங்களை வீட்டார் மட்டுமின்றி உறவினர்களும் செய்து கொடுப்பார்கள். புளிப்பில் அவளுக்கு பிரியம் அதிகரிக்கும்.

கர்ப்பமடைந்த 5ம் மாதத்தில் அவள் நாட்டு வைத்தியரின் கிரந்தி வாயுத்தூள் சாப்பிடுதல் வேண்டும். தாய்க்கும் மற்றும் பிறக்கும் குழந்தைக்கும் கிரந்தி, வாயு முதலிய தொல்லைகள் ஏற்படாமல் இருப்பதற்காகவே இந்த முன் வைத்தியம் செய்யப்படுகின்றது.

ஆண்குழந்தையா அல்லது பெண்குழந்தையா என்பதை அறிவதற்கும் இங்கு வழிகள் இருந்தன. கர்ப்பிணிப் பெண் இடது பக்கம் சரிந்து படுப்பது வழக்கமாக இருந்தால் அல்லது இடது கையை ஊன்றி அமர்ந்தால் அல்லது எழுந்தால் பெண் குழந்தை என்றும் இவை வலப்புறமா நடைபெற்றால் ஆண் குழந்தை என்றும் அறிந்துகொள்வர்.



பேறு காலம் நெருங்கியதும் நாட்டு வைத்தியரிடம் லேகி மாத்திரை வாங்கி பேதிக்கு கொடுக்கப்படும். வயிற்று நோ ஏற்பட்டவுடன் காக்கணம் வேரும், வெந்தயமும் சேர்த்து அவித்த ஊறலைக் குடிக்க வேண்டும். இதற்கு அபான வாயு ஊறல் என்றும் பெயர். வயிற்று நோ பிரசவ நோவா அல்லது வாயுத் தொல்லையால் ஏற்பட்ட நோவா என்பதை இந்த ஊறலைக் குடித்த பின்னர் அனுபவமிக்க பெண்கள் சொல்வார்கள்.

பிரசவத்திற்கான நோ என அனுமானித்த பின்னர் குறிகண்டு நோகுது என மருத்துவிச்சி அழைத்துவரப் படுவாள். வீட்டின் இடது பக்க அறை சாய்ப்பு எனப் படும். அந்த அறையிலேயே பிரசவம் நடைபெறும். மருத்துவிச்சியுடன் கர்ப்பிணித் தாயும் அனுபவமிக்க மூத்த பெண்கள் சிலரும் இருப்பார்கள். "வயிறு நோவுதாம்"

கலாபூஷணம் இ. பாக்கியராஜன்

என்று அவர்கள் பேசிக்கொள்வார்கள்.

பிள்ளை பிறந்ததும் ஆணா பெண்ணா என்பதை மருத்துவிச்சியே அறிவிப்பார். ஆண்குழந்தையானால் உலக்கையையும் பெண்குழந்தையானால் ஈக்கில் வாருகலையும் தந்தை அல்லது மாமன் வீட்டுக் குரையின் மேலால் எறிவார்.

மருத்துவிச்சி தொப்புள் கொடியை வெட்டி அதனை தவிட்டில் புரட்டி பிள்ளையை தவிட்டில் புரட்டி நீராட்டுவார். வீட்டுத் தரை சாணத்தினால் மெழுகப்படும். பின் குத்து விளக்கு (மங்கள விளக்கு) ஏற்றி கொத்தி யாருக்கு என்று நெல், மஞ்சல், வெற்றிலை, பாக்கு என்பன வைத்து நேர்ந்து (மண்றாடி) வைக்கப்படும். பின்னர் தீப்பந்தம் கொழுத்தி அதனை எடுத்துக்கொண்டு வீட்டைச் சுற்றி ஓடி வீசப்படும் மருத்துவம் செய்த பெண்ணுக்கு மதுபானம் கொடுப்பதும் வழக்கமாகும்.

சாணம் மெழுகிய தரையில் தான் தன் விரலால் தொட்டு பிள்ளைக்கு பொட்டு இடுவாள். இதனை நிலக்காப்பு இடுதல் என்பார்கள். பிரசவம் நடந்த அன்று தாய்க்கு சுவாத முக்கூட்டு எண்ணெய் குடிப்பதற்கு கொடுக்கப்படும். அத்துடன் சுவாதத் தூள் சூலவாயுக் குளிசை என்பவற்றையும் தேனுடன் கரைத்துக் குடித்தல் வழக்கமாகும்.

2ம் நாள் தாய்க்கு சோறு கொடுக்கப்படும். இது பத்தியச்சோறு எனப்படுகின்றது. கொட்டைத் தேங்காய்த்(கொப்பறா) துண்டு ஒன்றை நெருப்பில் சுட்டு அதனுடன் கொத்தமல்லி சேர்க்காத மிளகாய்த் தூள், ஓமம், வெள்ளைப்பூடு என்பன சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து மீன் கறி சமைக்கப்படும். சள்ளல், திரளி போன்ற மீன்களை மட்டுமே அதுவும் மண் சட்டியில் சமைப்பார்கள். இச்சட்டியில் சிறுதுண்டு இரும்பு கட்டப்பட்டு இருக்கும். இவ்வாறு சமைத்த குளம்பு மிளகு தண்ணி எனப்படும் இக் கறியையும், சோற்றையும் யாரும் காணாதவாறு தனியாக இருந்து தாய் உண்பாள். எஞ்சிய உணவு உறவினர்களுக்கு அல்லது அயலில் உள்ள கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும். கண் திருஷ்டி கவனத்தில் கொள்ளப்படுவதே இவற்றுக்கெல்லாம் காரணமாகும்.

சாப்பிட்ட பின் கொதித்து மெல்லிய சூட்டுடன் நீர் குடிப்பதற்கு கொடுக்கப்படும். பின்பு குடற்புண் குணமடைவதற்காக மருந்து கொடுப்பார்கள். இது காயம் எனப்படும் பரங்கிக் கிழங்கை உலரவைத்து இடித்த மாவுடன், சிறு காஞ்சோண்டி இலைச் சாறும், சாராயமும் சேர்த்து காய்ச்சி இறுகிய பின்னர் தேனில் பிசைந்து கொடுப்பதே காயம் எனப்படும்.

3ம், 4ம் நாட்களில் நீராட்டப்படும். வேப்பம் பட்டை, வேப்பம் இலை, குடையள்பம் பட்டை அதன் இலை ஆடாதோடை பட்டை, அதன் இலை, கரு நொச்சி இலை என்பவற்றை நீரில் அவித்து அந்த நீரினால் தாயை நீராட்டுவார்கள். இது வேது வார்த்தல் எனப்படும்.



கொத்தியாருக்கு நேர்ந்த பொருட்களை 5ம் நாளில் எடுத்து தாயின் தலையைச் சுற்றிய பின் மருத்துவிச்சிக்கு கொடுப்பது வழக்கமாகும். அத்துடன் கூலியுடன் விருந்தும் மருத்துவிச்சிக்கு கொடுக்கப்படும்.

7ம் நாளும் 12ம் நாளும் தாய் சுடுநீரில் குளிப்பாள் 9ம் நாள் சுடுநீரிலும் 15ம், 20ம் நாட்களில் தண்ணீரிலும் முழுகுவாள்.

31ம் நாள் சடங்கு மருங்கை எனப்படுகின்றது. பிறந்த குழந்தைக்கு அன்றைய தினம் தலைமயிரை வழித்து தொட்டிலில் இடுவார்கள். பெண் குழந்தையாயின் காது குத்தப்படும். உறவினர்கள், மருத்துவிச்சி, சலவைத் தொழிலாளி ஆகியோருக்கு விருந்தும் அளிக்கப்படும்.

இதற்கிடையில் சோதிடர் வரவழைக்கப்பட்டு பிள்ளைக்கு சாதகம் கணிக்கப்படும். இக்கணிப்பின் படி சொல்லிய முதல் எழுத்து கொண்ட பெயரைச் சூட்டி தந்தை பதிவாளரிடம் சென்று பிறப்பைப் பதிவு செய்வார்.

குழந்தையின் தொப்புள் உயர்ந்திருந்தால் தாய் மாமன் தொப்புளை கால் விரலால் அமர்த்தியதும் அது அமர்ந்துவிடும். பிள்ளை பிறக்கும் போது மாலை அணிந்தது போல் மாக்கொடி பிள்ளையை சுற்றியிருந்தால் தாய் மாமனுக்கு ஆகாது என நம்பினர்.

3, 4 மாதங்களில் குழந்தைக்கு வயிறு நோவதுண்டு. அவ்வேளையில் சோழம் கொட்டையை வறுத்து தேங்காய் சீவலுடன் தாய் மாமனுக்கு உண்ணக் கொடுப்பார்கள். அவர் நூல் கற்றையை எடுத்து அதனை முறுக்கிக் கொண்டு அவற்றைச் சாப்பிட்டால் குழந்தையின் வயிற்று நோ குணமடையும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

கண் திருஷ்டியில் இருந்து காப்பாற்றுவதற்காக குழந்தைக்கு கறுப்பு பொட்டு வைப்பதும் வழக்கம். அரிசி குறுணலை மண் சட்டியில் இட்டு கருகும் வரை வறுத்து நீரில் காச்சப்படும். காச்சிய பதார்த்தத்தை துணி யால் வடித்து சீவிய சிரட்டையில் ஊற்றி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்வார்கள். பின்னர் தேவையான போது அதில் நீர்த்துளிகளை விட்டு விரலால் உராய்ந்து கறுப்புப் பொட்டு பெறப்படும்.

கறுப்புப் பாசி மணியை கோர்த்து குழந்தையின் கைகளிலும் இடுப்பிலும் கட்டுவதும் வழக்கமாகும். வசதி படைத்தவர்கள் தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களினாலும் இவ்வாறு அணிகலன்களை அணிவிப்பர். கழுத்தில் பஞ்சாயுதம் பொதிக்கப்பட்ட பதக்கத்துடன் தங்கமாலை அல்லது கறுப்பு நூல் அணிவிக்கப்படும்.

மூன்று மாதம் வரை குழந்தையை வீட்டுக்கு வெளியே கொண்டு செல்வதில்லை. மூன்று மாதம் முடிந்ததும் முதன் முதலாக ஆலயத்திற்கு கொண்டு சென்று பூசை வழிபாடு செய்யப்படும் முக்கியமாக மோதகம் அவித்துக் கொண்டு சென்று விநாயகப் பெருமானை வழிபடுவர். பிரசவம் எதுவித விக்கினமும் இன்றி நடைபெற்றதற்காக பத்திரகாளி அம்மன் ஆலயம் சென்று சேவல் காணிக்கையைச் செலுத்தி வழிபடுவதும் வழக்கமாகும்.

பல் முளைப்பதற்கு குழந்தைக்கு முரசில் ஒருவித உழலை ஏற்படுவதனால் கொழுக்கட்டை சொரியும் வைபவம் நடைபெறும். அரசிலை வட்டாவில் வெள்ளைத் துணியை விரித்து அதன் மேல் குழந்தையை இருத்துவார்கள். பின் குழந்தையின் மேல் குடையை விரித்து அதன் மேலும் வெள்ளைத் துணி விரிக்கப்படும். உற்றார் உறவினர் புடை சூழ குடையின் மேல் கொழுக்கட்டை சொரியப்படும். குழந்தை அவற்றை எடுத்து கடித்து விளையாடி உழலையைப் போக்கும்.

8ம், 9ம் மாதத்தில் குழந்தைக்கு அன்னம் ஊட்டும் வைபவம் இடம்பெறும். குறித்த தினத்தில் தேங்காய்ப் பாலை அரிசியுடன் கலந்து சோறு சமைக்கப்படும். மங்கள விளக்கு ஏற்றி நிறைகுடம் வைத்து அதன் முன்பாக வாழை இலையில் சோற்றைப் படைத்து வழிபடுவர். பின் சோற்றுடன் தேன், பால், நெய், பழம் சேர்த்து பிசைந்து குழந்தைக்கு ஊட்டப்படும். இதுவே அன்னம் ஊட்டும் நிகழ்வாகும்.

குழந்தைக்கு காய்ச்சல் அல்லது அடிக்கடி திடுக்கிடுதல் இடைவிடாத அழுகை ஏற்பட்டால் பூசாரியை வரவழைத்தால் அவர் திருநீற்றை மந்திரித்து குழந்தையின் நெற்றியில் அணிவிப்பார். அது திருநீறு போடுதல் எனப்படும் அல்லது செம்பில் நீரைப்பெற்று அதனை மந்திரித்து குழந்தைக்கு அருந்தக்கொடுப்பார். இது தண்ணீர் ஓதுதல் எனப்படும். பின்னர் உறவினர் பல தடவை திருநீற்றை அணிவிப்பர்.

இப்போது கர்ப்பக் காலத்தில் நாட்டு வைத்தியம், தூள், குளிசை, ஊறல், மருத்துவிச்சியின் வைத்தியம், வாருகல் உலக்கை எறிதல், வீடு மெழுகுதல், பத்தியச் சோறு முதலிய எவையுமே இல்லை. கர்ப்பம் தரித்ததும் கிளினிக்குக்கு செல்வதுடன் ஸ்கேன் செய்து என்ன குழந்தை என அறிவதும் குறித்த தினத்தில் அல்லது விரும்பிய தினத்தில் பிள்ளையைப் பெற்றெடுப்பதும் வழக்கமாகி விட்டது.

பத்தியச் சோறு, சுடுநீர், தண்ணீர், குளிப்பு என்ற வித்தியாசம், காயம், வேது, குழந்தைக்கு அரிசிக் குறுனல் பொட்டு எல்லாமே கைகழுவப்பட்டுவிட்டன. எனினும் 31ம் நாள் சடங்கு தற்கால நாகரீகத்திற்கு ஏற்ப செய்யப்படுகின்றது.

# பரதக்கலை

திருமதி. மலர்வழி சிவஞானசோதிகுரு



பாவம், இராகம், தாளம் எனும் மூன்றும் இணைந்ததே பரதமாகும். பரதமானது பாரத நாடான இந்தியாவில் தோன்றிய படியாலும், பரத முனிவரால் தோற்றுவிக்கப்பட்டதாலும் "பரதம்" எனப் பெயர் பெறுகின்றது. இப்பரதக் கலைக்கு உலகியல் வரலாறு (பௌதீக வரலாறு), புராண வரலாறு என இரு வரலாறுகள் உண்டு. பரதக் கலையானது கி.மு 2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 2ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோற்றம் பெற்றதெனக் கூறப்படுகின்றது. எது எவ்வாறெனினும் பரதக் கலையானது மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பை வந்தடைந்த காலமாக 1958 காலப்பகுதியைக் கூறலாம். அதாவது திரு.எம். கைலாயப்பிள்ளை ஆசிரியரின் வருகையே மட்டுநகரில் பரதத்தின் தொடக்கமாகும்.

நோக்கம்:-

1958 தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதியில் மட்டக்களப்பில் பரதக் கலையின் வரலாறு, அதனூடாக இடம் பெற்ற மரபு, மற்றும் மாற்றங்களை வெளிக்கொணர்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"மட்டக்களப்பில் பரதக் கலையின் தோற்றம் :-

திரு.எம்.கைலாயப் பிள்ளை அவர்கள் பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியர் இவரின் குரு இந்தியாவில் வசித்த திரு. கணேசப்பிள்ளை ஆவார். திரு.எம்.கைலாயப்பிள்ளை அவர்கள் யாழ்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பாடசாலையின் அதிபராக இருந்த திருமதி. திருநாவுக்கரசு அம்மணி அவர்களுக்கு கொழும்பில் திரு.எம். கைலாயப்பிள்ளை அவர்களை சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அச்சந்திப்பின் நிமிர்த்தம் திரு.எம்.கைலாயப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பிற்கு வந்தார். அவரோடு பரதக்கலையும் மட்டக்களப்பிற்கு வந்தடைந்தது.

1958 காலப்பகுதியில் தற்போது அரசடியில் வாகனங்கள் திருத்தும் இடமான கராஜில் கனிஸ்ட பாடசாலை *(junior School)* அமைந்திருந்தது. அப்பாடசாலையின் வளாகத்திலும், மட்டக்களப்பு ஆனைப்பந்தி பாடசாலையின் வளாகத்திலும் திருமதி. திருநாவுக்கரசு அதிபர், திருமதி.கங்கேஸ்வரி ஆகியோரின் வேண்டுதலுக்கிணங்க திரு.எம்.கைலாயப்பிள்ளை அவர்கள் தனது பரத நாட்டிய வகுப்பை ஆரம்பித்தார். இவரிடம் கமலா ஞானதாஸ், உஷாதேவி கனக சுந்தரம், விஜயேஸ்வரி நல்லரெட்ணம், ஜெயேஸ்வரி நல்லரெட்ணம், மேபிள், ஓம்சக்தி

கந்தையா, யோகேஸ்வரி ஆகியோர் முதலிலும் பின் ஜெயமணி, சுபித்ரா கிருபாகரன், கமலேஸ்வரி தவராஜரெட்ணம், அரியமலர், வசந்த கோகிலம், முரளிதரன், நந்தினி சுப்பிரமணியம், குமுதினி சுப்பிரமணியம் ஆகியோர் பின்னரும் பரதநாட்டியம் கற்கத் தொடங்கினர்.

வளர்ச்சி:-

திரு.எம்.கையாலப்பிள்ளை ஆசிரியரின் நேரடி சிஷ்யைகளான கீழ்வருவோர் பரதக் கலையை வளர்ப்பதற்காகத் தனிப்பட்ட நடன வகுப்புக்களை ஆரம்பித்து அதன் மூலம் பல ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் உருவாக்கியுள்ளனர்.

1974 - "பரத கலார்ப்பணா"
திருமதி.கமலா ஞானதாஸ்

1977 - "நாட்டிய சேத்ரா"
திருமதி.உஷாதேவி கனகசுந்தரம்

1981 - "நவநடனாலயம்"
திருமதி.கமலேஸ்வரி தவராஜரெட்ணம்

1982 - "பரத கலாலயா"
திருமதி.சுபித்ரா கிருபாகரன்

இவர்களின் வழித்தோன்றல்களாக கீழ்வருவோர் தாமும் பரதம் பயிலும் கல்லூரிகளை அமைத்து பரதக் கலையை சிறப்பாக வளர்த்து ஒரு கலைச் சமூகத்தை உருவாக்கியுள்ளனர்.

1981 - "நிருத்திய கலாலயம்"
திருமதி.வசந்தி நேரு

1991 - "நாட்டிய வித்யா"
திருமதி.மலர்விழி
சிவஞானசோதிகுரு மற்றும்
திருமதி எஸ்.தனுசியா
திருமதி ஆர்.ஷர்மிலா
திருமதி பி.ஷர்மிலதா
திருமதி ஜெ.சசிகலாராணி
திருமதி என்.சுகந்தி
திரு. எம்.சதீஸ்குமார்.
என்போரைக் குறிப்பிடலாம்.

மரபும் மாற்றமும் :-

இனி நாம் பரதக் கலையின் மரபும் மாற்றமும் என்பதை எடுத்து நோக்குவோம். அதாவது ஒருவரையறைக்குட்படுத்தப்பட்ட சாஸ்திரியக் கலையான பரதக்கலையானது தனது மரபிலிருந்து பெற்றுக்கொள்ளும் மாற்றத்தை இனி நாம் உற்று நோக்குவோம். இம்மரபு மாற்றமானது நல்ல முறையிலோ அல்லது தீய முறையிலோ அமைந்ததாக இருக்கலாம்.

1972 இல் இலங்கை அரசால் பரத நாட்டியமானது கலைத்திட்டத்தில் ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டது. தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையும் கற்பிக்கப்பட்டது. பின்னர் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை என மாற்றத்தைப் பெற்றது. கலைத் திட்டமானது எட்டு வருடங்களுக்கொரு முறை திருத்தி அமைக்கப்பட்டு வந்து இறுதியாக 2007ம் ஆண்டு ஒரு மாற்றத்தைப் பெற்றது. 2015ம் ஆண்டு புதிய மாற்றத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன.

சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் என்பன ஒன்றிணைந்த பாடமாக ஆறாம் தரத்தில் கற்பிக்கப்பட்டு வந்த பரதக்கலையானது 2007ம் ஆண்டில் இருந்து ஆறாம் தரத்தில் தனித் தனியாகக் கற்பிக்கப்பட்டு மாற்றத்தைக் கண்டுள்ளது.

மட்டக்களப்பிலே பரதக்கலையை வளர்க்கும் ஒரு இடமாக விளங்கும் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி 1982ம் ஆண்டிலே இந்து கலா சார அமைச்சர் திரு. செல்லையா இராஜதுரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 4 வருட பயிற்சியின் பின் பரதம் பயிலும் மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டது. 2004ம் ஆண்டில் இந்நுண் கலைக் கல்லூரி கிழக்கு பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டு 4 வருட பயிற்சியின் பின் "நடன கலைமானி" பட்டம் வழங்கப்பட்டு மாற்றத்துக்குள்ளானது. ஆரம்பத்தில்



தற்காலிக ஓலைக் கொட்டிலின் கீழ் ஆரம்பிக்கப் பட்ட இந்நுண்கலைக் கல்லூரி தற்போது விடுதி வசதியோடு கூடிய கட்டிடமாகத் திகழ்கின்றது. சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் என அழைக்கப்படும் இந்நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் நடன பட்டதாரிகள் பலரை உருவாக்குகிறது.

அடுத்து பரதக் கலையின் அணிசேர் கலைஞர்களை எடுத்து நோக்கும் போது திரு. எம்.கைலாயப்பிள்ளை அவர்களின் காலத்தில் அவரது நடன நிகழ்வுகளுக்கு அணிசேர் கலைஞர்களாக

| | |
|---|---|
| பக்கப் பாட்டு | : திரு.மகாலிங்கம் ஆசிரியர் |
| மிருதங்கம் | : திரு.அந்தோனி (மீன்பிடித் தொழில் செய்பவர்) |
| கெஞ்சிரா | : திரு.நடராஜா |
| நட்டுவாங்கம் | : திரு.எம்.கைலாயப்பிள்ளை |

இவர்கள் அனைவரும் தமது துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள் அல்ல இவர்களில் சிலர் கேள்விஞானத்தோடு தமது கருவிகளை மீட்டினர். ஆனால் அந்நிலை இப்போது மாற்றமுற்று அணிசேர் கலைஞர்கள் தமது துறையில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் பட்டங்களைப் பெற்றவர்களாகவும் காணப் படுகின்றனர். மேலும் இவர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளிலும் பல நவீன தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு உதாரணமாக எலக்ரோனிக் தம்புரா சுருதியைக் குறிப்பிடலாம்.

1970, 1980 காலப்பகுதியில் பரத நாட்டியம் என்ற பெயரில் சினிமா கலந்த நடனத்தை கிரமர்போனில் போட்டு மேடையில் ஆடும் ஒரு கூட்டம் காணப்பட்டது. இவர்களைப் பரத நாட்டியம் பயின்ற சமூகம் தோசைக்கல்லிற்கு நடனம் ஆடுவோர் என எள்ளி நகையாடினர். அதே போல் இன்றும் பரத நாட்டியம் பயின்ற சிலர் இறுவட்டு *(CD)* பயன்படுத்தி நடனமாடும் கலைஞர்களாக காணப்படுகின்றனர். ஒரு பரத நிகழ்வை மேடையேற்றும் போது மேடையின் வலது பக்கம் முன் மூலையில் அணிசேர் கலைஞர்கள் பின்வரும் ஒழுங்கில் அமந்திருக்க வேண் டும். முதலில் மிருதங்கம் வாசிப்போரும் அடுத்து நட்டுவனாரும் (குரு), பக்கப்பாட்டு பாடுவோர், வயலின் வாசிப்போர், ஏனைய இசைக்கருவி இசைப்போர் (வீணை, கடம்) என அமர்ந்திருக்க வேண்டும்.


ஆனால் இன்று அனேகர் பரத நிகழ்வை மேடை யேற்றும் போது இறு வட்டைப் *(CD)* பயன் படுத்துவதனால் நிகழ்வை நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது மின்சார தடங்கல், மேடையில் ஏற்படும் அதிர்வு என்பவற்றால் இறுவட்டு *(CD)* தடைப்பட்டு *(Stuck)* விடும். இந்நிலையில் கலைஞன் அவமானத் திற்குள்ளாக நேரிடும். எனவே நேரடியாக அணிசேர் கலைஞர்களை வைத்து நிகழ்வை நிகழ்த்தாது இறுவட்டு *(CD)* பயன்படுத்துவது தவிர்க் கப்பட வேண்டியதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.



1970, 1980 காலப்பகுதியில் பரத நாட்டியம் என்ற பெயரில் சினிமா கலந்த நடனத்தை கிரமர் போனில் போட்டு மேடையில் ஆடும் ஒரு கூட்டம் காணப்பட்டது. இவர்களைப் பரத நாட்டியம் பயின்ற சமூகம் தோசைக் கல்லிற்கு நடனம் ஆடுவோர் என எள்ளி நகையாடினர். அதே போல் இன்றும் பரத நாட்டியம் பயின்ற சிலர் இறுவெட்டு *(CD)* பயன்படுத்தி நடனமாடும் கலைஞர்களாக காணப்படுகின்றனர்.

1970, 1980 காலப்பகுதியில் கோயில் திருவிழாக்களின் போது திருவிழா உபயக்காரர்கள் பரத நாட்டிய நிகழ்வுகளை கோயிலின் முன்மண்டபத்தில் நிகழ்த்துவர் ஆனால் அதன்பின் வந்த காலமாகிய 1990க்குப் பின் கோயிலுக்கு வெளியே மேடை போட்டு பரத நிகழ்வுகளை நிகழ்த்தும் நிலை வந்து மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உதாரணமாக மட்டக்களப்பு மாமாங்கேஸ் வரர் ஆலயத்தில் 7ம் திருவிழா உபயக்காரர்களான "நல்லையா உடையார்" சந்ததியினரின் பரத நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

திரு.எம்.கைலாயப்பிள்ளை ஆசியரது நெறியாழ்கையில் எல்லோராலும் பேசப்படுகின்ற ஓர் விடயம் "சிவதாண்டவம்". இதனை இவரது சிஷ்யைகளான யோகேஸ்வரி ,ஜெயேஸ்வரி, மேபிள் ஆகியோர் நிகழ்தியுள்ளனர். இதில் ஒரு மாற்றமாக சிவதாண்டவத்தை 1990 இல் "பரதகலாலயா" ஆண்டு விழாவில் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில்



திருமதி.சுபித்ரா கிருபாகரனின் நெறியாழ்கையில் அவரது மாணவர்களான செல்வி.மலர்விழி பூபாலரெட்ணமும், செல்வன். பிரிதிவிராஜும் சிவனும் சக்தியுமாகத் சிவதாண்டவம் புரிந்து இன்றுவரை எல்லோர் மனதிலும் இடம் பிடித்துள்ளனர். இதன் அடுத்தகட்டமாக 2002ம் ஆண்டிலே திருமதி.மலர்விழி சிவஞான சோதிகுரு தனது மாணவிகளான செல்வி *T.*உஷாந்தி, செல்வி.*T.*நிஷாந்தினி ஆகியோருக்கு சிவதாண்டவத்தைக் கற்பித்து அனைவர் மனதையும் கவர்ந்தார்.

மட்டக்களப்பில் பரதக் கலையானது அன்று ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்குப் பயிற்றி மேடையேற்றினர். ஆனால் இன்று மாணவர்களைப் பயிற்றும் ஆசிரியர்களும் "அவைக்காற்றுகை" செய்வது மெச்சத்தக்க விடயமாகும். இதற்கு மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 2013ம் ஆண்டு நடாத்தப்பட்ட சாதனையாளர் விழாவிலே மட்டக்களப்பு வலய நடன ஆசிரிய ஆலோசகர் நெறியாள்கையில் மட்டக்களப்பு வலய நடன ஆசிரியர்கள் நடாத்திய பரத நிகழ்வை குறிப்பிடலாம். இவ்வா சிரியர்கள் ஆசிரியர் தின விழாவின் போதும் அவைக்காற்றுகை செய்துவருகின்றனர்.

மட்டக்ளப்பிலே ஆரம்பத்தில் வெளியூர் சென்று பரதம் பயில்வது அரிதாகவே இருந்தது. ஆனால் அந்நிலை மாறி இன்று



பல மாணவர்கள் பரதம் பயில இந்தியா செல்கின்றனர். அங்கு கலாஷேத்ரா கலைக் காவேரி போன்ற நுண்கலை கல்லூரிகளிலும் அடையார் லக்ஸ்மன், திரு.தனஞ்சயன் போன்றோரிடமும் பரதம் பயின்று வருகின்றனர்.

*1960, 1970, 1980* காலப்பகுதியில் பரத நாட்டியத்திற்குப் பயன்பட்ட ஒப்பனைப் பொருட்கள் சாதாரணமானதாகவே காணப் பட்டது. ஆனால் *1990* இற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் நவீன ஒப்பனைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. பாத்திரத்தின் தோலின் நிறம், தன்மைக்கேற்ப ஒப்பனைப் பொருட்கள் மாற்றமுறுகின்றன. பான்ஸ்ரிக், பான் கேக், பிங்பவுடர், லிப்ஸ்ரிக், லிப்லைனர், மஸ்காரா, ஐ லைனர், ஐ புறோ பென்சில், கஜால், றூஜ் என்பவற்றைக் குறிப்பிடலாம். கையின் உள் வெளிப் பாகங்களுக்கு சிவப்பு மை அல்லது மருதாணி அரைத்து பூசுவார்கள். இன்று இந்நிலை மாறி மருதாணி பேஸ்ற், டிசைன் ஸ்ரிக்கர் என்பன பயன்படுத்தப்படுகின்றன.



தலையில் சூடும் பூவைப் பொறுத்தமட்டில் *1960, 1970, 1980, 1990* காலப்பகுதியில் நித்திய கல்யாணி, கனகாம்பரம், கடதாசிப்பூ (போர்கன் விலா) ஆகியன பயன்படுத்தப்பட்டன. இன்று அந்நிலை மாறி செயற்கைப் பூக்கள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

முன்னர் ஒலியைப் பொறுத்தமட்டில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது. இன்று அந்நிலை மாறி ஒலியை தேவையான அளவில் கட்டுப்படுத்தித் தரும் மிக்சர் பயன் படுத்தப்படுகின்றது.

மேலும் ஒலியானது அன்று சாதரண மாகவே காணப்பட்டது. அந்நிலைமாறி வர்ண ஒலிகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன.

*1960* களில் பரதக்கலையானது ஆசிரியரிடம் பயில்வதும் மேடையேற்றுவதுமாக காணப்பட்டது. அந்நிலை மாற்றமுற்று நடனம்

பயின்று மேடையேற்றுவதோடு 1972 இற்குப் பின் மாணவர்கள் க.பொ.த.சா/தரப் பரீட்சையின் பின் நடன பாடத்திற்கு தோற்றினர். அதன் பின் க.பொ.த. உ/தரத்திற்கு தோன்றிய மாணவர்கள் 1982 இன் பின் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் டிப்ளோமா பரீட்சைக்கும் 2004 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தோடு நுண்கலைக் கல்லூரி இணைக்கப்பட்டதன் விளைவாக பட்டப் படிப்பினையும் மாணவர்கள் மேற்கொண்டனர்.

இதைவிட பரதம் பயிலும் மாணவர்கள் தற்போது வடஇலங்கை சங்கீத சபையின் நடனப் பரீட்சையிலும் லண்டன் ஜெயாஞ்சலி பரீட்சையிலும் தோற்றி சான்றிதழ்களைப் பெறுகின்றனர்.

மேலும் தற்போது யாழ்/ இராமநாதன் நுண்கலைக் கல்லூரியிலும், மட்/தாழங்குடா கல்விக் கல்லூரியிலும், அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலும் பயின்று மட்டக்களப்பிலே பரதக்கலையை வளர்க்கின்றனர்.

தற்போது மட்டக்களப்பில் நடனக் கலையைக் கற்கும் மாணவர்கள் தமிழ் தினப் போட்டி, சாகித்திய விழா, முத்தமிழ் விழா, அழகியல் தின விழா முதலியவற்றில் பங்கு பற்றி மாகாண, தேசிய ரீதியில் பதக்கங்களை யும், பரிசில்களையும் பெறுகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் பரதக் கலையைப் பொறுத்தமட்டில் அதன் புனிதத் தன்மை குன்றாது, சாஸ்திரம் பேணி அதனை வளர்த்து எதிர்கால சந்ததியினரும் பயன்பெற வழிகோல வேண்டும். அதனைக் கற்பதோடு நிறுத்திவிடாது அவைக்காற்றுகை செய்ய வேண்டும். மாறி வரும் கலாசார சீர்கேட்டுக்குள் சிக்காது தெய்வீகமான இப்பரதக் கலையைப் பேணி வளர்ப்போம்.

உசாத்துணை : மட்டக்களப்பின் சிரேஸ்ட பரதக் கலைஞர்களுடனான பேட்டியும், கலந்துரை யாடல்களும்

## மண்முனை வடக்கு பிரதேச செயலகம் முத்தமிழ் விழா போட்டி முடிவுகள் - 2014

| | | |
|---|---|---|
| **சிறுகதை - திறந்த மட்டம்** | | |
| 1ம் இடம் | செல்வி. சுஷானா ஜேசுதாசன் | மட்/வின்சன் மகளிர் உ.த.பா |
| 2ம் இடம் | செல்வி. தயாளேஸ்வரராஜா தக்ஷனா | மட்/வின்சன் மகளிர் உ.த.பா |
| 3ம் இடம் | செல்வி. பிரபாகரன் ரக்ஷனா | மட்/அமிர்தகழி ஸ்ரீ.சி. வி.வித்தியாலயம். |
| **கவிதை - திறந்த மட்டம்** | | |
| 1ம் இடம் | கவிஞர் கலாபூஷணம் பொன் தவநாயகம் | மட்டக்களப்பு |
| 2ம் இடம் | செல்வி. சவுந்தரராஜன் பவதாரணி | மட்/வின்சன் மகளிர் உ.த.பா |
| 3ம் இடம் | செல்வன். ராஜநாதன் குருபவன் | மட்/ சிவானந்த தே.பாடசாலை. |
| **கிராமியப்பாடல் - பாடசாலை மட்டம்** | | |
| 1ம் இடம் | செல்வன் த. திலக்ஷன் | மட்/ சிவானந்த தே.பாடசாலை. |
| 2ம் இடம் | செல்வன் ர. கிருத்திகன் | மட்/ சிவானந்த தே.பாடசாலை. |
| 3ம் இடம் | செல்வன் பா.கிஷாந் | மட்/ சிவானந்த தே.பாடசாலை. |
| **வில்லுப்பாட்டு - பாடசாலை மட்டம்** | | |
| 1ம் இடம் | குழு | மட்/சிவானந்த தே.பாடசாலை. |
| 2ம் இடம் | குழு | மட்/அமிர்தகழி ஸ்ரீ.சி.வி.வி |
| **கிராமிய நடனம் - பாடசாலை மட்டம்** | | |
| 1ம் இடம் | குழு (களகு நாடகம்) | மட்/ புனித சிசிலியா பெ.பா |
| 2ம் இடம் | குழு (காவடி நாடகம்) | மட்/ புனித சிசிலியா பெ.பா |
| 3ம் இடம் | குழு (கோலாட்ட நாடகம்) | மட்/சிவானந்த தே.பா |
| **அட்டை ஓவியம் - திறந்த மட்டம்** | | |
| 1ம் இடம் | எஸ். ஸ்ரீ கமலச்சந்திரன் | சின்ன உப்போடை, மட்டக்களப்பு |
| **நாடகம் - திறந்த மட்டம்** | | |
| 1ம் இடம் | சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கி.ப., கல்லடி | |
| 2ம் இடம் | மட்/ சிவானந்த தேசிய பாடசாலை, கல்லடி, மட்டக்களப்பு | |

# தாய்மொழி தள்ளாடுகின்றது

முத்தமிழ் விழா திறந்த மட்ட சிறுகதைப்போட்டியில்
ஈம் இடம் பெற்ற சிறுகதை

எத்தனை பெரிய தேசம் இது. அன்று வரை வானதடதை நோக்கி வளர்ந்து கொண்டு இருக்கும் பல்லாயிரக்கணக்கான பலமாடிக்கட்டிடங்கள் பகலுக்கும் இரவுக்கும் இருக்கும் இடைவெளியை அகற்றும் வகையில் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் அணையா மின்விளக்குகள். ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக்கொள்ளும் நொடி களையும் மறந்து போய்விட்ட கடி காரங்கள். ஒன்றன் பின் ஒன்றாக எங்கோ ஒருதிசைக்கு வேகமாக சென்று கொண்டிருக்கும் கார்கள். இயந் திரத்தனமாய் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதசந்தடிமிக்க தெருக்கள்............

இவற்றையெல்லாம் ஒரு கண்ணாடி யன்னலின் ஊடாக பார்க்கத்தக்க உயரத்தில் நின்றுகொண்டிருக்கிறான் பார்த்தீபன்... இவன் ஓர் கனடாவாழ் இலங்கைக்குடிமகன்... கனடாவுக்கு வந்து இன்றோடு எட்டு வருடங்களாகி விட்டன..... அத்தேசத்தில் அவனுக்கென்று சொல்லிக்கொள்ள இரண்டு மூச்சுக்காற்றுகள் தான் கனடா காற்றோடு நாள்தோறும் கலந்து கொண்டிருக்கிறது. ஒன்று அவன் மனைவி மாதினியுடையது, மற்றயது செல்ல மகள் தமிழினியுடையது. வாடகை வீட்டில் குடியிருக்கும் குடிமகனைப்போல இன்றுவரை அந்நாட்டு அகதியாகவே வாழ்வது கொண்டு இருக்கிறான்.

எண்ணவலைகளின் ஓட்டத்தில் ஸ்தம்பித்து நின்ற பார்த்தீபனை ரிங்..ரிங்... மணிச்சத்தம் தட்டி எழுப்பியது. யார் என்று பார்காமலே பட்டினை அழுத்தி காதருகே கொண்டு சென்று மௌனம் சாதித்தான்.



செல்வி. சுஷானா யேசுதாஸசன்

'மகன் எப்பிடிடா இருக்கிறா? கோல் ஒண்டும் எடுக்கக்காணையில்ல. பிள்ள என்ன செய்றாள்? ஏன் பேசாம இருக்கா? என்று கேள்விக்கணைகளை அடுக்கிக் கொண்டே போனாள். பார்த்தீபனுக்கு கண்களே கலங்கி விட்டது. எத்தனை உறவுகள் சொந்தங்கள் அத்தனையும் விட்டுத் தன்னந்தனியே தனிமரமாய். இன்பம் என்று சொல்லி ஆர்ப்பரிக்கவும் ஆட்கள் இல்லை துன்பம் என்று சொல்லி அழவும் ஆட்கள் இல்லை. 'பார்த்தீபன் வெளிநாட்டில் இருக்கிறான்' என்ற பெயர் மட்டும்தான். இம்ம்... நம்ம தலைவிதி இப்படித்தான் ஆகி விட்டது என்று பேசத்தொடங்கினான். 'ஆ அம்மா சொல்லுங்க நான் நல்லா இருக்கன்'. 'என்னடா எங்கட எண்ட பேத்தி அவண்ட கதைய கேட்கவே ஆசையா இருக்கு' 'இருங்க அம்மா குடுக்கிறன்' 'தமிழினி.. தமிழினி... அப்பம்மா கோல்' என்று பல தடவைகள் சொல்லியும் பயனற்றதாகவே போய்விட்டன. 'அம்மா அவள் உள்ள வேலையா இருக்கிறாள்

பிறகு கோல் எடுக்கன். சரி அம்மா நான் வைக்கிறன்.' தமிழினி பேசாமல் இருந்ததன் காரணம் என்ன? என்று பார்த்திபனுக்கு தெரியும் தமிழினிக்கு பெயரில் மட்டும் தான் தமிழ் என்று வருகிறதே தவிர நிஜத்தில் அவளுக்கும் தமிழுக்கும் எந்த சம்மந்தமும்கிடையாது.

தமிழ் குடும்ப பின்னணியில் இருந் தாலும் அவள் பிறந்தது முதல் இலங்கை வந்ததே கிடையாது. அவள் குடும்பத்தை தவிர அவளுடன் தமிழில் பேச எவரும் இல்லாததால் என்னவோ அவளுக்கு அவ்வளவாக ஒன்றும் சொல்ல முடியாது. தெரியும். தமிழில் பேசும் படி பல தடவைகள் பார்த்தீபன் அவளை கண்டித்தும் நீரில் எழுதிய எழுத்தாகவே போய் விட்டன. ஆங்கிலத்தில் கதைக்க தெரிந்தவர்கள் மட்டும் தமிழினியை நலம் விசாரிப்பது உண்டு. இது ஒரு சாதாரணவிஷயமாக இருந்தாலும் இப்படி எல்லோரும் நினைத்து விட்டால் என் மொழியின் நிலைமை என்னவாகும். உறவுகளை நேசிப்பவர்களுக்கு குறிப்பாக அவனின் அம்மாவுக்கு பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கியதுதான் மிச்சம். இல்லை இல்லை என் தாய் மொழி அழிந்து போக நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். என் தாய் மொழியை நேசிக்க தெரியாத நான் மானிடனாய் பிறந்தென்ன பயன். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னாக தாய்மொழியில் எவரும் கல்வியைத் தொடரலாம் என்னும் சட்டம் வெள்ளைக்காரனின் மொழிச்சிறையிலிருந்து நம்மை விடுவித்தாலும் இன்று நாமே ஆங்கிலமொழியின் சிறைக்குள் சென்று தாழிட்டுக் கொள்கிறோம். எனப்பலவாறும் தனக்குள்ளே பல கோணத்திலும் சிந்திக்க தொடங்கினான். சட்டென்று எழுந்து தன் போனில் உள்ள நம்பரை அழுத்தி ஏதோ ஆங்கிலத்தில் டஸ் புஸ் என்று முழக்கித் தள்ளினான்.

'மாதினி...'

'மாதினி...'

'மாதினி...' அந்தக் குரலில் அதிகாரம் தெரிந்தது.

'சாமான் எல்லாம் பக் பண்ணு நாம ஸ்ரீலங்கா போறம்' என்று திடீரென சொன்னான். மாதினிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒன்றும் புரியாதவளாக திரு திரு என முழித்தாள். 'என்ன ஏதாவது பிரச்சனையா??? ஏன் இப்ப அவசரமா போறம்.' என்று கேட்டாள். 'இல்ல ஒரு பிரச்சனையும் இல்ல நாம இனி அங்க தான் இருக்கப்போறம்' என்று சொல்லி மௌனம் சாதித்தான். இதற்கு மேல்



என்ன பேசுவது என்று தெரியாமல் மாதினி சலித்துக்கொண்டாள்.

செய்தி கேட்டு எல்லோருமே ஆடிப் போனார்கள். ஸ்ரீலங்காவில் இருப்பவர்கள் எல்லோரும் கனடா செல்ல விரும்புவதும் சென்றபின் வெள்ளைக்காரனைப் போல ஆங்கிலத்தில் பேசுவதும் நம் நாட்டு கலாசாரம் மறப்பதும் தானே காலம் காலமாக நடப்பது. நான் ஒரு நாளும் என் மகள் இயந்திரமாய் இயங்குவதை விரும்பமாட்டேன். கம்பியூட்டர் முன்னாடி இருந்து தானும் ஒரு இயந்திரமாய் இயங்கித்திரிவதை என் மனம் ஒரு நாளும் ஏற்காது. முருங்கக் குச்சியிலே ஒவ்வொரு நாளும் பல்லு துலக்குவதும், நம்மூர் வாய்க்கால் வரம்பேராம் ஓடித்திரிவதும், கிட்டிப்புல்லும் பம்பரமும் வீதியோரத்தில் விளையாடுவது போன்ற இத்தனை சந்தோசத்தை என் மகள் இழக்ககூடாது.

தமிழ் மீது உள்ள பற்றில் இலங்கை வந்தான் பார்த்தீபன். அவனை வரவேற்க அவன் குடும்பமே காத்திருந்தது. எல்லோருக்கும் சந்தோஷம் பீறிட்டுப்பாய்ந்தது.

ஆனால் நீண்டநேரம் நீடிக்கவில்லை அவனது அற்ப ஆசை... விமானம் வானில் பறக்கத்தொடங்கிய நேரம் தமிழினிக்கு தமிழ்வகுப்பு ஆரம்பித்துவிட்டது...

வந்திறங்கிய தமிழினி வணக்கம் என்று சொல்ல வாயெடுக்கும் முன்பே வணங்கிய அவள் கைகளுக்கு வெள்ளைக்காரன் பாணி யில் நீட்டிய கைகளே காத்திருந்தன....

திருமதி. சுந்தரமதி வேதநாயகம்



# சித்த மருத்துவம்


கொழித்துக் கிடக்கும் இயற்கைக்குள் ஒழிந்து கிடக்கும் மருத்துவ ரகசியங்கள் பற்பல. இவ்வாறு மறைந்துகிடக்கும் மூலிகைகளின் மருத்துவ குணங்களை மனித குலத்தின் நல்வாழ்விற்கு வெளிக்கொண்டு வந்த பெருமைக்குரியதாக சித்தமருத்துவமுறை முக்கிய இடத்தை வகிக்கிறது.

சித்தா என்னும் சொல் சித்தி என்னும் சொல்லிலிருந்து வெளிவருகின்றது. சித்தி என்பதற்கு முழுநிறைவு அல்லது பேரின்பநிலை எனப் பொருள்படும். சித்தி பொதுவாக அட்டமாசித்தி என்னும் எட்டு வகை இயல்பு நிலையைக் கடந்த தெய்வீக சக்தியைக் குறிக்கிறது. இதனை எட்டியவர்கள் சித்தர்கள் என போற்றப்படுகிறார்கள். பதினெண் சித்தர்களினால் உருவாக்கப்பட்டது சித்த மருத்துவமாகும்.

சித்தமருத்துவ வரலாற்றைப் பற்றிக் கூறுபவர்கள் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உமையம்மையாருக்குக் கூறியதாகவும், தாயிடமிருந்து அதைக்கேட்ட முருகன் அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும் இச்சித்தர்களே பூமியில் சித்த மருத்துவத்தை பரப்பியதாகவும் கூறுவர். பதினெண் சித்தர்களினால் பரப்பப்பட்டது எனவும் எனவேதான் சித்த மருத்துவம்



சிவசம்பந்தமுடையது என்றும் கூறுவர். தென்னாடுடைய சிவனே போற்றி என சிவனைப் போற்றி வழிபடும் மரபும் உண்டு. இங்கு தென்னாடு என்பது பாரதத்தின் தென்பகுதிகளான தமிழ் நாடு, கேரளம் (சேரநாடு) முதலியவற்றை மட்டும் கருதுவதாக அமையாது. அவற்றிற்கு தெற்கேயுள்ள இலங்கையையும் சுட்டி நிற்கிறது. குமரிக் கண்டம் என்று அழைக்கப்பட்ட நிலப்பரப்பில் மிகவும் தென்பகுதியில் தற்போது எஞ்சியுள்ள நிலப்பகுதி இலங்கைத்தீவாகும் என்பது வரலாற்று நூலாசிரியர்களின் துணிபாகும். இலங்கைத் தீவை இராவணன் ஆட்சி செய்தான் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளது.




இராவணன் காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையில் சிவவழிபாடு சிறப்புற்றுப் பரவியிருந்தது என்று கருத இடமுண்டு. ஈழத்தின் புராதன சிவாலயணமான திருக்கோணேஸ்வரம் அதற்கு சான்று பகர்கின்றது. இராவணன் சிறந்த சிவபக்தனாக மட்டுமின்றி சிறந்த வைத்தியனாகவும் விளங்கியிருக்கின்றான். துரதிஷ்டவசமாக இராவணனால் செய்யப்பட்ட வைத்திய நூல்கள் எமக்கு கிடைக்கவில்லை. ஆனால் இராவணன் பெயரில் வழங்கும் சில வைத்திய நுல்கள் சிங்கள மொழியில் வழக்கிலுள்ளமை குறிப் பிடத்தக்கது. சித்த மருத்துவம் என்று தமிழில் உள்ளமையாலும் "தமிழ் மருத்துவம்" என்றும் பெயர் பெற்றது எனலாம்.

எனவே ஆதிகாலத்தில் சித்தமருத்துவமானது இலங்கை முழுவதும் பரவியிருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களின் மேலாதிக்கம், நட்புறவு என்பன இலங்கையில் ஏற்பட்டிருந்த காலங்களில் இவ் வைத்தியமுறை புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்திருக்கக்கூடும். தவநாத சித்தர்களில் ஒருவரான சோரக்கர் திருகோணமலையில் சித்தியடைந்தார் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. பதினெண் சித்தர்களில் புலாத்தியர், சட்டநாதர் ஆகிய இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்று சித்த மருத்துவ வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்தியிருக்க வேண்டும் என்றொரு வரலாறு கூறுகிறது.

பிற்காலத்தில் தமிழ் மருத்துவமானது இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளிலேயே பெருமளவில் கையாளப்பட்டு வந்துள்ளது. கிழக்கிலங்கையில் சித்தமருத்துவம் எவ்வாறு பரவியது என்பதற்கு பல காரணங்கள் வரலாற்று ரீதியாக முன்வைக்கப்படுகின்றது. 'மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்' என்னும் நூலில்

சேர நாடும் மட்டக்களப்பு மக்கள் குடியேற்றமும் இலங்கையைச் சூரத்தீசன் (கி.மு.247) சேர நாட்டு சேனன் கூத்திகன் ஆகிய இருவர் படையுடன் வந்து இலங்கையைக் கைப்பற்றி 22 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இலகுவாகச் சென்றடையக் கூடிய சமவெளிகள்

இருந்த மட்டக்களப்பில் இவர்களது குடியேற்றங்கள் நிகழ்ந்தன. இதனால் மட்டக்களப்பில் பழக்கவழக்க, கலை கலாச்சாரங்களும் கலந்தன.

தென் இந்தியப்படை எடுப்புக் கள் அசேலன் காலத்தில் சோழர்கள் படைஎடுத்துவந்து எல்லாளன் தலை மையில் 44 வருடங்கள் இலங்கையை ஆண்டனர். அக்காலத்தில் சோழநாட்டினர் இலங்கையில் குடியேற்றப்பட்டனர். பின்பு வாலகமபாகுவின் (காமினி) காலத்தில் (கி.மு.103) பாண்டி நாட்டு வீரர் எழுவர் படைஎடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றி பாண்டி நாட்டுக்குடிகளைக் குடியேற்றினர்.


இதனை அடுத்து வங்கநாசிகதீசன் (கி.பி.110) காலத்தில் ஒரு சோழபடை எடுப்பு நடந்தது. இதை நடத்திய சோழன் கரிகாலன், இலங்கையில் இருந்து சிறைபிடித்துச் சென்றவரைக் கொண்டு காவிரிக்கு அணை கட்டுவித் தான். இதனைப்பற்றி இரா ஜாவலிய, பூஜாவலிய இவன் பெயரைக்கூறா விடினும் கஜபாகு மன்னன் கண்ணகி சிலைகளுடன் தமிழ் மக்களையும் சிறைப் பிடித்து அங்கு சிறை வைக்கப் பட்டிருந்த இலங்கைக் கைதிகளையும் மீட்டெடுத்துக் கொண்டு வந்தானென்று புகழ்ந்து இருக்கின்றது. மட்டக்களப்பின் அருகில் குடியேற்றப்பட்டவர்கள் இங்குள்ள மக்களுடன் கலந்தனர்.

இடைக்கிடை நிகழ்ந்த படை எழுச்சிகள், தென்னிந்திய நாட்டு இலங்கை உறவு, வணிகம், தமிழ் குடியேற்றம் காரணமாக கப்பல் வந்து அடையத்தக்க இடங்களாக மட்டக்களப்பு, திருகோணமலை இலம்பித்துறை, கந்தபாணத்துறை ஆகியன கிழக்குக் கரையில் அமைக்கப்பட்டன.

கி.மு. 2ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.8ம் நூற்றாண்டு வரை ஆயிரம் ஆண்டுகள் மட்டக்களப்பில் தமிழர் வாழ்ந்தனர். அவ்வப்போது உறுகுறை சிங்கள அரசர்களின் கீழும் தமிழ்ச்சிற்றரசர்களின் கீழும் 7 பகுதியாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது. இதை அங்குள்ள ஆலயப்பட்டயங்கள் சான்றுபகர்கின்றன.

மட்டக்களப்பில் இந்திய நாகரீகம் பரவுதல் கி.பி.10ம், 11ம் நூற்றாண்டில் நடைபெற்ற சோழர்படை எழுச்சியால் திகவாபியும், தாக்கப்பட்டது. இதனால் சிங்கள இராசாக்கள் அந்த இடத்தை விட்டுச் சென்றனர். கி.பி.1017 - 1070 வரை சோழர் கடலாதிக்கம் கொண்டிருந்ததால் மட்டக்களப்பு துறைமுகங்களை அவர்கள் பெரிதும் உபயோகப்படுத்தினர். இதனால் தமிழும், சைவமும், மருத்துவமும், கலைகளும் மட்டக்களப்பில் பொலிவுடன் வளர்ந்தன.

எனினும் பிற்காலத்தில் தமிழ், மருத்து வமானது இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் பெருமளவு கையாளப்பட்டு வந்துள்ளது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராச சேகர மன்னனின் சகோதரனான பரநிருபசிங்கன் என்பவர் சிறந்த மருத்துவராக திகழ்ந்ததுடன் கண்டியரசனின் மனைவிக்கு சிங்கள வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதிருந்த வயிற்று வலியைக் குணப்படுத்தினார் என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கது.



போர்த்துக்கேயர் காலத்தில் சித்த மருத்துவ முறை ஈழத்தில் கைக்கொள்ளப்பட்டமைக்கு அமுதசாகரம் என்னும் நூல் சான்று பகர்கிறது.

சித்தமருத்துவப் பரம்பலில் கதிர்காமமும் முக்கிய இடம்பெற்றுள்ளது. பதினெண் சித்தர்களில் ஒருவரான போகநாதர் என்பவரே முருகனருளால் கதிர்காமயந்திரத்தை ஸ்தாபித்தவர் என்று கூறுவர். கதிரமலை சித்தர்களின் புண்ணிய வாசஸ்தலமாக விளங்கிவந்துள்ளது. மூலிகை வளம்மிக்க இப்புண்ணிய பூமியில் மூலிகை மருத்துவம் பெற்றிருந்த

முக்கியத் துவம் காரணமாக அங்கு மூலிகைச் சந்தை பன்னெடுங்காலமாக இருந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

கதிர்காமத்தை மையமாகக் கொண்டும் வளர்ச்சியடைந்த சித்தமருத்துவம் காலப் போக்கில் தமிழர் அதிகம் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கும் பரவி அங்கு வாழ்ந்த மன்னர்களும், சித்த மருத்துவர்களும், மக்களும் அதை பேணி வளர்த்து வந்துள்ளனர். அதன் விளைவாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வலுவான சித்த மருத் துவ பாரம்பரியத்தை தற்போதும் காணக் கூடியதாகவுள்ளது.

1950ம் ஆண்டின் பின் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசத்தில் சித்த மருத்துவம் பற்றி நோக்கும் போது ஆங்கிலேய வருகையின் பின் ஆங்கிலேய மோகமும் எம்மையாட்கொண்டதன் பயனாக பாரம் பரியமாக பல தலைமுறைகளாக பேணப் பட்டு வந்த சுதேச வைத்தியத்தின் கீர்த்தியும், புகழும் மங்கத் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணம் அரசாங்க ஆதரவு கிடைக்காமையேயாகும்.

இதனை முற்றாக அழியவிடக்கூடாது, என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் 17.11.1951ம் ஆண்டு கிழக்கு மாகாண சித்த வைத்தியசங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சித்தமருத்துவன் என்னும் காலாண்டு சஞ்சிகையினை வெளியிட்டுவந்தது. இச்சங்கத்தில் வந்து இணைந்து கொள்ளும் சித்தமருத்துவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டு செல்லும் வேளையில் 1958ம் ஆண்டுக்குப் பின் *S.W.R.D* பண்டார நாயக்கா அவர்களின் ஆட்சியின் கீழ் சுதேச மருத்துவத்துறைக்கு புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டாலும் அது தென்மாகாணத்தின் பால் வடக்கிலுள்ள ஆயுள்வேத வைத்திய முறை முன்னெடுக்கப்பட்ட அளவிற்கு சித்த வைத்தியமுறை முன்னெடுக்கப்படவில்லை. வடகிழக்கு உள்ளூராட்சி அமைப்புக்கள் குறிப் பாக வடமாகாணத்தில் தமது சுயமுயற்சியினால் வைத்தியசாலைகளை நடாத்தியது. எனினும் கிழக்கு மாகாணம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. மாகாணசபை ஏற்பட்டதன்பின் சில வைத்தியசாலைகள் திறக்கப்பட்டிருப்பினும் போதிய மருந்துக்களோ, ஆளணிகளோ, தங்கியிருந்து சிகிச்சை பெறக் கூடிய வசதிகளோ இருக்கவில்லை.

1961ம் ஆண்டு *Act No:31* பிரிவு 89 இன்படி சித்த, ஆயுள்வேத, யுனானி மருத்துவ முறைகள் யாவும் ஆயுள்வேதம் என்பதனுள் அடக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி ஆயுள்வேத வைத்தியமானது சிங்கள மக்களாலும், சித்தமருத்துவமானது தமிழ் மக்களாலும், யுனானி மருத்துவமானது முஸ்லிம் மக்களாலும் பின்பற்றப்பட்டுவந்தது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் என்பன பிரசித்தமானவையாகும். புராதன காலத்திலிருந்தே பரம்பரையின் தொடர்ச்சியாக ஒவ்வொரு கிராமத்திலும் பரிசாரிமார் அல்லது நாட்டு வைத்தியர் குடும்பம் என அழைக்கப்படும் வைத்திய குடும்பம் இருந்தது. இவர்கள் ஆரம் பகாலத்தில் செவிவழி, வாய் மொழி மூலமாக பாரம்பரியமான நடைமுறையில் வைத்திய முறைகளை கடைப்பிடித்தனர். நூலுருப்பெறாத பெறுமதியான ஏட்டுச் சுவடிகள் பல இவர் களிடம் இருந்துள்ளது. இவை தந்தையிடமிருந்து மகனுக்கும், தாயிடமிருந்து மகளுக்கும் அல்லது மருமகளுக்கும், குருவிடமிருந்து சீடனுக்கும் பல்லாண்டுகளாக சென்றடைந்த வைத்திய முறையாகும். இலங்கையில் சித்த வைத்தியத்தில் பெயர்போன இடங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும். சகல நோய்களுக்கும் திறமைச் சித்தியுடன் மருத்துவம் செய்யக்கூடிய பரம்பரை வைத்தியர்கள் நீண்டகால அனுபவமும், ஆற்றலும் உடையவர்களாக திகழ்ந்துள்ளனர். நம் நாட்டுவைத்தியர்கள் பலர் ஆங்கில வைத்தியத்தால் தீர்க்க முடியாத பல நோய் களைத் தீர்த்துவைத்துள்ளனர். பக்க விளைவு அற்றதும் நிரந்தர தீர்வைக் கொடுக்கக் கூடியதும் சித்தமருத்துவ முறையாகும்.

நோயாளியின் நாடியைப் பரிசோதித்து வாத, பித்த, சிலோற்பனம் மூன்றிற்குள்ளும் எதற்குள் நோய் அடங்குகிறது என உண்மை யான நோயைக் கண்டுபிடித்து அதற்குரிய மருந்தைக் கொடுப்பார்கள். இது பத்தியம், அபத்தியம் ஆகிய இரு கூறுகளை வலியுறுத்துகின்ற உணவு வகைகளில் கொள்ள வேண்டியவை, தள்ளவேண்டியவை பற்றி தெளிவாகக் கூறுகின்ற நோயினைத் தீர்க்கும் முறையாகும்

'நோய்நாடி நோய் முதனாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோய் நாடல் - நோயை அறிந்திட வைத்தியர் கடைப்பிடிக்கும் அணுகுமுறையைக் குறிக்கும். நோய் முதநாடி - நோய் தோன்றிடக் காரணமான காரியங்களை விளக்கமாக அறிந்து

கொள்ள கடைப்பிடிக்கும் அணுகுமுறையைக் குறிக்கும். நோய்கள் பெரும்பாலும் நோய்க் குறிகளினாலும் நோயின் அடையாளங்களி னாலும் அறியப்படுகின்றன. நோய் வேறு எட்டு வகை ஆக்கக் கூறுகளினால் அறியப் படுகின்றது. அவை நாடி, ஸ்பரிசம், நாக்கு, நிறம், மொழி, விழிகள், மலம், சலம் என்பவையாகும். 4488 வகை நோய்கள் வகைப்படுத்திய சித்தர் கள் இந்த எட்டு வகை ஆக்கக்கூறுகளை விரிவாக விபரித்திருக்கின்றனர். நோயின் காரணம், நோயின் அடையாளங்கள், குறிகள், இவைகளுக்கான சிகிச்சைகள் யாவும் மிகவும் தெளிவாக பல்வேறு சித்தர்கள் ஏட்டுச்சுவடிகளில் எழுதிவைத்துள்ளனர். அவை இன்று பல நூ ல் வடிவம் பெற்றுள்ளது.

உலகில் இன்று மருந்தை உண்ணா தவர்கள் இல்லை என்றே சொல்லலாம். இயற்கை மருத்துவர்கள் உணவையே மருந்தாக உண்ணச்செய்விக்கின்றனர். வள்ளுவர் கூட "மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு" என்கிறார்.

சித்தர்கள் உடல், உயிர், உள்ளம் மூன்றிற் கும் மருந்தினை சொல்லிச் சென்றுள்ளனர்.

எமது பிரதேசத்தில் சாதாரண மனித வாழ்க்கை நடை முறையில் கடைப்பிடிக்க வேண்டிய உடல் ஆரோக்கியம் பற்றி சித்த மருத்துவம் கூறுவதை நோக்குகையில்,

தினம் ஒன்று, வாரம் ஒன்று, மாதம் ஒன்று, வருடம் ஒன்று, தினம் இரண்டு, வாரம் இரண்டு, மாதம் இரண்டு, வருடம் இரண்டு அது என்ன? தினமும் ஒருமுறை மலம் கழித்தல், வாரம் ஒருமுறை பட்டினி இருத்தல், மாதம் ஒருமுறை வேறு இடத்தில் தங்கியிருத்தல், வருடம் ஒருமுறை தூங்காமல் விழித்திருத்தல், தினமும் இருமுறை உண்ணல், வாரம் இரு முறை எண்ணெய்க்குளியல், மாதம் இருமுறை உடலுறவு கொள்ளல், வருடம் இருமுறை குடல் சுத்திக்காக பேதி எடுக்கவேண்டும்.

உணவில் அறுசுவை குறைந்தால் - நாம் உண்ணும் உணவில் அறுசுவை மீறினும் குறையினும் நோய் உண்டாகிறது. உணவில்
துவர்ப்பு குறைந்தால் - காமாலை ஏற்படும்
உவர்ப்பு குறைந்தால் - வயிற்று வலி ஏற்படும்
இனிப்பு குறைந்தால் - உடல் மெலியும்
புளிப்புக் குறைந்தால் - உறக்கம் குறையும்
கசப்புக் குறைந்தால் - காய்ச்சல் வரும்
காரம் குறைந்தால் - சீரணம் குறையும்.

**எமது பிரதேச பயனுள்ள பழமொழியும் சித்தமருத்துவமும்**

"அரசமரத்தைச் சுற்றி அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாள்" அரசமரத்தின் குணம் உடல் வன்மையைப் பெருக்கும், சுரத்தையும் முக்குற்றங்களையும் போக்கும், சூலகம் சம்பந்தப்பட்ட கோளாறுகள் போக்கி பெண் சூலுறச் செய்யும். அரசமரக் காற்றுப் பட்டால் சூலகம் சம்பந்தமான கோளாறுகள் விலகும். இதன் இலை கொழுந்தை பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் உண்டு வந்தால் சூலுறுவர். அந்தப் பழக்கத்தை உலகறியச் செய்வதே இப்பழமொழியின் நோக்கமாகும்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி" ஆலமரத்தின் குச்சியும் வேலமரத்தின் குச்சியும் கொண்டு பல் துலக்கினால் பற்கள் உறுதியாக இருக்கும். ஆலம் விழுது கொண்டு பல் துலக்கினால் அதிலிருந்து வரும் சாறு வாயில் தோன்றும் அச்சரம் போன்ற வாய்ப்புண்களை குணமாக்கும் தன்மை கொண்டது. வேல் என்பது கருவேலம் மரத்தினைக் குறிக்கும்.

"உடம்பை முறித்து கடப்பில் போடு" உழைத்து விட்டு சோர்வுடன் வந்தவர் கடம்ப மரத்தால் செய்யப்பட்ட கட்டிலில் படுக்க வேண்டும். அக்கடம்ப மரம் வெப்பமகற்றி உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவது இதன் பொதுக் குணம். குளிர்சுரம், மூட்டுப்பிடிப்பு, கண்நோய், வாய்ப்புண், தொண்டைப்புண், வாதநோய்கள், வயிற்றுவலி, மனச்சோர்வுகளை அகற்றும் என்பதால் கடம்பு மரக்கட்டிலில் படுக்கும் படி கூறுகிறார்கள் மருத்துவர்கள்.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு மாலையில் கடுக்காய்"சூரியக்கதிர்கள் தாக்கம் ஓரே நாளில் மூன்று விதமாக மனித உடலைத் தாக்குகின்றன. காலையில் உடலில் பித்தத்தை உண்டு பண்ணுகின்றது. பகல் வெப்பத்தையும் மாலை உடலுக்கு வன்மையைச் சேர்க்கிறது. எனவே காலையில் இஞ்சிச் சாறு பித்தத்தைச் சமப்படுத்தவும், பகலில் சுக்கு சூட்டைத் தணிக்கவும், மாலையில் கடுக்காய் உணவு செரித்தல் (ஜீரணம்) முதலான பல்வேறு நன்மைகளை உடலில் செய்யும் பொருட்டு அறிவுரை கூறப்பட்டுள்ளது.

"காலையில் கல்லில்நட மாலையில் புல்லில்நட" காலை மலை ஏறுதலும், மாலையில் அறுகம்புல் தரையில் கால்பதிய நடத்தலும் வாத, பித்தங்களை குணப்படுத்தும் என கூறப்படுகிறது.

இவ்வாறாக ஆயிரக்கணக்கான பழமொழிகளும் விளக்கங்களும் கூறப்பட்டு வருகின்றது.


மட்டக்களப்பில் சித்த வைத்தியத்தைப் பேணிக்காப்பதற்காக "கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கம்" மட்/மண்முனை வடக்குப் பிரதேசத்தை மையப்படுத்தியதாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச் சபையை உருவாக்கி சித்த மருத்து வர்களை ஒன்றிணைத்தல், சித்தமருத்துவத்தின் தனித்தன்மையைப் பேணிக்காத்தல், வளர்த்தல் என்னும் குறிக்கோள்களை உடையதாக சேவையாற்றி வருகின்றது.

முக்கியமாக இவை இரண்டின் அங்கத் துவர்களும் அகில இலங்கை அரசாங்க ஆயுள் வேத சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டனர். சர்வாங்கம் பொது *(G)*, விஷேடம் *(S)*(முறிவு, விஷக்கடி) ஒருசிலர் விஷேடம் ஐந்து வருடங்க ளுக்குள் செய்து பொதுவிற்குள்ளும் சென்று இரண்டினுள்ளும் பதிவை மேற்கொண்டனர். (உ - ம்) வைத்தியர் எஸ். சண்முகப்பிள்ளை அவர்களைக் குறிப்பிடலாம். இவற்றுடன் சித்த ஆயுள்வேத சங்கம், ஆயுள்வேத சம்மேளனம், சுதேசவைத்திய அபிவிருத்திச்சங்கம், சித்தமருத் துவ பட்டதாரிகள் சங்கம் என்பன இக்காலத்தில் தோன்றியுள்ள இணைந்து செயற்படும் சங்கங் களாகும்.

சித்த மருத்துவ வளர்ச்சி யில் இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் சித்தமருத்துவம் சம்பந்தமான மகா நாடுகள், கருத்தரங்குகள், சித்த மருத்துவ நூல்கள், சஞ்சிகைகளை வெளியிட்டும், மூலிகைக் கண்காட்சிகளை நடாத்தி மூலிகை சம்பந்தமான அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியும், சித்தமருந் துக்களின் உற்பத்தியை ஊக்குவித்தும், சித்த மருத்துவர்களின் அடிப்படை உரிமைகளுக்குக் குரல் கொடுத்தும் இச்சங்கங்கள் தமது பணிகளைச் செய்துவருகின்றன. அத்துடன் 1989ம் ஆண்டு வட கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சித்தவைத்திய சங்கம் 1995ம் ஆண்டு 01.07.1995, 02.07.1995 முதல் மூலிகைக் கண்காட்சியையும், 14.06.1997, 15.06.1997 இரண்டாவது மூலிகைக் கண்காட்சியையும் நடாத்தியுள்ளது. தொடர்ந்தும் மூலிகைக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. இச்சங்கத்தினால் "சித்தமருத்துவன்" என்னும் காலாண்டு சஞ்சிகையானது பல விடயங்களை உள்ளடக்கி வெளிவந்து கொண்டுள்ளது. முக்கியமானதாக அங்காதிபாதம், நாடிநன்னூல், அதிர்ச்சி தரும் நோய்கள், உயிர்காக்கும் சகாயங்கள், பாட்டி வைத்தியம், சிறுவர் பகுதி (குழந்தை நோய்களும், சிகிச்சைகளும்), அரிவையர் அரங்கம் போன்ற பயனுள்ள காத்திரமான பல படைப்புக்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. சித்த வைத்தியர் கலாநிதி. வை. க. வினாயக மூர்த்தி பண்டிதர் ஏட்டுச் சுவடியாகவிருந்த "அங்காதிபாதம்" என்னும் சித்தவைத்திய அரிச்சுவடி நூல் ஒன்றினை தமிழ்மணம் கமழ விளக்கவுரையுடன் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.

மட்/சீலாமுனையைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீ இராமநாதன் கலைவாணன் (கண்ணன்) அவர்களினால் "மூலிகை மருத்துவம்",



**உடலில் பித்தத்தை உண்டு பண்ணுகின்றது. பகல் வெப்பத்தையும் மாலை உடலுக்கு வன்மையைச் சேர்க்கிறது. எனவே காலையில் இஞ்சிச் சாறு பித்தத்தைச் சமப்படுத்தவும் பகலில் சுக்கு சூட்டைத் தணிக்கவும் மாலையில் கடுக்காய் உணவு செரித்தல் (சீரணம்) முதலான பல்வேறு நன்மைகளை உடலில் செய்யும் பொருட்டு அறிவுரை கூறப்பட்டுள்ளது.**

"தீரான நோய்களைத் தீர்த்து வைக்கும் சித்த வைத்தியம்" என்னும் இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கி.மா.சி.வை சங்கத்தினால் மற்றும் சங்க வைத்தியர்களின் நலன் கருதி சுயதொழில் வழங்கும் கடன் திட்டமும், அந்திமகால கொடுப் பனவு வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, மட்/புது குடியிருப்பில் தற்போதுள்ள மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை மருந்தகத்துடன் இணைந் தாற்போல் உடைவு முறிவு, மனநோய், விஷக்

கடி பிரிவுகளை உள்ளடக்கிய இருபது படுக்கைகளைக் கொண்ட தங்குவிடுதி அமைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையும் கிழக்கு மாகாண சித்தவைத்திய சங்கமும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டு பிற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபை சுற்று நிருபத்துக்கமைய மத்திய சிகிச்சை நிலையங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, மஞ்சந்தொடுவாய், கல்லடி (மட்டக்களப்பு நகரம்) இயங்குகின்றன.

ஆயுள்வேத சித்தவைத்தியத் துறையில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தினாலும், ஆயுள் வேத பாதுகாப்புச் சபையினாலும் பரம்பரை வைத்தியர்களுக்கு பலபட்டங்களும் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த வகையில் சித்தமருத்துவமணி, சஹஷ்ராபிஷேக வைத்திய சூரி, வைத்தியதிலகம், மூலிகை வேந்தன், வைத்திய ஜோதி, சித்தமருத்துவ திலகம் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் மண்முனை வடக்குக் கலாச்சாரப் பேரவையினால் கலைஞர் கௌரவத்தின் போது வைத்தியத் துறைக்கு கலைச்சுடர் விருதினை வைத்தியர்களான ந. வேல்முருகு (மட்டக்களப்பு ஊறணி), க. விநாயகமூர்த்தி (நொச்சிமுனை), க. நடராஜா (சுழாவடி), இ. கலைவாணன் (சீலாமுனை), வை. சாமித்தம்பி (கல்லடி), வள்ளியம்மை பேரின்பம் (கல்லடி) (முறிவுவைத்தியம் S) ஆகியோர் விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சித்தவைத்தியர்களைப் பொறுத்த வரையில் இலங்கை ஆயுள்வேத வைத்திய சாலையில் தம்மைப்பதிவு செய்து கொண்ட ஒருவரே சுதேச வைத்தியம் செய்வதற்கு உரித்துடையவராவார். ஆயுள்வேத வைத்திய சபையில் ஆயுள் வேதவைத்தியர், யுனானி வைத்தியர், சித்தவைத்தியர் என்றே பதிவுகள் இடம்பெறுகின்றன. இதில் தமழ் வைத்தியர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் பரம்பரை வைத்தியர்களாகவோ, பல்கலைக்கழக பட்டம் பெற்ற வைத்தியர்களாகவோ அல்லது தனியார் வைத்தியக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களாகவோ இருந்தாலும் பதிவு இலக்கம் தொடர்ச்சியான இலக்கமே வழங்கப்படுகின்றது. எந்த ஏற்றத்தாழ்வும் இன்றி சித்த வைத்தியர்கள் என்றே பதிவு செய்யப்படுகின்றனர். இவ்விதமே ஆயுள்வேத யுனானி வைத்தியர்களும் பதிவு செய்யப்படுகின்றனர். இவர்களை விட பதிவு செய்யாத பல நூற்றுக்கணக்கான பரம்பரை வைத்தியர்களும் உள்ளனர். மட்/மண்முனை வடக்கு 96 ஊர்களை உள்ளடக்கியுள்ளது. சுமார் 364,043 சதுரகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. 48 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது. 96 ஊர்களிலும் பலதுறையைச் சேர்ந்த கிராமிய மருத்துவர்கள் பரம்பரை பரம்பரையாக மருத்துவ தொழிலை செய்து வந்துள்ளனர். குறிப்பாக சித்தம், ஆயுள்வேதம், யுனானி என்பன அவற்றுள் அடங்கும்.

மண்முனை வடக்கு பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட சுதேச மருத்துவர்களாக 2014ல் 13,000 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் பரம்பரை வைத்தியர்களாக இருந்து சிறந்த சேவையாற்றியுள்ளனர் ஆனால் பதிவு செய்யப்படாமல் உள்ளனர். தற்போது பரீட்சை எழுதிக்கொண்டிருப்பவர்களும் உள்ளனர். (பதிவிற்காக காத்திருப்பவர்கள்) 10 தலைமுறையைச் சார்ந்தவர்களும் எமது பிரதேசத்தில் பரம்பரையாக வாழ்ந்து சித்த மருத்துவத் துறைக்கு பாரிய பங்காற்றியுள்ளனர்.

எமது பிரதேச மக்களின் உணவும் சமையல் முறையும் அன்று இயற்கையோடு இயைந்ததாகவும் ஆண்கள், பெண்கள் உடல் உழைப்பு மிகுதியாகவும் காணப்பட்டது இயந்திரமயமாதலுக்கு முன் வயல்வேலைகள், தோட்டவேலைகள், சேனைப்பயிர்ச் செய்கை, சிறுபயிர்ச் செய்கைகள், விறகு வெட்டுதல், மீன்பிடி, சலவை இவற்றில் எல்லாம் உடலுழைப்பு மிகுதியாகக் காணப்பட்டது. உரலில் இடித்த தவிட்டரிசியும், இரசாயணக்கலவை கலக்காத மரக்கறியும், பழவகையும் உணவாகப் பயன்படுத்தப்பட்டன. மண்பானை, சட்டி சமையல் இவைகளினால் நோயின் தாக்கத்தின் அளவு குறைவாகக் காணப்பட்டது. சுவைக்காக மட்டுமன்றி உடல் ஆரோக்கியம், சமிபாடு ஊட்டச்சத்து என முக்கியத்துவப்படுத்தப்பட்டு பார்த்துப் பார்த்துச் செய்யப்பட்டது. உணவில் வெள்ளைப் பூண்டு, வெந்தயம், ஓமம், கடுகு, மிளகு, சீரகம், பெருங்காயம் இன்னும் பல மருத்துவ குணமுள்ள சரக்குகள் சமையலில் சேர்க்கப்பட்டன.

ஆனால் இன்றோ நேரம் போதாது என்று கூறி காலை, இரவு மதியச் சாப்பாடு கூட சாப்பாட்டுக் கடைகளிலே பெறப்பட்டு உண்ணப்படுகின்றது. சுவையூட்டிகள், மசாலா, எண்ணெய், காரம் போன்ற வற்றால் அல்சர், இருதயநோய், நீரிழிவு, வாதம், பித்தம், சலம்

சம்பந்தமான நோய்க ளுக்கு ஆளாகின்றனர். தொற்றும், தொற்றா நோய்களின் தாக்கமும் கூடுதலாகக் காணப்படுகின்றது. வைத்தியசாலைகளும் நிறைந்து வழிகின்றது. ஆரம்பகாலத்தில் சுதேச மருத்துவமனையினால் பல நோய்கள் தீர்த்து வைக்கப்பட்டன. ஆனால் இன்று ஆங்கில நவீன மருத்துவமுறைகளின் வளர்ச்சியியால் உடனடித் தீர்வை விரும்பும் மனிதன் அதிக பணச் செலவில் ஒரு நோய்க்கு மருந்து செய்ய இன்னொரு நோய் உருவாவதையும் தடுக்க முடியாதுள்ளது. அதேவேளை உடல் நோய்க்கு பல வெளித்தாக்கங்களும் காரணமாக அமைகின்றன.

பெற்றோலிலிருந்து கிளம்பும் புகை, புகையிலை பயன்பாடு தொழிற்சாலைகள் பரப்பும் மாசு, சத்தம், பல்பொருள் இணைப் பான ஆடைகள்*(synthetic clothes)* மற்றும் மன அழுத்தம் ஏற்படுத்தும் காரணிகள் அத்துடன் பருகும் நீர், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு மாசுக் கலவையாகவே உள்ளது. சனத்தொகைப் பெருக்கம் இவை அனைத்தும் ஒன்றிணைந்து பல நோய்கள் பெருகிக் கொண்டே செல்வதற்கு ஏதுவாக காணப்படுகிறது. நவீன மருத்துவம் வளர்ந்து கொண்டே செல்லும் அதேவேளை நவீன தொற்றும் தொற்றா நோய்கள் பெருகி மனிதனை பாடாய்படுத்துகிறது. ஆய்வுகளின் படி சிறுவர்களிலிருந்து பெரியோர்வரை ஏதோ நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்களாகவே காணப்படுகின்றனர்.

சித்தமருத்துவமானது பரம்பரைச் சொத்தாகவும் தன்னிகரில்லாத மருத்துவமாகவும் இருப்பதுடன் ஆங்கில மருத்துவத்தில் தீர்க்க முடியாத பல நோய்களை நிரந்தரமாக சித்தமருத்துவம் தீர்த்து வைத்துள்ளது. இரண்டிற்குமுள்ள வேறுபாடு ஆங்கில வைத்தியம் உடனடி நிவாரணமாகவும், தோற்றமளிக்கும், பக்க விளைவுகள் உள்ளதாகவும் தொடரும் நோயாகவும் காணப்படும். சித்தமருத்துவம் தாமதமாகவே குணப்படும், பக்கவிளைவு அற்ற, நிரந்தர தீர்வாகக்காணப்படும். நோயாளரின் கையைப்பிடித்து நாடி பார்த்து வாதம், பித்தம், சிலோற்பனம் மூன்று வகைக்குள் எதில் அடங்கும் என அறிந்து அதற்கேற்ப மருந்துகளை கொடுப்பார்கள். நோயின் குணம் குறிகளுக்கு வைத்தியம் செய்யாமல் அடிப்படைக் காரணத்தை அறிந்து வைத்தியம் செய்வது சிறப்பிற்குரியதாகும்.

*1000* ஆண்டுகள் உயிர் வாழ்ந்த சித்தர்களிலே சிறப்பிற்குரியவராகப் போற்றப் படும் திருமூலர் தனது திருமந்திரத்திலே
"உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திறம்பட மெய்ஞானம் சேரவும்மாட்டார் உடம்பை வளர்க் கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"
இவ்வாறு நோயற்ற வாழ்வின் சிறப்புக்களைப் பாடுகின்றார்.

சித்த மருத்துவத்தின் சிறப்பை நோக்கும் போது சித்த மருத்துவம் அறிவியல் மட்டுமல்லாது ஒரு கலையும் ஆகும். மிகத் தொன்மையான சித்தம், ஆயுள்வேதம் தாவர உலகத்தில் இருந்து உருவாக்கப்பட்டதாகும். இலை, காய், கனி, மலர், மரவேர், மரப்பட்டை என வெவ்வேறு பாகங்களின் மருத்துவச் சிறப்பு பெற்று விளங்க அவற்றை முழுமையாக பயன்படுத்திக் கொண்டவையே இவை இரண்டுமாகும்.


இந்த வைத்திய முறையின் அடிப்படை கொள்கை இயற்கை என்பது மனிதன், மனிதன் என்பவர் இயற்கை. எனவே இயற்கையும் மனிதனும் ஒன்று அண்டம் பேரளவுடையது. அண்டத்தில் வாழுகின்ற மனிதன் சிறுவடிவம். எனவே பிரபஞ்சத்தில் நீடிப்பவை மனிதனுக் குள்ளும் நீடிக்கும். வேறுவகையில் கூறுவதா யின் மனிதன் என்பவன் ஒரு சிறு பிரபஞ்சமா கவே திகழ்கின்றான். மனிதனிடத்தில் ஐவகை ஆதாரப் பொருள்களும், தத்துவப் பொருள்க ளும் தாவர, மிருக உலகத்திலுள்ள அடிப்படைப் பொருள்களுக்கும் (elements - பூதங்கள்) காணப்படுகின்றன.

சித்தவைத்திய முறையில் மூலப் பொருட்களான மண், தீ, நீர், வாயு, ஆகாயம் ஆவியாகக் கூடிய ஈதர் என்னும் பொருட்கள் யாவும் உலகத்தின் சிருஷ்டியாக அமைந்து ள்ளன. மனித உடல் உறுப்புக்கள் அமைப்பிலும் நோய் உண்டாகும் காரணக் கூறுகள் ஐவகை மூலசக்திகளுக்குள்ளே கட்டுப்பட்டு இருக்கி ன்றன. காற்று, நீர், உஷ்ணம் என்பவற்றால் மனிதசரீரம் அமைந்துள்ளது. அத்தோடு வாதம், பித்தம், கபம் என்னும் உயர் நிலைகளின் சமநிலை (முத்தோசங்கள்) மாறுபடும் போது நோய் உண்டாகின்றது.

**கற்ப மூலிகைகள்**

ஒரு மூலிகை வேறொரு பொருளுடன் சேரும் போது உயர்ந்த நிலைமாற்றத்தை உண்டு பண்ணினால் அதற்கு ஆற்றல் இருக்கிறது. எனக்கண்டறிந்தார்கள். இந்த மூலிகைகளைக் கொண்டு பாடாணங்களை, இரத்தத்தைக் கட்டினார்கள், உபரசங்களைச் சத்தாக்கினார்கள். இந்த கற்ப மூலிகைகளைக் கொண்டு சரக்குகளுக்கு சுருக்கு கொடுத்து சித்தியாக்கினார்கள். இத்தகைய மருந்துகளை காய கற்ப மூலிகைகளாக உண்டனர். உண்ணக் கொடுத்தனர்.

சித்தர்களின் நோக்கம் சாதாரண உலோகத்தை பொன்னாக்குவதல்ல. சாதாரண உடலைக்கல்லாக்கி உயிர் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கு ஏதுவாக்கி எண்ணங் களை மனதில் ஒரு முகமாக்கி சித்தியடைவது (இறைவனுடன் இரண்டறக் கலக்க வேண்டு மென்பதே ஆகும்). இந்நிலையில் தாவரங்க ளாகக் கிடைக்கும் மூலிகைக் கற்பங்களையும்



அதன் பயன்களையும் கூறினார்கள். மறுபுறம் வெகு எளிதில் யாராலும் செய்யமுடியாத மருந்துக்களை பாடாணப் பொருட்களை (பாதரசம்) காய கற்ப மருந்தாக ஆக்கி அதன் பயன்களையும் கூறினார்கள். காய கற்ப மருந்துகளின் மூலவர்களாக தமிழ்ச் சித்தர்களே விளங்கியுள்ளனர் என்ற உண்மையை நூல்க ளின் வாயிலாக அறிய முடிகின்றது.

உடலை (காயத்தை) கற்பகமாக வைத்துக் கொள்ள சித்தர்கள் ஐந்து முறைப்பாடுகளை கையாண்டார்கள் என்று சித்த நூல்கள் கூறுகின்றன.

1. யோக நெறியைக் கொண்டு மூச்சுக்காற்றை முறைப்படி சேமித்து அதனால் குருதி தூய் மையடைந்து நீண்ட ஆயுளுடன் வாழும் முறை.


2. விந்து விரயமாகாமல் காப்பதன் மூலம் காயத்தை வலுவாக வைத்துக் கொள்ளும் முறை.

3.மூப்பு என்னும் உப்புக்களின் மூலமாக காயத்தைக் கற்பமாக வைத்துக் கொள்ளும் முறை.

4. பாதரசம், கந்தகம், தங்கம் போன்றவற்றைப் பக்குவப்படுத்தி மருந்தாக்கி காயகற்பத்திற்கு பயன்படுத்தும் முறை.

5. மூலிகைகளைக் கண்டறிந்து கற்ப மூலிகை களாக அவைகளைப் பயன்படுத்த காயகற்பம் செய்து கொள்ளும் முறை.

“வானான பாத்தியெல்லாம் வரிசையாக்கி
வைக்கின்ற மூலிகைதான் கரியசாலை
தேனான கரந்தை செருப்படை யோடோமம்
செப்பரிய வல்லாரை நீலிதானே”
தானான கருவீழி கறுத்த வாழை
தக்கான கருநெல்டிவி கருத்த நொச்சி
கானான கருவேம்பு கறுத்த வேலி
கருத்த மணி தக்காளி கருவூமத்தை
பானான அறுகீரை கருங்கடுக்காய்
பாங்கான கஞ்சாவும் மற்றுமூலி
வேனான வேர் விரைகள் கொடிகள் கொம்பு
விதித்து வைத்துக் காய்ந்த பின்பு
விரையை வாங்கே.




சித்தர்கள் கற்பங்களை உண்டு நீண்டநாள் உயிர் வாழ்ந்தமைக்கு உதாரணமாக :- திருமூலர் - கரிசாலையையும் தாம் ஓமம் என்ற கற்பத்தையும், காலங்கிநாதர் - சரந்தை என்ற மூலிகையை உட்கொண்டார் என்றும், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகியோர் செருப்படைக்கற்பகம் உண்டார்கள் என்றும் கூர்மமுனி கழிவீழிகற்பம் உண்டு நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்தார் என அறியக்கூடியதாக உள்ளது.

தெய்வ பசுமலை மருந்து மூலிகைகள் சித்தர்கள் கூறிச் சென்ற சிறந்த பசுமலை மருந்தின் சிறப்புக்கள் சிலவற்றை நோக்கும் போது,

அறுகம்புல் - மருத்துவம்

சித்தர் கண்ட சிறந்த அறுகனால்
முத்தோடம் நீங்கும் முகமது பொலியும்
புத்தியும் சிறக்கும் புதுமுறுக்கு ஏறும்
வித்தகர் போற்றும் பசுமலை மருந்தே!




முத்தோடம் என்னும் வாதபித்த கபங்களைத் தடுக்கும் ஆற்றல் அறுகம் புல்லுக்க உண்டு. முகத்தில் பொலிவைக் கொடுக்கும். நினைவாற்றலோடு கூடிய அறிவை சிறக்கச் செய்யும். நரம்பு மண்டலங்களின் புதுத்தென்பையும், முறுக்கையும் கொடுக்கும் உடல் நலம் கேடுறாமல் காக்கும்.

துளசி

பல்வலி கண்டால் பறித்துவா துளசியை
கல்லில் வைத்து மிளகுடன் பொடித்து
பல்லிடை வைத்தால் பத்தே நொடியில்
பல்வலி போக்கும் பசுமலை மருந்தே.

வில்வம்

வில்வத்தின் இலை காய் வேர் பிசின் பட்டை
யெல்லாம் செல்வமாய் கண்டனர் சித்தர்ப் பெருமக்கள்
வெல்லலாம் சுற்றையும் வில்வத்தின் துறையாலே
சொல்லுமே தெளிவாக பசுமலை மருந்தே!

வில்வத்தின் இலை, காய், வேர், பிசின் என்று எல்லாப் பொருட்களையும் மருந்துப் பொருட்களாகச் சித்தர்கள் கண்டு உரைத்துள்ளனர். தினசரி இதனைப் பயன் படுத்தி வந்தால் சாவைக் கூட சில காலத்துக்கு தடுத்து நிறுத்தலாம்.

எருமைத் தயிரில் இளம் பிஞ்சையரைத்து
பொருகும் குன்மமும் பொல்லாக் கடுப்பும்
ஒரு விடக் கொடுக்க உயர்ந்த வில்வமே
மருவுக இந்த பசுமலை மருந்தே!

வயிற்று வலியை உண்டாக்கும் வயிற்றுக் கடுப்பும் மற்றும் குன்ம நோய்களுக்கு வில்வம் பிஞ்சை நன்றாக அரைத்து எருமைத் தயிரில் கலந்து கொடுக்க வேண்டும். சீதக்கழிசல் கூட நிற்கும், பெரும்பாலும் சிறுவர்களுக்கு பயனுள்ள மருந்தாகும்.

வேம்பு

வேம்பின் இலை காய் வேருடன் பூ பழம்
காம்பும் மருந்தாம் கிருமி கொல்லி
போம் பல பிணிகள் புசித்தால் காற்றை
ஆமிது தெய்வீக பசுமலை மருந்தே!
சொறியுடன் சிரங்கும் சுகமிலாமத் தோல்நோய்
குறி செயும் அம்மைக் குமட்டும் பித்தம்



சித்தமருத்துவத் துறை மேலும் வளர்ச்சியடைவதற்கு அரச அங்கீ காரம் முக்கியமானதாகும். சித்த மருத்துவத்துறை ஆளணிகள், சித்தமருத்துவங்கள், மூலிகைத் தோட்டம், சித்தமருத்துவ ஆய்வு மையம் இவையாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. சித்த மருத்துவர்களின் சுமையைக் குறைக்கக்கூடியவை. அரச அங்கீ காரம் பெறப்படுமாயின் தரமான மருந்துக்களை தயாரிக்க முடியும்.



பறித்த வேம்பிலை பட்டாய் பறக்குமே
அறிந்ததைச் சொன்னேன் பசுமலை மருந்தே!

இதுபோன்று ஆடைதோடை, குப்பை மேனி, மா, வாழை போன்றவையும் மருத்துவச் சிறப்புமிக்கதாகும்.

முடிவுரை:-

தற்காலத்தில் ஆங்கில மருத்துவம் முன்னேறிய அளவிற்கு சித்த மருத்துவம் பின்தங்கி காணப்படுவதற்கான காரணம் யாது என ஆராயும்போது எத்தனையோ நூற்றாண்டு களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகளும் பிரதிகளும் திருத்தியமைக்கப்படாத நூல்க ளுமே பெருமளவில் உள்ளன.

தேவையான மருந்துக்களை ஒவ் வொரு சித்த வைத்தியரும் தமது சொந்த முயற்சியினாலேயே தயாரிக்க வேண்டியுள்ளது. அவற்றிற்குத் தேவையான மூலிகைகள், தாதுக்கள், விலங்கு வர்க்கப் பொருட்கள் என்பவற்றை அவர்களே சேகரிக்க வேண்டி யுள்ளது. அவற்றை பாதுகாக்க சுத்தி செய்ய, மருந்து தயாரிப்புக்காக உபகரணம், மருந்துக் கூடம் அமைத்தல் முதலியவற்றிற்கு அவர்கள் பெரும் தொகையான பணத்தை முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

சித்தமருத்துவத்துறை மேலும் வளர்ச்சியடைவதற்கு அரச அங்கீகாரம் முக்கிய மானதாகும். சித்தமருத்துவத்துறை ஆளணிகள், சித்தமருத்துவங்கள், மூலிகைத் தோட்டம், சித்தமருத்துவ ஆய்வு மையம் இவையாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. சித்த மருத்துவர்களின் சுமையைக் குறைக்கக் கூடியவை. அரச அங்கீகாரம் பெறப்படுமாயின் தரமான மருந்துக்களை தயாரிக்க முடியும், மருந்து தயாரிப்பில் புதிய முறைகளை புகுத்தமுடியும், இந்திய மற்றும் பிற வெளி நாட்டிலுள்ள சித்தமருந்து தயாரிக்கும் நிறுவனங் களுடன் இலகுவில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

சித்தமருத்துவ சிகிச்சை நிலையங்க ளுக்கு சீரான சித்த மருந்துக்களை விநியோ கிக்க முடியும். தனிப்பட்ட முறையில் தொழில் புரியும் சித்த மருத்துவர்களுக்கு நிலையான விலையில் தரமான மருந்துக்களை வழங்க முடியும். சித்த மருத்துவ பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். சிதறிக் கிடக்கும் சித்தமருத்துவர்களை ஒருங்கிணைந்து அபிவிருத்திக் வழிகாண வேண்டும், ஏட்டிலுள் ளவை நூல்களாக வெளிவர வேண்டும், தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி கல்விப் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், சித்தவைத்திய சாலைகள் பல தோற்றம் பெறச் செய்தல் வேண்டும் போன்றவை முன்னெடுக்கப்படும் போது எமது மட்டக்களப்பு மாவட்ட சித்த மருத்துவதுறை மேலும் பிரகாசிக்க வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படும். தன்னிகரில்லாததும் பக்க விளைவுகளற்றதும் என்றும் தனித்துவமானது மாகும். உடல் உள ஆன்மீக நலம் பேணும் சித்த வைத்திய முறை இது "எமது பரம்பரைச் சொத்து." இதனைப் பாதுகாப்பது மட்டக்களப்பு மாவட்ட சித்தவைத்தியர்களினதும், அரசாங்கத்தினதும், மக்களதும் கடமையாகும்.

## மண்முனை வடக்கு பிரதேச நாவல்கள், சிறுகதைகள்

# அன்றும் இன்றும்

-வி.மைக்கல்கொலின்

உலக மொழி இலக்கியங்களைப் பொது வடிவ அடிப்படையில் இரு பிரிவாக பிரிக்கலாம். ஒன்று செய்யுள்வடிவில் அமைந்த இலக்கியங்கள். மற்றொன்று உரைநடைவடிவில் அமைந்தவை. இவ் இரண்டாம் வகையில் அமைந்த இலக்கிய வகைகளில் முதன்மையாக அமைவது நாவல் இலக்கியமாகும். இவ்வகை உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுமையானதாகவும் அனைத்து மொழிகளிலும் காணப்படுவதாகவும் இன்று அமைகின்றது எனலாம். செய்தி விவரணமும் *(aarrathdion)* கதையும் *(story)* வாய்மொழியாக எல்லா மொழிகளிலும் காலப்பழமையுடன் வழங்கிய தெனினும் அதனைத் தனி இலக்கியவகையான "நாவல்" ஆக்கி உலக மொழிகளில் செல்வாக்குப் பெறச் செய்தது ஆங்கில மொழியேயாகும்.

நாவல் என்பதனை தமிழில் "நவீனம்" எனவும் 'புதினம்' எனவும், குறிப்பிடுவது வழமையாகும். உலக மொழிகளில் முதன்முதலாக ஆங்கிலத்தில் 1741 - ஆம் ஆண்டு 'ரிச்சட்ஸன்' எழுதிய 'பாமெலா' எனும் நாவல் தோன்றியது. தமிழில் நாவல் 19ம் நூற்றாண்டில் புகுந்துள்ளது. தமிழில் முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் "பிரதாப முதலியார் சரித்திரம் (1876)முதல் வசன காவியமாக தோன்றியது. அதேபோல் ஈழத்தில் தமிழ் நாவல் 1885இல் சித்தி லெவ்வையின் அசன் பேயின்சரித்திரத்துடன் தொடங்குகிறது. கிழக்கின் முதல் நாவல் திருகோணமலையிலிருந்து 1891ல் எஸ்.இன்னாசித்தம்பியின் 'ஊசோன் பாலந்தை கதையுடனும், மட்டக்களப்பின் முதல் நாவல் 1934ல் ஏரம்பமுதலியின் அரங்க நாயகியுடனும், அம்பாறையின் முதல் நாவல் எம்.பி.முகம்மது ஜலீலின் "ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது" நாவலுடனும் தொடங்குகிறது.

இங்கு மண்முனை வடக்கு பிரதேசத்தின் முதல் நாவலாக நாம் அரங்க நாயகியைக் கொள்ளமுடியும் இதுவே மட்டக்களப்பு மண்ணின் முதல் நாவல் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தொடக்ககால நாவல் இயல்புகள் தனியான சிந்தனைக்குரியன ஒரு மொழி இலக்கியத்தின் போக்குகளை *(trends)* இவை அறிவிக்கவல்லன. மொழிபெயர்ப்பு, தழுவல், தனித்த மூலமுடையன எனும் பாங்குகள் காணப்படுகின்றன. வரலாறு அல்லது சமுதாய நோக்கு என்பன தெரிகின்றன. இதனால் கற்பனைக்கு முதன்மை அல்லது இயல்பியலுக்கு உண்மைக்குச் சிறப்பு என்பன வெளிப்படக்கூடும்.

தமிழின் தொடக்ககால நாவல்கள் "வரலாறாகக் கருதப்பட்டமையை "பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பள் சரித்திரம்", "பத்மாவதி சரித்திரம், போன்றவற்றின் சரித்திரம் என்ற பெயர் நிலையே உணர்த்துகின்றது. பிரதாப முதலியார் சரித்திரம் பல நிகழ்வுகளின் கோர்வை நாவலாக *(episodic novel)* அமைவதுடன், தன் வாழ்க்கை வரலாற்று நாவல் தன்மையும் *(autographic Novel)* கொண்டு விளங்குகின்றது. இரண்டாவது நாவலான இராஜமையரின் (1872 - 1898) கமலாம்பாள் சரித்திரம் ஆபத்துக்கிடமான அபவாதம் எனும் துணைத்தலைப்புப் பெறுவதும், தலைவியின் பெயரால் அறியப்படுவது மாகிய தனித்தன்மையுடையது.

தொடர்ந்து வந்த மாதவையாவின் (1872 - 1925) பத்மாவதி சரித்திரமும் யதார்த்த பாங்கான சம்பவக்கோர்வையாகும். இதே போன்றே ஈழத்தின் முதல் நாவல் தொடக்கம் கிழக்கிழங்கையின் ஆரம்ப கால நாவல்களும் அமைகின்றது. "உசோன்பாலந்தை" "அரங்க நாயகி என்பன மேலைத்தேய கதைகளைத் தழுவி எழுந்தவையாகும். 1895ல் திருமலையி லிருந்து வெளிவந்த தி.த.சரவணமுத்து பிள்ளையின் "மோகனாங்கி" தமிழ்நாட்டில், 17ம் நூற்றாண்டு காலத்தில் இரு நகரங்களிலும், ஆட்சி புரிந்தவர்களுக்கிடையேயான அரசியல் போட்டி, என்ற பகைப்புலத்தில் காதல், சூழ்ச்சி, வரம், முதலிய சம்பவங்களைக் கொண்டு புனையப்பட்டிருக்கின்றது. இதுவே முதல் வரலாற்று நாவல் எனும் பெருமையைப் பெறுகின்றது. இதன் தொடர்ச்சியாக நாம் மட்டக்களப்பு மாவட்ட நாவல்கள் சிறுகதைகள் தொடர்பாக எமது ஆய்வைச் செலுத்தலாம்.

மட்டக்களப்பு மாவட்டம் 14 பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டது. அதன் இதயமாக விளங்குவதும் அதிக மக்கள் தொகையைக் கொண்டதும், நகரமும் நகர்சார்ந்த பிரதேசமும் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலேயே அமைந்துள்ளது. 1934ல் மட்டக்களப்பில் எழுந்த அரங்கநாயகி நாவலுடன் இற்றைவரை (2014) மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 70க்கு உட்பட்ட நாவல்களே வெளிவந்துள்ளன. அதில் பாதி மண்முனை வடக்கு பிரதேசத்தில் உள்ள படைப்பாளிகளினால் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எமது ஆய்வு நோக்கம் கருதி நாம் ஒவ்வொரு தசாப்தமாக (10 வருடங்கள்) பிரித்து நோக்குவோமாயின் ஈழத்து நாவல் வளர்ச்சியில் மட்டக்களப்பு குறிப்பாக மண்முனைவடக்கு பிரதேசத்தின் பங்கு 1970 களிற்கு பின்னரே அதிகம் விதந்துரைக்கத்தக்க வகையில் அமைகின்றது. 1950கள் வரையும் ஈழத்தில் காவியப் போக்கிலிருந்து விடுபட்டு முழுமையான யதார்த்தப் பாங்குடைய நாவல்கள் எவையும் வெளிவராத நிலையில் 1950களிற்கு பிறகு ஏற்பட்ட ஈழ அரசியல் மாற்றங்கள், 1950 சிங்கள மொழிச்சட்டம் 1958ல் ஏற்பட்ட இனக்கலவரம், சமூக மாற்றங்கள் என்பன இச்சூழலில் "ஈழத்து இலக்கியம்" பற்றிய உணர்வு ஈழத்து எழுத்தாளர் மத்தியில் முகிழ்ப்பதற்கேற்ற விதத்தில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டமை இன்று வரலாறாகி விட்டதொருவிடயம். ஆனால் மேற்போன்ற ஈழத்து இலக்கியம் என்ற பரந்துபட்டவிடயம் கூட மட்டக்களப்பில் பரவவில்லை. 1950 தொடக்கம் 1970 வரையான காலகட்டத்திலேதான் யதார்த்த பூர்வமான ஈழத்து சமூக, அரசியல் பிரச்சினைகளை ஆழமாக நோக்குகின்ற தத்துவார்த்தப்பார்வை கொண்ட நாவல்கள் ஈழத்தில் வெளிவருகின்றன. இவ்வித முன்னோடிகளாக கனக செந்திநாதன் முதளையசிங்கம், இளங்கீரன், செ.கணேசலிங்கம் ஆகியோர் முதன்மை பெறுகின்றனர். "ஈழத்து நாவல்முன்னோடிகளாகின்றனர்" எனப் பேரா. செ.யோகராசா அவர்கள் தனது "ஈழத்து தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்" என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

சமகால ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970களிற்கு பின்னரே பல மாற்றங்கள் நடைபெறுகின்றன. ஈழத்து இலக்கியத்திற்கு மட்டக்களப்பின் குறிப்பாக மண்முனை வடக்கு பிரதேசத்தின் பங்களிப்பு நிகழ்வதும் இக்காலகட்டத்திற்கு பின்னரேயாம்.

மண்முனை வடக்கு பிரதேசத்தின் நாவலாசிரியர்களில் பின்வருவோரைக் குறிப் பிடமுடியும். ஏரம்பமுதலி, செ.குனரெத்தினம், பவள சுந்தரம்பாள், ஆ.மு.சி.வேழலகன், திருமதி.அற்புதராஜா, திசேரா, ஓ.கே.குணநாதன், திமிலை மகாலிங்கம், ஆனந்தா.ஏ.ஜி. ராஜேந்திரம், திமிலைத்துமிலன், மண்டூர் அசோகா, தங்கன், வி.மைக்கல்கொலின்.

இதில் பவள சுந்தரம்பாள் என்பவர் நூற் றுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதி உள்ளதாகக் குறிப்பிடப்பட்டாலும் அவரது இரண்டு நாவல்களே இதுவரை வெளிவந்துள்ளன. இதில் வெளிவந்த நாவல்களின் அடிப்படையில் கவிஞர் செ.குணரெத்தினம் அவர்களும். ஆ.மு.சி. வேழழகன் அவர்களும் முறையே நான்கு, ஐந்து என நாவல்களை வெளியிட்டுள்ளனர். இதில் செ.குவின் மூன்றுக்கு மேற்பட்ட நாவல்கள் பத்திரிகைகளில் தொடர்கதையாக வெளிவந்து அச்சுவடிவம் காணமல் உள்ளது. குறிப்பிடத்தக்கது.

குறித்த பதினொரு படைப்பாளிகளில் மண்முனை வடக்கின் பெண் படைப்பாளியாக மண்டூர் அசோகா அவர்களும், சுமதி அற்புதராஜா அவர்களும் அமரர் பவள

சுந்தரம்மா அவர்களும் காணப்படுகின்றனர்.

எண்ணிக்கை அடிப்படை தவிர்த்து வெளிவந்த நாவல்களின் தன்மை அதன் *கட்டமைப்பு ரீதியாக பார்ப்போமானால் செ.குவின்* துன்ப அலைகள் 'மிகமுக்கிய நாவலாகும். அதேபோன்று ஆ.மு.சி.வேழகனின் 'சில்லிக் கொடி ஆற்றங்கரை' தமிழின் மிக முக்கிய நாவலாகும் வேடர்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும், வேடர் சமூகம் விவசாயசமூகமாக படிப்படையாக மாற்றப்படுவதையும் ஆவணமாக் கப்பட்டுள்ளமை, குறிப்பிடத்தக்கது. கள ஆய்வு அடிப்படையில் குறித்த பிரதேசங்களுக்கு சென்று அவர்களது வாழ்க்கை முறையை ஆய்வு செய்து எழுதப்பட்டநாவலாகும்.

மேலும் இவர் குறிப்பிடத்தக்க சில நாவல்களையும் படைத்துள்ளார், இதே போன்று திமிலைத் திமிலன், திமிலை மகாலிங்கம் சகோதரர்களும் நாவல்கள் எழுதியுள்ளனர் திமிலை மகாலிங்கம் தினக் கதிரில் எழுதியுள்ள "காதலேன் காதலா" தொடர் நவீனம் இன்னும் நூல் உருப்பெறவில்லை. இதே போன்று கவிஞர் வாகரைவாணன் அவர்களும் நாவல் எழுதியுள்ளார் என்பது குறிப்படத்தக்கது

வடிவரீதியில் ஒருபரிசோதனை முயற்சியாக எழுதப்பட்ட நாவல் திசேராவின் "ஏவிவிடப்பட்ட கொலையாளி" அகும். இது பின்நவீனத்துவ பாணியில் சுனாமியின் பின்னரான நிகழ்வுகளை, பதிவு செய்த நாவலாகும். இக்கட்டுரையாசிரியரின் 'காதல் வெண்ணிலா கையில்சேருமா' என்ற நாவல் மட்டக்களப்பில் இருந்து வந்த தினக்கதிர் வார வெளியீட்டில் தொடராக வெளிவந்த நாவலாகும். இது "வீணையடி நீ எனக்கு" என்ற பெயர் மாற்றத்துடன் கனடாவில் இருந்து வந்த "ஆதவன்" பத்திரிகையிலும் வெளிவந்தது. ஈழத்தில் பல்கலைக்கழக சூழலை மையம்வைத்து நாவல்கள் வெளிவந்தது. மிகக் குறைவே, அந்தவகையில் கிழக்குப்பல்கலைக் கழகத்தினை மையம் வைத்து பல்கலக்கழக சூழல், அதன் நடைமுறைகள், மாணவர்களுக்கிடையே மோதல் என எழுதப்பட்டாலும் அதனூடாக ஈழத்து அரசியலையும் தொட்டுச் செல்வதன் ஊடாக சமகால அரசியல் நாவலாகவும் இது பரிணமிக்கிறது என பேரா.செ.யோகராசா அவர்கள் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது.

ஒட்டு மொத்தமாக பார்ப்பின் மண்முனைவடக்கு பிரதேசத்தின் மண் வாசனையை பிரதிபலிக்கக் கூடியவகையில் இன்னும் ஒரு முழுமையான நாவல் வெளிவராமல் இருப்பது கவலைக்குரியதே. ஒரு *"நிலக்கிளியையோ" "வாடைக்காற்றினையோ"*, "ஒரு வெண்மனல் கிராமம் காத்திருக்கிறது" வகையிலோ "வெள்ளாவி" போன்று முழுமையாக எமது பிரதேச மண்ணின் மணத்தோடு ஒரு நாவல் எழும் நாள் மிகவிரைவில் வரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நாவலைப்போன்றே...

ஒரு நூற்றாண்டுக்கு மேலான வரலாற்றினைக் கொண்ட தமிழ்ச்சிறுகதைகள் பற்றிய இவ்அறிமுகத்தினை எழுதமுன்னர், 'தமிழ்ச்சிறுகதைகள்' என்று எழுதுவது சரியா இல்லை 'தமிழில் சிறுகதைகள்' என எழுதுவது முறையா என்ற கேள்வி என்னுள் எழுந்தது. ஏனெனில் சிறுகதை என்ற வடிவம் தமிழிற்கு ஆங்கிலம் வழி கொண்டு வரப்பட்ட ஒரு இலக்கிய வடிவம்.

நாவல், சிறுகதை ஆகிய புனைகதை வடிவங்கள் மேலைத்தேய இலக்கிய வடிவங்களாகும். ஆனால் அதனை தன்னுள் உள்வாங்கிக் கொண்ட தமிழ் இலக்கியம் வெறுமனே அதனது 'நகலாக' மட்டும் நின்றுவிடாமல் அது பல மாற்றங்களைக் கடந்து புதிய தேடல்களை அகழித்து, புதிய வடிவங்களைத் தோற்றுவித்து, சிறுகதைக்கென வடிவமைக்கப்பட்ட கட்டுப் பெட்டித்தனமான வரையறைகளைக் கடந்து, உடைத்தெறிந்து, புதிய புதிய வடிவங்களாக சூல் கொண்டு தமிழ்ச்சிறுகதைகள் என்ற வடிவத்தினை பெறும் முயற்சியில் வெற்றிபெற்றுள்ளது.

பல்லாயிரமாண்டு பழமையான தமிழ் இலக்கிய வடிவமான செய்யுள் காலத்திற்கு ஏற்ப தனது தளைகளைக் களைந்து பல வடிவங்களுக்கூடாக இன்று நவீன தமிழ் கவிதையாகமாற்றம் பெற்றுள்ளதோ, அதேவகையில் தமிழ்ச்சிறுகதையும் தன்னளவில் பல மாற்றங்களைக் கண்டு நவீன தமிழ்ச் சிறுகதையாக பரிணமித்துள்ளது.

தமிழ்ச்சிறுகதை இலக்கிய வரலாற்றில் வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய பாரதியார், அ.மாதவையா ஆகிய மூவரையும் தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகளாகக் கொள்வதும் மரபாகின்றது. *(வ.வே.ச.ஐயர் 1881-1921, பாரதி 1882-1921 மாதவய்யா 1872-1925)* இவர்களில் வ.வே.ஐயரையே தமிழ்ச்சிறுகதையின் பிதா

மகராகக் கொள்வது அவரது 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையிலிருந்து சிறுகதை வரலாற்றினை தொடங்குவதும் இற்றவரைத் தொடர்கிறது. 1915க்கும் 1918க்கும் இடைப்பட்ட கால வேளையில் எழுதப்பட்ட அவரது கதைகளின் தொகுப்பே 1927ல் வெளிவந்த மங்கையர்க்கரசியின் காதலாகும்.

வருடக்கணக்கினை வைத்துப்பார்க்கும் போது 1905ல் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய சுப்பிரமணிய பாரதியுடனே நவீன சிறுகதை தொடங்குகிறது. ஆனால் அவை ஓர் இலக்கிய வடிவமாகவோ, கலைவடிவமாகவோ கொள்ளப்படாததன் காரணத்தாலும், ஆங்கில, ஜேர்மன் போன்ற மொழிகளில் ஐயருக்கு இருந்த புலமையின் காரணமாக அவரால் தமிழ்ச்சிறுகதைகளைக் கலாபூர்வமாக படைக்கமுடிந்தது. அவருடைய சிறுகதைகளில் சிறுகதை உருவம் தமிழில் சிறுகதை என்றில்லாமல் தமிழ்ச்சிறுகதை வடிவமாக மாற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது. எனவேதான் ஐயர் தமிழ்ச் சிறுகதையின் மூலவராக கொள்ளப்படுகிறார்.

இக்காலப்பகுதியிலேயே ஈழத்து சிறுகதையும் தன்னளவில் தோற்றம் பெறத் தொடங்குகிறது. 1930ல் நவீன உருவப்பிரக்ஞையுடன் உருவாக்கப்பட்ட "மரிய மதலேனா" இலங்கையர் கோனால் எழுதப்பட்டு கலைமகளில் வெளியாகிறது.

ஈழத்தின் தமிழ்ச்சிறுகதைவரலாற்றை காலரீதியாகவும் நவீன சிறுகதை வடிவ ரீதியாகவும் ஆராய்வுக்கு எடுக்கும் போது ஈழத்து சிறுகதை முன்னோடிகளாகவும் மூலவர்களாகவும் பின்வரும்மூவர் கொள்ளப்படுகின்றனர். இலங்கையர் கோன், சி.வைத்தியலிங்கம், அ.தி.சம்பந்தன்.

செங்கை ஆழியான் அவர்கள் தனது ஈழத்து சிறுகதைவரலாறு என்ற நூலில் ஈழத்து சிறுகதை வரலாற்றை காலவரையரையில், கருத்தியல்பு வரையறையியலும் பின்வருமாறு பிரிக்கின்றார்.

1. சமுதாய சீர்திருத்தக்காலம் (1930 - 1949)
2. முற்போக்குகாலம் (1950 - 1960)
3. புத்தெழுச்சிக்காலம் (1861 - 1983)
4. தமிழ்த்தேசிய உணர்வுக்காலம் (1983) க்குபின்னார் என நான்கு காலகட்டமாக பிரிக்கிறார். நான் இதன் 5வது காலகட்டமாக 1993க்கு பின்னரான காலத்தைபின் நவீனத்து வக்காலம் என்ற காலப்பகுப்பாய்வாக முன்வைக்க விழைகின்றேன்.

காந்தியக் கொள்கையினாலும் பெரியாரின் பகுத்தறிவுக்குக் கொள்கையினாலும் பெரிதும் பாதிப்புற்று அந்த கருத்துக்களை தமது கதைகளில் பதிவு செய்த காலமாக சமுதாய சீர்திருத்தக்காலம் அமைய, மானுடத்தின் முன்னேற்றத்திற்காக மார்க்சிசம் முதன்மை பெற்று முற்போக்கு எழுத்துக்கள் முளைவிட்ட காலமாக முற்போக்கு காலமும், சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களை உள்வாங்கும், மார்ச்சிய முற்போக்கு சிறு கதையாளர்கள் தமது பார்வையை அகழித்துக் கொண்டமை, சிறுகதைகள் அகலமாகவும், ஆழமாகவும் பழவியகாலமாக புத்தெழுச்சிக்காலம் அமைய 1983க்கு பின்னரான தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான முன்னெடுப்பு முனைப்பு பெற்றிருந்ததன் காரணமாக போர்க்காலச் சூழலை உள்வாங்கிய எரியும் சமகால பிரச்சினை பேசிய படைப்புக்கள் தமிழ் தேசிய உணர்வுக் காலமாக பதியப்பட்டது.

இக்கால கட்டத்தில் ஏற்பட்ட நவீன இலக்கியப் போக்குகளின் அறிமுகம், காரணமாக முன்வைக்கப்பட்ட மேலத்தேய கோட்பாடுகளின் வருகை முக்கியத்துவம் பெறுகிறது. அதன் பயனாக பின்நவீனத்துவம் என்ற கொள்கையை ஒட்டி புனையப்பட்ட எழுத்துக்கள் பின்நவீனத்துவ கால எழுத்துக் களாக இற்றைவரை அடையாளப் படுத்தப் பட்டுவருகிறது.

மண்முனை வடக்கு பிரதேச சிறுகதைகள் அன்றும் இன்றும் என்று நாம் பார்க்கையில், நாவல்கள் எழுதிய பல எழுத் தாளர்கள் சிறுகதை படைப்பாளியாகவும் இருப்பதை அவதானிக்கமுடிகிறது. அந்த வகையின் அவர்களது சிறுகதைத் தொகுதிக ளும் வெளிவந்துள்ளன. ஈழத்து தமிழ் சிறுகதை களில் தட்ப வெப்ப நிலமைகளுக்கு ஏற்ப காலரீதியில், அமைப்பு உள்ளடக்கம், என வழமையான சிறுகதைத் பாணியை பின்பற்றிய எழுத்தாளர்களாகவே பலர் உள்ளனர்.

மரபு சார்ந்த ரீதியில் 'ஜன்னலுக்கு வெளியே'பார்க்கும் காட்சியே சிறுகதை என்ற கருத்தியலை உள்வாங்கியதானை வடிவ அமைப்பிற்கு ஏற்றவகையில் அக்கால சிறுகதைகள் அமைந்தன. ஜனரஞ்சகப்பாணியில் அமைந்த இச்சிறு கதைகளின் மத்தி

யிலும் ஒரு சிலரது பேசப்பட்ட சில சிறு கதைகள் மண்முனைவடக்கில் இருந்து வெளிக்கிளம்பி உள்ளது. குறிப்பிடத்தக்கது. அந்தவகயில் மட்டுநகர் முத்தழகு எழுதிய 'தாகமாயிருக்கிறேன்' சிறுகதையும், பித்தன் அவர்களின் பல சிறுகதைகளும் கவனிக் கத்தக்கன.1990க்கு பின்னரான ஈழத்து சிறுகதைப்போக்கில் ஏற்பட்ட வடிவமாற்றம், பின்நவீனத்துவ சிந்தனையின் வருகை. மண்முனை வடக்கு பிரதேச பிரிவிலும் பல நவீனபாணி சிறு கதைகள் வெளிவர காரணமாகின்றன அந்தவகையில் 'திசேராவின்' பல சிறுகதைகள் பின்நவீனத்துவ பாணியில் நவீன சிந்தனையுடன் கூடிய வடிவ எழுத்துக் களால் அமைந்த சிறுகதைகளாகும்.

மண்முனை வடக்குபிரதேச நவீனப் போக்கில் மேலுமொருபுதிய பாணி சிறுகதை வெளிப்பாடு மிக முக்கியம் பெறுகின்றது. தொன்மங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி, தொன்மங்களின் வழியாக இதிகாச, புராண சம்பவங்களுக்கூடாகவும், வேதநுால்களை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் ஊடாகவும் புதிய பழைய சம்பவங்களுடன் புதிய கருத்தியல்களை முன்வைத்து பல சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அந்த வகையில் கவிஞர் ராஜாத்தி என்ற பெயரில் கவிதைகள் எழுதி வருபவரும் மட்டக்களப்பு நவீனநாடகத்தின் அடையாளமாக திகழ்பவருமான வெ.தவராஜா அவர்களின் பல சிறுகதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதுவரை எட்டு சிறுகதைகளே இவர் எழுதி இருப்பினும், குறிப்பிடத்தக்க சிறுகதைகளை எழுதியுள்ளார் இதேபோன்றே இக்கட்டுரையாசிரியரின் "வரம்" "பரசுராம பூமி", என்பன தொன்மங்களின் வழிநின்று சமகால அரசியலைபேசும் சிறுகதைகளாகும். முள்ளிவாய்க்கால் சம்பவங்களை வைத்து எழுதப்பட்ட இவரின் "பரசுராம பூமி" மிகமுக்கி யமான சிறுகதையாகும்.

ஒப்பீட்டு ரீதியில் மண்முனை வடக்கு பிரதேச சிறுகதைகள் ஈழத்து சிறுகதைகளின் வடிவமாற்றங்களை உள்வாங்கி, புதிய போக்குக்கு ஏற்ப சிறுகதை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

அந்தவகயில் மரபுரீதியான சிறுகதை களின் பிடியில் இருந்து விடுபட்டு புதியபாணி சிறுகதை நோக்கி இப்பிரதேசம் நகர்வது வரவேற்கத்தக்க தொருமற்றமே.

(இக்கட்டுரை ஒரு அறிமுகக் குறிப்பே தவிர முழுமையான ஆய்வு அல்ல)

## மண்முனை வடக்கு பிரதேச செயலகம் இலக்கியவிழா போட்டி முடிவுகள் - 2014

**கவிதைப் பாடல் - பாலர் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அல்ரின் யேசுசகாயம் ஹரிஷ்கர் | மட்/க.வே.ச. வித்தியாலயம் |
| 2ம் இடம் | சுந்தரலிங்கம் சுஜந்தன் | மட்/ம.தொ.பா. வித்தியாலயம். |
| 3ம் இடம் | யசோதரன் தனுக்ஷன் | மட்/ம.தொ.பா. வித்தியாலயம். |
| | தங்கராஜா லுதுசிக்கா | மட்/க.வே.ச. வித்தியாலயம் |

**கையெழுத்துப் போட்டி - பாலர் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ம. டர்ணி | மட்/வி.ம.ம. வித்தியாலயம். |
| 2ம் இடம் | துஷாரி ஜேசுதாசன் | மட்/புனித சிசிலியா பெண்கள் |
| 3ம் இடம் | நே. ரபேக்காணி | மட்/வி.ம.ம. வித்தியாலயம். |
| | பு. அம்ருதா | மட்/வி.ம.ம. வித்தியாலயம். |

**கவிதை எழுதுதல் - கனிஷ்ட பிரிவு**


| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இவோன் அக்ஷயா யேகராஜா. | மட்/புனித சிசிலியா பெ.தே.பா |
| 2ம் இடம் | செல்வி. கமலநாதன் சசிறேகா. | மட்/புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம். |
| 3ம் இடம் | அக்ஷிகா கோணேசமூர்த்தி | மட்/புனித சிசிலியா பெ.தே.பா |

**கட்டுரைப் போட்டி - கனிஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வன் நடராஜா கிசாளன் | மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித. |
| 2ம் இடம் | செல்வன் சாந்தன் கிஷாந்தன் | மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித். |
| 3ம் இடம் | செல்வி டிசாளினி தியாகலிங்கம். | மட்/மஞ்சந் தொடுவாய் பாரதி வித் |

திரு. சி. சாமித்தம்பி

# முக்குவச் சட்டம்



முக்குவர் என்பது இலங்கைத் தமிழர்களிடையே இருந்து வரும் ஒரு சாதி அமைப்பாகும். இவர்கள் மட்டக்களப்பு, புத்தளம் போன்ற பிரதேசங்களில் வாழ்கின்றனர். இவர்கள் இந்தியாவின் மலபார் கரையிலிருந்து வந்து இங்கு குடியேறிய மலபார்கள் என திரு. எச். டபிள்யு. தம்பையா அவர்கள் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்கள் தேசவழமைச் சட்டத்தாலும், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை பிரதேசங்களில் குடியேறியவர்கள் முக்குவச்சட்டத்தாலும் ஆளப்பட்டனர். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும், புத்தளத்திலும், திருகோணமலையில் சில இடங்களிலும் முக்குவச் சட்டம் அமுலில் இருந்தது என்பது தெரியவருகிறது. புத்தளத்தில் குடியேறியிருந்த முக்குவர்கள் சமய மாற்றங்களினால் பலர் கிறிஸ்தவர்களாகவும், சிலர் முகமதியர்களாகவும் மாற்றமடைந்ததால் காலப் போக்கில் அவர்கள் தங்கள் சாதிக்குரிய பாரம்பரிய பழக்கவழக்கங்களையும், நடைமுறைகளையும் கைவிட்டு வாழும் நிலமைக்குத் தள்ளப்பட்டனர். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஊர்களில் முக்குவர் அதிகமாக இருந்த கொட்டியாரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளம் பற்று ஆகிய இடங்களில் முக்குவச் சட்டமே அமுலில் இருந்தது என திரு. எச். டபிள்யு. தம்பையா குறிப்பிடுகிறார்.

முக்குவச் சட்டம் என்பது முக்குவச் சாதியினரிடையே பாரம்பரியமாக பாவனையிலிருந்த பழக்க வழக்கங்கள், வழக்காறுகள், பாவனைகள் என்பவற்றை மூலமாகக் கொண்ட ஒரு ஒழுங்கு முறை என்பது தெளிவாகும். முக்குவச் சட்டத்தின் ஏற்பாடுகள், அது பிரயோகிக்கப் பட்ட முறை ஒரு தாய் வழிச் சமுதாயத்தில் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. எனவே தம்பையா அவர்களின் கருத்துப்படி முதலில் மலபார் கரையிலிருந்து வந்தவர்கள் தாய்வழி முறையைச் சேர்ந்த வழக்கங்களை கொண்டு வந்தார்கள் என்பது புலனாகிறது. இந்தப் பழக்கவழக்கங்களின் கோர்வைகளைக் கொண்ட விதிமுறையே முக்குவச் சட்டம் எனப்பட்டது. இச்சட்டம் முக்குவச் சட்டம் என அழைக்கப்பட்டாலும், மட்டக்களப்பில் வாழ்ந்த முக்குவச் சாதியினர் அல்லாத வேறு சாதி அமைப்பைச் சேர்ந்த தமிழருக்கும் முக்குவச்சட்டம் பொதுவான ஒரு சட்ட நெறி யாகக் கொள்ளப்பட்டது என பேராசிரியர் சி. பத்மநாதன் 1976ல் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலரில் தான் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

முக்குவச் சட்டம் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னரும் 1876 ஆம் ஆண்டுவரை முக்குவச்சட்டம் அமுலில் இருந்தது. 1876ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட

திருமண உரிமைகள், வாரிசு உரிமைக் கட்டளைச் சட்டம் முக்குவச் சட்டத்தை மறைமுகமாக இல்லாமல் ஆக்கியது. போர்த்துக்கேயர் இலங்கையரிடையே இருந்த பாரம்பரிய வழக்காற்றுச் சட்டங்களைத் தொகுப்பதில் எதுவித அக்கறையும் செலுத்தவில்லை, ஆனால் ஒல்லாந்தர் இலங்கையரிடையே வழமையிலிருந்த பாரம்பரிய வழக்காறுகளைத் தொகுத்து அவற்றுக்குச் சட்ட அந்தஸ்து அளித்தனர். அந்தவகையில் முக்குவச் சட்டத்தையும் தொகுத்து அதற்கும் சட்ட அந்தஸ்து கொடுத்ததுடன் தமது ஆட்சி அதிகார சபையிலும் அதை அமுல்படுத்தினர். ஒல்லாந்தரின் சிவில்நிர்வாக நீதிமன்றமாகச் செயல்பட்டு வந்த லான்றாட் (*Land Rarrd*) என்னும் நீதிச்சபையிலும் முக்குவச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதை அறியமுடிகிறது.

17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் கரையோர மாகாணங்களை ஒல்லாந்தர் கைப்பற்றி தமது ஆட்சியை அங்கு நிலைநிறுத்திய காலத்தில் அவர்கள் இலங்கை மக்களின் பாரம்பரிய வழக்காறுகளை மீறாமல் அவற்றுக்கிணங்கவே ஆட்சி செய்தனர். அந்தவகையில் இலங்கைத் தமிழ் மக்களால் பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வந்த வழக்காறுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதன் விளைவாக முக்குவச்சட்டமும் ஒரு தனிச்சட்டமாகத் தொகுக்கப்பட்டது. 1766ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின் அப்போது ஒல்லாந்தர் கவர்னராக இருந்த ஐ. டபிள்யு. பால்க் என்பவர் (I.W.Faulk) புத்தளம் பிரதேசத்தில் முக்குவச் சட்டத்தை விரிவாகத் தொகுத்தார். மட்டக்களப்பிலும் அவரது பணிப்புரைக்கமைய அப்போது மட்டக்களப்பின் நிர்வாக அதிகாரியாக இருந்த யேக்கப் வேர்னால்ட் என்பவர் முக்குவச் சட்டத்தை தொகுத்தார். ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் முக்குவச் சட்டத்தை அமுல்படுத்துவதில் எந்தவித இடையூறுகளையும் ஏற்படுத்தவில்லை என்பது தெரியவருகிறது. ஒல்லாந்தர் ஆட்சியின் மூன்று தசாப்தங்களிலும் 1766 தொடக்கம் 1796 வரை மட்டக்களப்பில் லான்றாட் சிவில் நீதிமன்றம் முக்குவச்சட்டத்தை அமுல்படுத்துவதில் சிறப்புடன் செயலாற்றியதாகத் தெரியவருகிறது.

1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததன் பின் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய வழக்காற்றுச் சட்டங்களில் எதுவித மாற்றங்களையும் செய்யவில்லை. இதனை தமது 1799 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 23ம் திகதிப் பிரகடனத்தின் மூலம் (*The Proclamation of 23rd September, 1799*) உறுதி செய்து வெளிப்படுத்தினர். அதன்பின் சில ஆண்டுகள் சென்றபின் இங்கிலாந்தில் உள்ளவாறு நீதிமன்றங்கள் இலங்கையிலும் ஏற்படுத்தப்பட்டன. இந்த நீதிமன்றங்களில் குடியியல் நீதிமன்றங்களின் மூலம் குடியியல் வழக்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும் 1835 ஆம் ஆண்டு 5ம் இலக்கக் கட்டளைச் சட்டம் (*Ordianance No. 5 of 1835*) ஏற்படுத்தப்பட்டதன் மூலம் பாரம்பரிய வழக்காறுகளின்படி சிவில் நீதி நிர்வாகம் நடாத்தும் முறையில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற வழக்குகளின் போதும் உயர்நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகளின் போதும் முக்குவச் சட்டத்திலுள்ள அம்சங்களை ஏற்று அதற்கேற்ப தீர்ப்புக்கள் வழக்கப்பட்டுள்ளதாக ஆங்கிலச் சட்ட அறிஞரான திரு. சி. பிரிட்டோ வால் தொகுக்கப்பட்ட முக்குவச்சட்டம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக திரு. பிரிட்டோ அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் இடம்பெற்ற பல வழக்குகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அவற்றை விபரித்து விளக்கமளித்துள்ளார். உதாரணமாக மட்டக் களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் இடம் பெற்ற 16384 ஆம் இலக்க வழக்கில் அப்போது மாவட்ட நீதிபதியாகப் பதவி வகுத்த இராணி வழக்கறிஞரான திரு. ஹே அவர்கள் (*Deputy Queens Advocate Hay*) முக்குவச்சட்டத்தை ஏற்று சிறப்பான தீர்ப்பொன்றை முக்குவச்சட்டத்திற்கு ஏற்ப வழங்கினார். அத்தோடு உயர்நீதி மன்றத்துக்கு மேன்முறையீட்டுக்காகச் சென்ற சின்னத்தம்பி எதிர்மின்னி என்ற வழக்குத் தொடர்பாக 1874ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எந்தக்காலத்திலும், எந்தவகையிலும் ஒல்லாந்தர் காலத்தில் மட்டக்களப்பில் இருந்த முக்குவர்களின் வழக்காறுகளில் எந்தவித இடையூறுகளையும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் ஒருபோதும் செய்யவில்லை எனத் தீர்க்கப்பட்டது. அத்துடன் முக்குவர்களினதும்,

வன்னிமைகளினதும் விஷேட வழக்காறுகள் அக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததாகவும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற 8933 ஆம் இலக்க வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் முக்குவச்சட்டத்தை தொகுத்த திரு. பிரிட்டோ அவர்கள் முக்குவச்சட்டம் ஆங்கிலேயர் காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சட்டமாக இருந்தது என்பதை நிருபிப்பதற்காகப் பின்வரும் வழக்குகள் முக்குவச்சட்டத்தின்படி விசாரிக்கப்பட்டு, முக்குவச்சட்டத்தை ஏற்று அதற்கேற்ப பெண்வழி உரிமைகள் பேணப்படவேண்டும் என்ற தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

1. 10236ம் இலக்க, 20.10.1845ம் திகதிய கதிராமப்போடி மற்றும் பலர் எதிர் வேலாப் போடி, பெரியதம்பி என்ற வழக்கு
2. 10524ம் இலக்க, 09.02.1847ம் திகதிய கதிராமப்போடி உடையார் மற்றும் பலர் எதிர் மானாப்போடியார். வள்ளியம்மை என்ற வழக்கு.
3. 12460ம் இலக்க 05.01.1857ம் திகதிய வேலாத்தப்பிள்ளை மற்றும் பலர் எதிர் கந்தப்போடி. நாககண்டாப்போடி என்ற வழக்கு.
4. 11765ம் இலக்க 06.01.1858ம் திகதிய ஆறுமுகத்தான்போடி, கற்பூரப்போடி, எதிர் நல்லப்பணிக்கப்போடி, தோலிப்போடி என்ற வழக்கு
5. 13341ம் இலக்க 15.03.1861ம் திகதிய வேலாத்தப்பிள்ளை மற்றும் பலர் எதிர் பெரியதம்பி வாசுதேவப்போடி என்ற வழக்கு.
6. 16384ம் இலக்க 27.02.1871ம் திகதிய சின்னவர் வேலாயுதம் எதிர் பத்தர் அடப்பன் கதிராமன் என்ற வழக்கு.

இதன்படி இந்த வழக்குகள் யாவும் பிரித்தானியர் காலத்தில் 19ம் நூற்றாண்டில் நடந்த வழக்குகளாகும். ஆனால் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் 4260ம் இலக்க தன்பர் அப்பிப்போடி என்ற வழக்கு முக்குவச்சட்டத்தின் படி விசாரிக்கப்பட்டு சகோதரிகளின் சார்பில் அவர்களின் சகோதரன் பராமரித்து வந்த காணியின் உரிமை அவரின் சகோதரிகளின் வழியில் வந்த பெண் வழி உரிமைப் பெண்பிள்ளைகளுக்கே முக்குவச்சட்டத்தின்படி உரிமை உடையது என்ற தீர்ப்பு 12.04.1916ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளதாக திரு. ஞா. சிவசண்முகம் தனது நூலான மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் 1876ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட 15ம் இலக்க திருமண உரிமைகள், வாரிசு உரிமைக்கட்டளைச் சட்டம் முக்குவச்சட்டத்தை மறைமுகமாக இல்லாமல் ஆக்கியது. அதன் பின் வந்த வழக்குகளான சோதிராப்பிள்ளை எதிர் நாகமுத்து என்ற வழக்கிலும் வைரமுத்து எதிர் மாரோத்தம்பி என்ற வழக்கிலும் வழங்கப்பட்ட தீர்ப்புக்களில் முக்குவச்சட்டம் இலங்கையிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளது எனத் தீர்க்கப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு நோக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்தமிழர்களின் சட்டமாக இருந்த தேசவழமைச்சட்டமும், முஸ்லிம்களின் சட்டமான முஸ்லிம் சட்டமும், கண்டியச் சிங்களவர்களின் சட்டமான கண்டியச் சட்டமும் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது போலவே அக்காலத்தில் மட்டக்களப்புத் தமிழர்களின் சட்டமாக இருந்த முக்குவச்சட்டமும் சம அந்தஸ்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கைச் சுதேசிகளின் வழக்காறுகளைக் கொண்ட அவர்களது தனித்துவமான சட்டங்கள் யாவும் தொகுக்கப்பட்டு இலங்கையின் சட்டமுறைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்ட அந் தஸ்து வழங்கப்பட்ட அதேவேளை முக்குவச் சட்டத்திற்கு அப்படியானதொரு சட்ட அந்தஸ்து வழங்கப்படாமல் அச்சட்டம் ஓரங்கட்டப்பட்டது.

இதற்குக் காரணம் அக்காலத்தில் இலங்கையின் அரசியலிலும், சட்டத்துறையிலும் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த படித்த சுதேசிகளே ஆவர். அவர்கள் மட்டக்களப்புக்கோ அல்லது முக்குவச்சாதியினருக்கோ தனியே தனித்துவமான ஒரு சட்டம் இருப்பதை விரும்பாமல் இருந்திருக்கலாம். அதேவேளை அக்காலத்தில் மட்டக்களப்பிலும் இவர்களது கருத்தை ஆதரிக்கும் நிலமையே நிலவியது. இதற்குக் காரணம் மட்டக்களப்பிலும் அக் காலகட்டத்தில் இலங்கையின் வெளிமா வட்டங்களிலிருந்து வந்து குடியேறிய படித்த சுதேசிகளே மிகவும் செல்வாக்குப் பெற்ற நிலச்சுவாந்தர்களாக விளங்கினர். இவர்களே மட்டக்களப்பிலிருந்த நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களாகத் திகழ்ந்தனர். அத்துடன் அக்காலத்தில் மட்டக்களப்பிலும் முக்குவச் சட்டத்தை ஏற்க மறுத்தவர்களே படித்தவர்களா கவும் வழக்கறிஞர்களாகவும் இருந்தனர். இதன்

காரணமாக முக்குவச் சட்டம் நீக்கப்படுவதற்கு எங்கிருந்தும் எதிர்ப்புகள் அப்போது கிளம்பவில்லை.

இதேவேளை அக்காலகட்டத்தில் மட்டக்களப்பிலிருந்த நீதிமன்றங்களின் போக்கும் முக்குவச்சட்டத்தை இல்லாமல் செய்யும் நிலமைக்குச் சாதகமாகவே அமைந் திருந்தன எனலாம். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் அக்காலத்தில் நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களாகச் செயல்பட்ட உள்ளூர், வெளியூர் வழக்கறிஞர்களேயாவர். அவர்கள் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறும்போது வாதிதரப்பில் வாதாடினாலும் சரி, எதிர்தரப்பில் வாதாடினாலும் சரி எல்லோரும் ஒருமித்து முக்குவச்சட்டத்தைத் தமது வாதங்களுக்கு ஆதாரமாக பயன் படுத்துவதைத் தவிர்த்து, றோமன் டச்சுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தமது வாதங்களை முன்வைத்தனர். நீதிபதிகளும் தமது தீர்ப்புக்களை றோமன் டச்சுச்சட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கினர் இதனால் இயல்பாகவே முக்குவச்சட்டம் ஒழிக்கப்பட்டு காலப்போக்கில் றோமன் டச்சுச்சட்டமே மட்டக்களப்புத் தமிழர்களின் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**முக்குவச்சட்டத்தின் உள்ளடக்கம்**

சென்ற நூற்றாண்டில் இலங்கையின் பிரபல சட்ட அறிஞராக விளங்கிய திரு. சி. பிரிட்டோ என்னும் ஆங்கிலேயர் முக்குவச் சட்டத்தை விரிவாக ஆராய்ந்து தொகுத்து வெளியிட்டுள்ளார். அதற்காக அவர் மட்டக்களப்பு மற்றும் புத்தளம் பகுதியிலிருந்த முக்குவத் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து தேவையான தகவல்களையும், தரவுகளையும் பெற்றுக் கொண்டதாகக் கூறியுள்ளனர். அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் முக்குவச் சட்டத்தை ஏற்று அதன்படி விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குக்களையும் தனது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டியுள்ளார். குறிப்பிட்ட வழக்குகளையும், அவற்றில் இடம் பெற்ற விசாரணைகளையும் விரிவாக ஆராய்ந்து அவைகளைப் பற்றியும் தமது புத்தகத்தில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். அவரது இந்தத் தொகுப்பில் முக்குவச் சட்டத்தில் பல விரிவான சிறப்பம்சங்களும், பல நுணுக்கமான வரையறைகளைக் கொண்ட சொற் பிரயோகங்களும் அடங்கியுள்ளதை அவதானிக்கலாம். மேலும் முக்குவச்சட்டம் பல நுணுக்கமான பிரிவுகளைக் கொண்ட பழமையான பழக்கவழக்கங்களையும், வழக்காறுகளையும் உள்ளடக்கிய ஒரு சட்டம் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. அவரின் அந்தத் தொகுப்பிலிருந்து முக்குவச் சட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கத்தினை பின்வருமாறு விளக்கலாம்.

- **உறவுமுறை**

மாதாக்கள் :- மாதாக்கள் என்பது ஒருவரது மாதாவினதும், அவரின் முன்தோன்றல்களை மட்டுமன்றி அவரின் தந்தையையும், தந்தைவழித் தோன்றல்களையும் குறிக்கும்.
தாதாக்கள் :- தாதாக்கள் என்பது தந்தையின் முன்வழியினர் ஆகும்.
மூதாக்கள் :- மூதாக்கள் என்பது ஒருவரின் முன்னோர்களைக் குறிக்கும். அதாவது இது ஒருவரின் தாய் தந்தையின் முன்னோர்களையும் அம்முன்னோர்களின் முன்தோன்றல்களையும் குறிக்கும்.
வயிற்றுவார் :- ஒருதாயின் வயிற்றிலிருந்து பிறந்தவர்களின் வழித்தோன்றல்கள் யாவரும் வயிற்றுவார் என அழைக்கப் படுவர்.
பரவணி :- பரவணி என்பது பரம்பரையைக் குறிக்கும்.
குடி :- முக்குலச் சாதியினரிடையே குடிமுறை அமைப்பு தொன்று தொட்டு இருந்து வருகிறது. குடி தாய்வழி முறையாகவே கணிக்கப்பட்டு வருகிறது. ஒரே குடியைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொள்ள முடியாது என்பது நியதி.

- **சொத்துக்கள்**

சோம் :- சோம் என்பது அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்கள் இரண்டையும் குறிக்கும்.
தளபாடம் :- இது தளவாடம் எனவும் அழைக்கப்படும். கதிரை, மேசை, கட்டில், உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாடம் எனப்படும்.
சாமான் :- இதன் பன்மை சாமான்கள் எனப்படும். மிருகங்கள், பணம் தவிர்ந்த ஏனைய பொருட்களும், கடைகளிலுள்ள பொருட்களும் சாமான் என அழைக்கப்படும்.
முதுசம் :- முதுசம் என்பது பூர்வீகச் சொத்துக்களைக் குறிக்கும் சொல்லாகும். முதுசம் என்பது மாதாக்கள் மூலம் வந்தால் மாதாக்கள் முதுசம் எனவும், மூதாக்கள் மூலம் வந்தால் மூதாக்கள் முதுசம் எனவும் அழைக்கப்படும். இவ்விரண்டு முதுசங்களையும்

கொண்டதே முதுசம் ஆகும். இயற்கையாக தேடிய தேட்டத்தோடு சேர்க்கப் படுவதும் முதுசம் என்றே கருதப்படும்.

தேடிய தேட்டம் :- வாழ்வதன் மூலம் பெறப்பட்ட சொத்தும், ஆட்சி உரிமை மூலமும், பரம்பரை மூலமும் அல்லது அந்நியரால் கொடுக்கப்ப பட்ட சொத்தும்தேடிய தேட்டமாகும். அந்நியர் என்பது ஒருவரது தாய், தாயாதிகள், தந்தை அவரது ஆட்கள் தவிர பிறராவர். தமக்காகத் தேடியது தேட்டமாகும். இது அவர்களது பிள்ளைகளுக்குப் போகும் போது முதுசம் என அழைக்கப் படும். இப்படியாக தகப்பன் வழி வந்த தேட்டம் தந்தை வழிச் சோம் என்றும் தாய் வழி வந்த தேட்டம் தாய்வழிச் சோம் என்றும் அழைக்கப்படும். குடும்பத்தில் ஒரு மகள் தனது மக்களைவிட்டு இறந்தால் தாய்வழிச் சொத்து தாய்வழி முதுசமாகும். எனவே சொத்தைத் தேடிய ஒருவனுக்கு அது தேட்டமாகும். அவரின் மக்களுக்குப் போகும் போது அச்சொத்து முதுசம் என அழைக்கப்படுகிறது. அவரின் மகள்வழிப் பேரப்பிள்ளைகளுக்கு அது போகும் போது அது மாதாவழி முதுசம் என்றும் அழைக்கப்படும். இதன்படி ஒருவரின் மாதாவழி முதுசம் பின்வருவனவாக இருக்கும்.

1. ஒருவரின் பிதாவழி சோம்
2. அவரின் பிதாவழி முதுசம்
3. ஒருவரின் மாதாவழி சோம்
4. அவரின் மாதாவழி முதுசம்

மாதாவழி முதுசம் சிலவேளைகளில் முதுசம் என்றே அழைக்கப்பட்டது. இதை முக்குவ முதுசம், முக்குவக்காணி, பரவணிக்காணி, பரவணிமுதுசம், மருமக்கள்காணி எனப் பல்வேறு பெயர்களால் அழைப்பர்.

சொத்துக்களை வெளிப்படுத்தும் போது பின்வருமாறு இரண்டு சொற்களைப் பாவித்துக் குறிக்கும் முறையும் இருந்தது.

ஆடு, மாடு
கன்று, காலி
மாடு, கன்று

மேலுள்ள சோடிச் சொற்களை பன்றி, நாய், நரி போன்ற மிருகங்களைத் தவிர்ந்த ஏனைய மிருகங்களையும், அவற்றின் கன்றுகளையும் குறிக்கப் பாவிக்கப்பட்டது.

தட்டு, முட்டு
காணி, பூமி
வீடு, வளவு
வீடு, வாசல்

ஆகிய சோடிச் சொற்கள் பொருட்கள், நிலம், பயிர்ச் செய்கை நிலம், வீடு, வளவு போன்ற சொத்துக்களைக் குறிக்கப் பாவிக்கப்பட்டது.

சொத்துக்களை அனுபவிக்கும் உரிமை என்ற சொல் பிள்ளை, ஆண்பிள்ளை, பெண்பிள்ளை, பெண்வழிப்பிள்ளை, பெண் வழிப் பெண்பிள்ளை, என்பவற்றுடன் தொடர்பு படும் போது பின்வருமாறு அமையும்.

1. உரிமைப்பிள்ளை
2. உரிமை ஆண்பிள்ளை
3. உரிமை பெண்பிள்ளை
4. பெண்வழி உரிமைப்பிள்ளை - பெண்வழியில் வரும் வாரிசு
5. பெண்வழி உரிமைப் பெண்பிள்ளை - பெண்வழி வரும் பெண்வாரிசு
6. தொடர்ந்து பெண்மகளின் மூலம் பிறந்து வரும் பிள்ளைகள் பெண்வழியுரிமைப் பிள்ளைகளாகும். உதாரணமாக : தாய் அதற்குப் பின் அவள் மகள் அதன் பின் அம்மகளின் மகள் என்பதாகும்.
7. ஒரு பெண்ணிலிருந்து அவளின் பெண்மக்கள் வழி மூலம் பிறந்துள்ள பெண்பிள்ளைகள் பெண்வழி உரிமைப் பிள்ளைகள் என அழைக்கப்படுவர்.

ஒரு பெண்ணுக்கு வரும் முதுசச் சொத்து அவர்களின் பிள்ளைகளுக்குப் போகும் போது அது மாதாவழி முதுசம் என அழைக்கப் படும்.ஒரு முதுசச் சொத்து உரிமைப்பிள்ளைக ளுக்கு மாதாக்களிடமிருந்து அல்லது மூதாக்க ளிடமிருந்து கிடைக்கும் போதும் அல்லது மாதாவழித் தோன்றல்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர் போன்றோரிடமிருந்து கிடைக்கும் போது முதுசம் என்றே அழைக்கப்படும். தாய் வழி முதுசக்காணியை செய்கைபண்ணுவதற்காக வைத்திருக்கும் மாடுகளும் அக்காணியின் பகுதியாகவே கொள்ளப்படும். ஒரு முது சக்காணியில் இருந்து கிடைக்கும் விளை பொருட்கள் அக்காணியிலிருந்து வேறாக்கப் படும் போது அது தேட்டம் என்று அழைக்கப் படும். முதுசக்காணியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களோ அல்லது முதுசத் துக்கு மாற்றீடாக வாங்கப்பட்ட பொருட்களோ முதுசமாகக்கணிப்பிடாது தேட்டம் என்றே கொள்ளப்படும்.

தேட்டம் என்பது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.

1. அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்கள்
2. கணவனால் மட்டுமன்றி மனைவியாலும் தேடியதாகவும் அவர்கள் திருமணம் முடிக்கும் முன்போ அல்லது திருமணம் முடித்த பின்போ குடும்பத்தைச் சேராத

அந்நியர்களிடமிருந்து அல்லது அவர்களின் வழியில் வந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட சொத்துக்கள்

கணவனும், மனைவியும் உயிரோடு இருக்கும் போது கணவனுக்கு மனைவியின் சம்மதம் இல்லாமலே பின்வரும் சொத்துக்கள் மீது ஏகபோக உரிமை இருக்கும்.

1. எல்லாத் தேட்டங்களும்
2. அவனது தந்தைவழிச் சோம்கள் இரு வகையும்
3. அவனது தந்தைவழி அசைவுள்ள, அசைவற்ற முதுசச் சொத்துக்கள்.
4. அவனது தாய்வழிச் சொத்துக்கள் இருவகையும்.
5. மனைவியின் தந்தைவழி அசைவுள்ள முதுசச் சொத்துக்கள்
6. மனைவியின் தாய்வழி அசைவுள்ள முதுசச் சொத்துக்கள்

மனைவியின் அசைவற்ற பிதாவழிச் சொத்து, பிதாவழி அசைவற்ற முதுசம் என்பவற்றைப் பொறுத்தவரை கணவன் அச்சொத்துக்களின் பராமரிப்பாளராக மட்டுமே இருக்கலாம். அவர் மனைவியின் சம்மதமின்றி அச்சொத்துக்களை கைமாற்றம் செய்யமுடியாது. அதேபோல் கணவனால் மனைவியின் சம்மதமின்றி அச்சொத்துக்கள் சம்பந்தமாக செய்து கொள்ளப்படும் எந்த ஒப்பந்தமும், கைமாற்றமும் மனைவி மரணமடைந்தால் அவளின் வாரிசுகளுக்கு அச்சொத்தின் மீதுள்ள உரிமையைக் கட்டுப்படுத்தாது.

ஒருவர் மணம் முடித்திருந்தாலும் தனது மாதாவழி முதுசச்சொத்தில் சகோதரிகளின் சார்பில் ஒருபராமரிப்பாளனாக மட்டுமே இருப்பார். அவர் அவரது சகோதரிகளின் விருப்பமின்றி அச்சொத்தினை விற்கவோ, கைமாற்றவோ அவருக்கு உரிமையில்லை. ஆனால் அச்சொத்தின் பராமரிப்பாளர் என்ற முறையில் அச்சொத்தைப் பராமரிப்புச் செய்யும் செயலின் போது ஏற்படும் கடன்கள் மற்றும் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளுக்காகச் சொத்தினை விற்கலாம்.

மனைவி அச்சொத்தினை கணவனின் அனுமதியின்றி, ஆனால் தனது சகோதரர்களின் உரிமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் கைமாற்றம் செய்யலாம். இப்படியான சந்தர்ப்பங்களில், அவளது கணவனாலன்றி அவளது சகோதரர்களினாலேயே மாதாவழி முதுசச் சொத்து சம்பந்தமாக நீதிமன்றங்களில் சகோதரிகளின் சார்பில் வழக்காட முடியும்.

கணவனும், மனைவியும் அவர்களின் தாய்வழி முதுசக்காணியைத் தவிர தங்களது வேறு சோம்களை விற்பதில் எதுவித தடைகளும் இல்லை. திருமணம் முடித்திருந்த ஒரு கணவனும், மனைவியும் நேர்வாரிசுகள் இல்லாமல் இறந்தால் அவர்களின் சொத்துக்கள் இரண்டாகப் பிரிக்கப்படும். அதில் சரிபாதியான மனைவியின் பங்கு பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.

1. மனைவியின் தந்தைவழிச்சோம்.
2. அவளது தாய்வழிச்சோம்.
3. அவளது தந்தைவழி முதுசம்.
4. அவளது மாதாவழி முதுசம்.
5. அவளது தேட்டத்தில் அரைவாசி.

(மிகுதி கணவனின் பங்காகும்.)

மனைவி முன்பு ஒரு திருமணம் செய்திருந்தால் அவளின் மேற்கூறிய பங்கு அத்திருமணத்தின் மூலம் அவள் பெற்ற பிள்ளைகளுக்கும் தாய்வழி முதுசச் சொத்து அவளது தாய்வழி வந்தவர்களையும் சென்றடையும். ஒரு பெண் தன்வழியால் வாரிசுகள் இல்லாமல் இறந்தால் அவளின் சொத்து பின்வருபவர்களைச் சென்றடையும்.

1. அவளின் தாய்.
2. தாயின் பெண்வழி உரிமைப்பிள்ளைகள்.
3. அவளின் பாட்டி.
4. தாய்வழிப் பாட்டியின் பெண்வழி உரிமைப்பிள்ளைகள்.

இதே விதியே அவளது கணவனுக்கும் பொருந்தும்.கணவனோ அல்லது மனைவியோ ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து அதனூடாக பிள்ளைகளைப் பெற்று அதன்பின் இறக்க நேர்ந்தால், முதல் திருமணத்தின்போது பெறப்பட்ட சொத்துக்கள் அத்திருமணத்தின் போது பிறந்த பிள்ளைகளுக்கு சமனாக பிரித்துக் கொடுக்கப்படும். அதேபோல் அடுத்த திருமணத்தின் போது பிறந்த பிள்ளைகளுக்கு அத்திருமணகாலத்தில் தேடிய சொத்துக்கள் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும். இந்நடவடிக்கைகளின் போது இரண்டு திருமணங்களின் போது தேடிய சொத்துக்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்படும் போது முதல் திருமண காலத்தில் தேடிய சொத்துக்கள் முதலாவதாகவும், இரண்டாவது கல்யாணத்தின் போது தேடிய சொத்துக்கள் இரண்டாவதாகவும் வெவ்வேறாக் கப்பட்டு பிரிக்கப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்த கணவன், மனைவி இருவரும் இறக்கும் போது அத்திருமணங்களின் மூலம் பிள்ளைகள்

இருந்தால், அவர்களின் சொத்துக்கள் பின்வரும் முறைப்படி உரியவர்களைச் சென்றடையும்.

1. கணவனின் மாதாவழி அசைவற்ற முதுசம் அவரின் வழிவந்தவர்களையும்

2. அவர்களின் தேட்டங்கள் இரண்டு சமபங்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒருபங்கு ஒருவரின் எல்லாப் பிள்ளைகளுக்கும், மற்றப் பங்கு மற்றவரின் எல்லாப் பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் இறந்த கணவன், இருவரின் பிள்ளைகளில் யாராவது இறந்திருப்பின் அவர்களுக்குரிய பங்கு அவர்களது பிள்ளைகளைச் சென்றடையும். கணவன் இறக்கும் போது அவனது அசைவற்ற அசைவுள்ள முதுசங்களில் பின்வருவன அவனது எல்லாத் திருமணங்களின் மூலமும் பிறந்த பிள்ளைகளிடையே சமமாகப் பரித்துக் கொடுக்கப்படும்.

1. தகப்பன்வழிச் சோம்.
2. தாய்வழிச் சோம்.
3. தாய்வழி முதுசம்.

இறந்த பெண்ணின் அசைவுள்ள முதுசங்கள் (அவளின் தந்தைவழி வந்ததானாலும், வராவிட்டதானாலும்) அவளது திருமணங்களின் மூலம் பிறந்த பிள்ளைகள் எல்லோருக்கும் சமமாகப் பிரித்தளிக்கப்படும். அதேவேளை கணவனும், மனைவியும் இறக்கும் போது மேற்கூறியவாறு பங்குகள் பிரிக்கப்பட்டு அவை உரியவர்களுக்குப் பிரித்தளிக்கப்படும். முன், இறந்தவர்களின் திருமணங்களின் காலத்தில் ஏற்பட்ட சொத்துக்களில் அவர்களின் பெண் சகோதரிகளுக்குரிய பணமும், தானியங்களும் அவர்களது திருமணங்களின் மூலம் அவர்களுக்குப் பிறந்த ஆண் மக்களால் எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன் அந்த ஆண்மக்கள் தங்கள் சகோதரிகளுக்குரிய பங்காகக் கிடைக்கும் வீட்டுத்தளபாடம் மற்றும் மாடுகளையும் எடுத்துக்கொள்வர்.

திருமணம் முடித்திருந்த குடும்பப் பெண்ணோ, ஆணோ அவர்களது பொது வான பெண்பிள்ளைகளை அல்லது ஆண் பிள்ளைகளை விட்டு இறந்தால், மேலே கூறப்பட்ட பிரிவுகளுக்கு இணங்க அவர்களது சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படும். மனைவி ஏற்கனவே ஒரு திருணம் செய்து அதன் மூலம் அவளுக்கு பெண்பிள்ளைகள் இருந்தால் அல்லது பெண்வழி உரிமைப் பிள்ளைகள் இருந்தால், சொத்துரிமை அவர்களுக்குமப் போய்ச்சேரும். ஒரு பெண்ணுக்கு தாய்வழியில் பிறந்த பெண்பிள்ளைகளோ அவளது தாய்வழி பாட்டியின்மூலம் பிறந்த பெண்பிள்ளைகளோ இருந்தால் முன் கூறியது போல் அவளது ஆண் பிள்ளைகளுக்குச் சொத்துரிமை போகாது. ஆனால் அவளுக்குப் பெண்பிள்ளைகள் இல்லாதிருந்தால் அவளது முதுசம் ஆண் பிள்ளைகளைச் சென்றடையும்.

ஒருபெண் ஒரு முதுசச் சொத்தை பெண் மக்களின்றி விட்டு இறக்க நேர்ந்தால் அச்சொத்து அவளது ஆண்மக்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். அதேபோல் ஆண்மக்களின்றி இறந்தால் அவளது பெண் பிள்ளைகளிடையே அச்சொத்து சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். கணவனும், மனைவியும் தங்கள் பெண்பிள்ளைகளை மட்டும் விட்டு இறந்தால், அவர்களின் பணம், வீட்டுத் தளபாடங்கள், நெல் முதலியதானிய வகைகள் அவர்களையே சென்றடையும். பெண் பிள்ளை களில் யாராவது தாய் இறப்பதற்குமுன் இறந்தால், இறந்த மகளின் பங்குச் சொத்து ரிமை அவளது பெண்வழி உரிமைப் பிள்ளை களைச் சென்றடையும். இறந்த பெண் பிள்ளை களின் நெருங்கிய பெண்வழி உரிமைப் பெண் பிள்ளைகளைப் போல் தூரத்து உறவுப் பெண்வழி உரிமைப்பிள்ளைகளும் இறந்தவர்களின் பங்குச் சொத்தில் உரிமை பெறுவர். அவை பின்வருமாறு அமையும்.

1. சொத்தில் உரிமையுள்ள ஒரு பெண் இறக் கும் போது அவளது பெண் பிள்ளைகளுக்கு அவளின் சொத்துக்களின் உரிமை போய்ச் சேரும்.
2. ஆனால் அச்சொத்தை ஆட்சி செய்யும் பொறுப்பு ஒரு ஆணிடமிருந்து அவனது ஆண் மருமக்களுக்குச் செல்வதே வழமை யாகும்.
3. ஒரு பெண்ணுக்கு சகோதரர்களோ அல்லது ஆண்மக்களோ இல்லாத இடத்தும் அல்லது அப்படியான ஆண்கள் இருந்தும் அவர்கள் நோயாளிகளாகவோ அல்லது பராயமடை யாதவர்களாகவோ இருந்தால் மட்டும் சொத்துரிமை அப்பெண்களைச் சென்ற டையும்.

எனவே ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் முக்குவச் சட்டத்தில் ஒரு பெண்ணின் தந்தை வழியில் வழிவந்தோருக்கு அப்பெண்ணின் சொத்துரிமை செல்வதில்லை என்பது குறிப்பி டத்தக்க அம்சமாகும். எனவே பிரிட்டோவின் கருத்துப்படி முக்குவச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும்

முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்.

1. எல்லாச் சொத்துக்களும் தாயிடமிருந்து வந்தன.
2. வாரிசுத் தொடர்கள் தாய்மூலம் கருதப்பட்டது.
3. ஆண்கள் சொத்துக்களைப் பாதுகாப்பவர்களாக இருப்பர்.
4. மூத்த சகோதரன் குடும்பத்தின் பெரிய பாதுகாவலன் ஆவான்.
5. ஆண்மக்கள் தாயைப் பேணவேண்டும். சகோதரர்களை அல்ல.
6. பெண்களால் நிலங்களைப் பாதுகாத்துப் பராமரிக்க முடியாது.
7. விலையுயர்ந்த அசையும் பொருட்கள் ஆணுக்கே சேரும்.

**முக்குவச் சட்டத்தில் திருமணம்**

முக்குவச் சமுதாயத்தில் மக்கள் பல குடிகளாக வகுக்கப்பட்டிருந்தனர். தாய்வழியிலேயே குடிகள் கணிக்கப்பட்டுவந்தன. ஒரே குடியைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொள்ளமுடியாது. நேர் உறவினர்கள், நேர்வம்சாவழியினரை மணக்க முடியாது. தாயாதிகளிடையே மணம் செய்வது வழக்கமில்லை. திருமணமுறை சமுதாய நிலையில் ஒருபெண் தன்னிடம் வந்த ஆண் உழைத்தவற்றைப் பெற்று சீவியம் நடத்துவார். கலத்தில் போட்டால் சட்டப்படி திருமணம் நடந்ததாகக் கொள்ளப்படும். அதாவது முதலில் திருமணத் தம்பதியினருக்கென விஷேடமாகத் தயாரிக்கப்பட்ட சுவைமிக்க பசும்பால் கலவையைத் தம்பதியர் மாறிமாறி ஊட்டிக் கொள்வர். பின் வெண்பட்டு விரிக்கப் பட்ட பலகைக் குத்தியில் மாப் பிள்ளை வசதியாக இருக்க, அவரின் முன்பாக வெண்கலத்தாலான சேவரக்கால்மீது வட்டி வைக்கப்பட்டு இருக்கும். அத்துடன் வெண்கலச் செம்பில் தண்ணீர் இருக்கும். வட்டியில் மாப்பிள்ளையின் கையை பெண் தண்ணீர் ஊற்றிக் கழுவியதும் தண்ணீரைப் பெண் அருகில் வைக்கப்பட்டிருக்கும் வெண்கலப் படிக்கத்தினுள் ஊற்றி மறுபடியும் சேவரக்கால்மீது வட்டியை வைப்பார். பின் கமுகம்பூச்சம்பா அரிசிச் சோற்றை அகப்பையால் மூன்று முறை வட்டியில் போட்டு விஷேடமாகத் தயாரிக்கப்பட்ட ஏழுவித மரக்கறிகளையும் வட்டியில் வைப்பார். அதனை மாப்பிள்ளை சோற்றுடன் சேர்த்து மூன்று கவளம் உண்டபின் எஞ்சிய சோற்றில் மூன்று கவளம் மணப் பெண்ணும் உண்டு கையலம்பிய பின் இருவரும் விஷேட தாம்பூலம் அருந்திக் கொள்வர். இதுவே கலத்தில் போடுதல் என அழைக்கப்படும்.

**முடிவுரை**

முக்குவச் சட்டத்திலுள்ள மேலே கூறப்பட்ட எல்லா அம்சங்களையும் மொத்த மாக ஆராய்ந்து பார்க்கும்போது, அந்த அம்சங்களை எல்லாம் மட்டக்களப்பிலுள்ள எல்லாத் தமிழ் மக்களும் சாதிவேறுபாடின்றி ஒட்டுமொத்தமாகக் கடைப்பிடித்து ஒழுகினார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகும். அந்த வகைளில் ஒரு தனித்துவம் வாய்ந்த பாரம்பரிய கலாச்சாரத்தையும், பண்பாட்டு விழுமியங்க ளையும், வழக்காறுகளையும் தன்னகத்தே கொண்டு வேற்றுமையிலும் ஒற்றுமையுடன் வாழும் மட்டக்களப்புத் தமிழகத் தமிழ் மக்களுக்கென உரித்தான ஒரு தனித்துவம் வாய்ந்த பிரத்யேக அம்சங்களைக் கொண்ட ஒரு விஷேட சட்டம் இலங்கைச் சட்டமுறைமை களிலிருந்து நீக்கப்பட்டது விஷேடமாக மட்டக்களப்புத் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு பாரிய பின்னடைவு என்றே கருதப்பட வேண்டியுள்ளது. அத்துடன் பெண்உரிமைகள் பற்றிப் பரவலாகப் பேசப்படும் இக்காலகட்டத்தில் பெண் உரிமைகள் தொடர்பான பல சிறப்பம் சங்களைக் கொண்டிருந்ததுடன், பெண்களுக்கு முன் உரிமை கொடுத்து அவர்களுக்குச் சட்டரீதியான சொத்துரிமை அந்தஸ்தை வழங்கிய ஒரு பிரத்தியேக விஷேட சட்டம் இலங்கையிலிருந்து இல்லாமல் செய்யப்பட்டது பெண் உரிமைகளுக்கு எதிரான ஒரு செயல் என்பதுடன் இது இலங்கைச் சட்டவரலாற்றில் ஒரு கறைபடிந்த அத்தியாயம் எனக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் இச்சந்தர்ப் பத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.


ஆதார நூல்கள்

1. *The Mukkuva law, C.Brito*
2. *Laws and customs of tamils of Ceylon, h.w.thambiah*
3. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும், மரபுகளும் ஞா.சிவசண்முகம் J.P.



# பிணங்கள்

**கதைச் சுருக்கம்** : உலகம் பரிணாமத்தின் அடியாக மனிதனுடைய வளர்ச்சி நிலை டார்வினின் கோட்பாட்டை மையமாகக் கொண்டு அவன் எவ்வாறு உருப்பெற்றான் என்பதில் இருந்து இன்று சமூகத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தொட்டுச் செல்வதாக இந்நாடகத்தின் கதைக்கரு அமைந்து காணப்படுகிறது. அந்த வகையில் ஏராளமான பிரச்சனைகள் சமூகத்தின் விழித்திரனில் காணக்கூடியதாக உள்ளது. அதில் வேலையில்லாப் பிரச்சனை, வெளிநாட்டு மோகம், சிறுவர் துஷ்பிரயோகம் இவற்றை அடிநாதமாகக் கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எமலோகத்தை உருவாக்கி அங்கு சென்று நீதி கேட்பதாகவும் சமூகத்தின் போலி முத்திரைகளை கிழிக்கும் வண்ணம் இந்நாடகம் அமைந்துள்ளது. இது கற்பனை கலந்த உண்மைக் காவியமாக வி.விஜயகுமார் உ. வாக்கியுள்ளார். இது மூன்று காட்சிகளைக் கொண்டு விளங்குகிறது. படைச்சட்ட முறையில் நடிப்பதற்கு ஏற்ற அடிக்குறிப்புக்களைக் கொண்டு காணப்படுகிறது.

**காட்சி திரை திறக்கின்றது - காட்சி - 01**

[ பகுதியில் இரண்டு உருவங்கள் ஒன்றோடொன்று இணைந்த வண்ணம் காணப்படுகின்றது. பாடலிற்கு சித்தரிக்கப்படுகிறார்கள். வேறொரு குழுவும் இணைந்து கொள்கின்றது.]

**பாடல் :-**

அண்டங்கள் சிதறி கண்டங்கள் வந்து
உயிரினம் வந்ததடா - உயிரினம் வந்ததடா
குரங்கிலிருந்து மனிதன் வந்தான் - என்று
டார்வினும் சொன்னாரடா...
டார்வினும் சொன்னாரடா...
தகிட தகிட தாம் தகிட தகிட தாம்
தகிட தகிட தாம் தகிட தகிட தாம்

கல்லை உரசி நெருப்பைக் கொண்டு வந்தான்
தகிட தகிட தாம் தகிட தகிட தாம்
வேட்டைக்குச் சென்றான் -
விலங்குகளைக் கொன்றான்
தகிட தகிட தாம் தகிட தகிட தாம்
தன்னுடன் போனவன் இறந்தாலும் - இறந்தாலும்
விலங்குகளைப் போல அவனையும் தின்றான்
மனிதனும் மனிதனும் சிந்தித்தான் - ஆ ஆ ஆ
மாற்றத்தை மட்டுமே வேண்டினான்...
சாதியும் வந்தது சாஸ்திரம் வந்தது
சங்கடம் வந்ததடா....
போட்டியும் வந்தது போர்களும் வந்தது
மனிதப் பிணங்கள் வந்ததடா..
பிணங்கள்... பிணங்கள்... பிணங்கள்.. மனித
இனமே பிணங்கள்.... ஆ.. பிணங்கள்...

**காட்சி - 02**

பாத்திரம் - வேலையில்லாப் பட்டதாரி, வெளிநாட்டுப் பெண், சிறுவன், சமுதாயம்

சமுதாயம் என்கின்ற அரக்கன் ஒரு கயிற்றில் மூவரையும் ( சிறுவன், வெளிநாட்டுப் பெண்,

முத்தமிழ் விழா திறந்த மட்ட நாடகப் போட்டியில் முதலாமிடம்
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம்

வேலையில்லாப் பட்டதாரி) கட்டிக் கொண்டு ஏளனமாய் சிரிக்கின்றது *CL* பகுதியிலும் பின்னர் *CR* பகுதிக்கு அவர்களை இழுத்து ஏளனமாய் சிரிக்கின்றது.

**சமுதாயம்** - இவர்கள்.. ஆ.. ஆ.. ஆ... புழுக்கள் என்றுமே அள்ள அள்ள குறையாத பிணக் கூட்டங்கள் ஆ.. ஆ.. ஆ.. பின்னர் தனது கட்டிலிருந்து ஒருவர் ஒருவராக கட்டவிழ்த்து விடுகிறது. முதலில் வேலையில்லாப் பட்ட தாரியைக் கட்டவிழ்த்து விடுகின்றது. அவன் தனது கட்டவிழ்ந்த சந்தோஷத்தில் தனது படிப்பை எடுத்துக் கொண்டு வேலை தேடுகிறான். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பின்பு அறிவித்தல் வருகிறது.

**குரல் - 01** :-

பட்டதாரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு பட்டதாரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம் நிபந்தனைக்கு உட்பட்டது (குரல் ஒலிக்கிறது)

(மெல்லிய ஆட்டத்துடன்) முதலாளியும் அவனுடைய கதிரையைத் தூக்கி நாய் மாதிரி வாயைத் தொங்கப்போட்ட வண்ணம் ஒருவன் வருகிறான். பின்னர் வேலையில்லாப் பட்டதாரி தனது பட்டத்தைக் காட்டுகிறான். முதலாளி அவனது பட்டத்தை வாங்கிவிட்டு அவனை மேலும் கீழுமாய்ப் பார்க்கிறான். அவனிடம் கையசைவில் பணம் தா வேலை தருகிறேன் என்கிறான். இவன் இல்லை பட்டத்தைக் காட்ட அவனையும் அவனது பட்டத்தையும் தூக்கி எறிகிறார்கள். எங்கும் ஊழல் விலை போவதைக் கண்டு உறைகிறான். சமுதாயம் மீண்டும் தன் சேட்டையைக் காட்டுகின்றது. உரத்த சத்தம் வெளிநாட்டுப் பெண்ணை விடுவிக்கிறது. அவளும் தன் கட்டவிழ்ப்பு நடந்ததனைக் கண்டு சந்தோஷம் கொள்கிறாள். பின் தனது கனவுகளுடன் தன் பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கில் வெளிநாடு செல்கிறாள். அங்கு வேலைகள் செய்யும் போது முதலாளியால் வலுக்கட்டாயமாக பாலியல் செய்யப்படுகிறாள். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதவளாக பார்வையாளர்களைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறாள். *(Music)* வழங்கப்படுகிறது. பின்னர் ஓய்கிறது.

சமுதாயம் மீண்டும் தனது உரத்த குரலை ஆ...ஆ...ஆ.. என்று தனது கட்டுப்பாட்டில் உள்ளவனையும் வீசி எறிகிறது. இவனும் தன் கட்டுகள் அவிழ்க்கப்பட்டதனைக் கண்டு சந்தோஷம் கொள்கிறான். தனது பாடசாலை போக்குகள் தனது குறும்புத்தனத்தைக் காட்டும் முகமாக அபிநயம் செய்யப்படுகிறது. பின்னர் வீதிகளில் பயனிக்கிறான். அப்போது வயது வந்த ஒருவர் சிகரெட், மதுபானத்தைக் குடித்த வண்ணம் வருகிறார். சிறுவனைக் கண்டவன் அவனுடைய பார்வையை அவன்மீது குவிக்கிறான். பின்னர் அவனுடைய புத்தகப் பையினைப் பறித்து வைத்துவிட்டு தன்னுடைய பணத்தைக் கொடுத்துவிட்டு மதுபானம் வாங்கிவர அனுப்புகிறான். பின்னர் அவன் மறுக்க அவனுடைய தலையைத் தட்டி அனுப்புதல். பின்னர் வாங்கி வந்த மதுபானத்தை அவனுக்கு பருக்கி அவனையும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்குதல். (இவை அனைத்தும் குறியீடு பாங்கில் வெளிப்படுத்தல். அவனும் சமுதாயத்திற்கு முன்னால் நிற்கிறான்.) (சற்று அரங்கு மௌனம் சாதிக்கின்றது. இதயத் துடிப்பு சத்தம் மட்டும் அரங்கைப் பிளக்கிறது.) பாதிக்கப்பட்ட மூவரும் ஒன்றிணைந்து போராட்டத்திற்கு முன்வருகின்றனர். ஆனால் சமுதாயம் என்பது கடல். அதனை அவர்களால் ஜெயிக்கமுடியவில்லை. இறுதியில் மூவரும் மடிகின்றனர்.

**பாடல் :-**

உரிமைகள் இங்கே ஊமைகளாட்டம் திரிகின்றது
உடல்களை இங்கே பதவிகள் வந்து பறிக்கின்றது
காலத்தின் விடிவே கண்ணீரின் மடலே
உன் பிள்ளை மடிகிறது
உன் சொந்தம் புதைகிறது

**காட்சி - 03**

பாத்திரம் - எமன், சித்திரகுப்தன், வேலையில்லாப் பட்டதாரி, வெளிநாட்டுப் பெண், சிறுவன் (எமலோகத்திற்கான காட்சி அமைப்பு மாற்றப்பட்டு சித்திரகுப்தன் மரண புத்தகத்தையும், எமன் பாசக் கறிறுடனும் அதன் அருகில் எண்ணெய்ச் சட்டியில் பொரிக்கும் செயற்பாடுகளிலும், மண்டையோடுகளை எமன் உதைப்பதும் நடைபெறுகிறது.)

**எமன் :-** நாட்டின் அநியாயங்கள் நாளுக்கு நாள் கூடுகிறதே தவிர குறைவது போல தெரியவே இல்லை. ( கீழே உள்ள பிணங்களின் தலையை கையிலெடுத்த வண்ணம்)

**சித்திரகுப்தன் :-** பிரபு... இன்று எமது எமலோகத்திற்கு மூவர் வந்துள்ளனர்.

**எமன் :-** அழைத்து வா எண்ணெய்ச் சட்டி பொரிப்பதற்கு தயாராகட்டும். (பிணங்களை கையிலெடுத்த வண்ணம்) உங்களுடைய நிலை தான் அவர்களுக்கும். (எண்ணெய்ச் சட்டியிலிருந்து அலறல். மூவரும் கட்டி இணைக்கப்பட்டு வருகின்றார்கள்) ஆ...ஆ... பலே பலே மனிதப் போர்வையில் உறங்கும் நரிக்கூட்டங்களே உங்களை எமலோகம் அன்புடன் அழைத்து நிற்கிறது. சித்திரகுப்தா இவனுடைய பாவங்களைக் கூறு.

**சித்திரகுப்தன் :-** பட்டம் பெற்றவன் வேலை கொடுக்கவில்லை என்பதற்காக ஊழல் பேர் வழியாக மாறியுள்ளான். இவள் வட்டிக்கு பணம் வாங்கியுள்ளாள். லீசிங் பிரபு லீசிங்.. கடனை அடைக்க வெளிநாடு சென்று அங்கிருந்து பரிசாக உயிர் கொல்லியினையும் வாங்கி வந்துள்ளான். இவன் சிறுவனாக இருந்துகொண்டு சிறுவர் துஷ்பிரயோகங்களை செய்துள்ளான். இப்போது தொங்குகிறான்.

**எமன்** - பலே...பலே.... சந்தோஷமாக வாழ்வதற்கு வழியைக் கொடுத்தால் அளவுக்கு மீறிய ஆசை. ஊழல், உடலை விற்று உழைப்பாளி பட்டம்... கழுத்தில் சுருக்கைப் போட்டு எண்ணெய்ச் சட்டியில் பொரித்து எடுங்கள். இவர்களின் துடிதுடிப்பு பார்ப்பவர்களுக்கு பயத்தைத் தரவேண்டும், பண்பைத் தரவேண்டம். இது எமன் உத்தரவு.( மூவருக்கும் தூக்குக் கயிறு மேலிருந்து மெதுவாக வருதல். *Music* வழங்குதல்)

**வேலையில்லாப்பட்டதாரி :-** எமது நாட்டைப் போல தான் எமலோகமும் உள்ளது. அங்கும் எமது வார்த்தையைக் கேட்க எவரும் இல்லை. இங்கும் எவரும் இல்லை.

**வெளிநாட்டுப்பெண் :-** அதுசரி. எம் கூடப் பிறந்த பிறப்பே எம்மைக் குற்றவாளி என்கின்ற போது இங்கு மட்டும் நீ கேட்பதா..

**சிறுவன் :-** என்னைப் பார்க்கும் சமுதாயமே நன்றாக சிரித்துக்கொள்.

**சித்திரகுப்தன் :-** மன்னா பூலோகத்தில் கடைசி ஆசை கேட்பது வழக்கம். அதுபோல இவர்களிடமும்...

**எமன் :-** என்ன சித்திரகுப்தா இவர்கள் செய்த தவறுகள். அழியா தழும்பட்ட பதியப் பட்டுள்ளதே இதற்கு மேல் ஒரு அவகாசமா.... (யோசிக்கின்றான்) உன் சித்தம் கடைசி ஆசையைக் கேட்டுவிட்டு கடமையைச் செய்வோம்.

**சித்திரகுப்தன் :-** உங்களுடைய கடைசி ஆசை ஏதாவது இருந்தால் கூறலாம்.

**வேலையில்லாப்பட்டதாரி :-** ஆசைகள் அனைத்தும் புதைக்கப்பட்டு பிணங்களாய்த் திரிபவர்களிடமா. என்னைப் பார்க்கும் சமுதாயமே நீ இருக்கும் இடத்திலிருந்து வந்தவன் தான் நான். கஷ்டப்பட்டு படித்தேன். பட்டமும் வாங்கினேன். வாங்கிய பட்டம் வானத்தில் பட்டமாய்ப் பறக்க விடக்கூட இயலாமல் இருக்கிறது. நாடே ஊழலில் உலாவுகிறது. பணம்.. பணம். பணம்.. என்று எல்லோரும் பணத்திற்குப் பின்னால் திரிபவர்களாய்த்தானே இருக்கிறார்கள்.

**எமன் :-** என்ன பிதற்றுகிறாய் யாரைக் கூறுகிறாய்.

**வேலையில்லாப்பட்டதாரி :-** உண்மையைக் கூறுகிறேன். தேவைக்கு அதிகமாய் பணத்தினை சேகரிக்கிறார்கள். அவர்கள் மட்டும் வாழ்ந்தால் போதும். அதன் பின்பு அவர்கள் பிள்ளைகள் இப்படி அவர்களது வட்டத்தைப் பெருக்குகிறார்கள். இடையிலிருக்கும் எங்களை மிதிக்கிறார்கள். எனது ஆதங்கத்தைக் கேட்டதற்கு ஊழல் பேர்வழி, கொலையாளி என்று படிக்காமல் பெற்ற பட்டங்கள் ஆயிரம். இப்போதும் அதே ஏக்கத்துடன் இது கலியுககாலம். இங்கு ஏமாளிகளும் கோமாளிகளும் உயிர் வாழத் தகுதி இல்லாதவர்கள். அவர்களில் கோமணம் கூட மிஞ்சாத நிலை...

**சித்திரகுப்தன் :-** பெண்ணே! உன்னுடைய கடைசி ஆசையினையும் கூறு.

**வெளிநாட்டுப் பெண் :-** வட்டியான வாழ்க்கையில் வீட்டைக் காக்க வெளிநாடு சென்றேன். கயவர்கள் மூலம் கற்பைத் தொலைத்தேன். அவன் தந்த பரிசையும் உயிர் கொல்லியாய்

சுமந்தேன். உறவை பார்க்க வந்த எனக்கு உறவே ஊளையிடும் நரிகளாய் மாறிவிட்டது. பணத்தை வாங்கியவர்கள் என்னைப் பிணமாய் மாற்றி விட்டார்கள். பின்பு பழிபாவம் ஆயிரமும் என்னையே சுற்றி இப்போது நிற்கிறேன் என்னை உருவாக்கிய சமூகத்திற்கு முன்பே

**எமன் :-** பச்சோந்தி கூட்டத்தோடு அல்லவா படுத்துறங்கியிருக்கிறார்கள். அவனுடைய காரணத்தையும் கூறச்சொல்.

**சிறுவன் :-** அனாதை என்கின்ற பட்டம் இவர்கள் எனக்குத்தந்த விலை மதிப்பில்லா பட்டம். அதை மறக்கவே முடியாது. ஆறறிவு படைத்தவன் என்றுதான் பெயர். ஆனால் ஓரறிவு உள்ளவனாய் கூட வாழத்தெரியாமல் இருக்கிறார்கள். வீதி தொடக்கம் விடுதி வரை எத்தனை துரோகம் எத்தனை துரோகம். அனைத்தையும் அப்படியே மூடிமறைத்து விடுகிறார்கள். அவர்களது ஏக்கங்களை தீர்துக்கொள்ள எங்களைப் பகடைக்காயாக மாற்றி விட்டார்களே.. மாற்றி விட்டார்களே..

**எமன் :-** நிறுத்தடா பையா.... இந்த பிஞ்சு மனதில் நஞ்சை வளர்த்துவிட்ட சமுதாயமே அறுவடை செய்ய வேண்டியது உங்களைத்தான். எது நடந்தாலும் கைகட்டி வேடிக்கை பார்ப்பதே உங்கள் பிழைப்பாய் போய்விட்டது. இன்று இவர்களுக்கு நேர்ந்தது நாளை உங்களுக்கு நடக்காது என்பது என்ன நிச்சயம். கடைசிவரை கைகட்டி வேடிக்கைதான் பார்ப்பீர்கள் என்றால் நன்றாய் பார்த்துக்கொள்ளுங்கள் மனித இனம் மண்ணோடு மண்ணாய் மறைவதை (சிறிது நகர்ந்து விட்டு) உங்களுக்கு தண்டனையை வழங்க என்மனம் ஏனோ பின்வாங்குகிறது.

**வேலையில்லாப்பட்டதாரி :-** எங்களுக்கான தண்டனையைத் தந்து உங்கள் நீதியைக் காத்துக்கொள்ளுங்கள். சாட்சி அல்லவா முக்கியம் நீதிக்கு.

**எமன் :-** பாவம் ஒருபக்கம் பழி ஒருபக்கமா.

**வெளிநாட்டுப் பெண் :-** சுற்றமே சூனியக்காரராய் மாறிவிட்ட பிறகு இன்னுமா? பழி? பாவம். இன்றும் நீதி, நேர்மை என்று திரிபவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்.

**எமன் :-** சித்திரகுப்தா இவர்களுடைய பாவ புண்ணியங்களை சரிபார்.

**சித்திரகுப்தன் :-** பிரபு...மூவருடைய பாவங்கள் குறைவாகவும் புண்ணியங்கள் அதிகமாகவும் உள்ளது.

**எமன் :-** உங்களுடைய உடல்கள் இன்னம் தகனம் அடையவில்லை. இப்போதே உங்கள் உடலுக்கு உங்களை அனுப்புகிறேன். அங்கு சென்று சமுதாயத்துடன் சமுதாயமாக வாழ்ந்து கொள்ளுங்கள்.

**வேலையில்லாப்பட்டதாரி :-** மரமாய் வாழச் சொல்கிறீர்களா?

**சிறுவன் :-** வேஷம் போடுபவர்களிடமா?

**வெளிநாட்டுப் பெண் :-** எங்களைப் போல உள்ள ஒரு சிலரையேனும் காப்பாற்றி விடுங்கள். இல்லையேல் நூறில் ஒரு வீதம் ஊழல், கொலை, கொள்ளை என்று நாட்டைக் கெடுப்பவர்களாய்த் திரிகிறார்கள். இன்னும் சில காலத்தில் நூறும் இவ்வாறு மாறிவிடும். பிறகு உலகம் என்ற ஒன்று இருந்ததற்கு ஆதாரம் இல்லாமல் போய்விடும்.

**எமன் :-** (யோசித்தல்)

**மூவரும் :-** என்ன யோசிக்கிறீர்கள். ஒருவரை ஒருவர் அடித்து வாழப்பழகிவிட்டார்கள். விடிவு இல்லா விட்டால் மடிவு நிச்சயம்.

**எமன் :-** (திருப்புமுனை *Music* தனது ஆசனத்தில் கிரீடம், கதாயுதம், பாசக்கயிறு வைக்கிறார். மூவருடைய கழுத்திலும் கயிற்றைப் போடு கிறார்.) நீங்கள் தான் இந்த சமுதாயத்தின் தோலுரிக்கவல்லவர்கள் அவர்களின் மனதை அறிந்து எனது நிலையிலிருந்து ஆட்சி செய்யுங்கள்.

மூவரும் :- என்ன கூறுகிறீர்கள்?

**எமன்:-** எமலோகத்தை நீங்கள் ஆள வேண்டும். அதற்கு நீங்கள் தூய்மையானவர்களாய் இருக்க வேண்டும். அதற்குத்தான் இந்த தூக்குத் தண்டனை. இதை ஏற்றுக்கொள்ளுங்கள். சமுதாயத்தின் கதறல்களை எடுங்கள், நீதியை நிலைநாட்டுங்கள், அறத்தினைப் போதியுங்கள் இதுதான் எனது தீர்வு. விதைத்தவன் உறங்கினாலும் விதை ஒருபோதும் உறங்குவதில்லை. மீண்டும் வருவேன்.

(அரங்கை அதிரச் செய்யவேண்டும்... தூக்கில் அவர்கள் தொங்க வேண்டும். அதற்கேற்ப உரையாடல் பாங்கினைச் சரிசெய்ய வேண்டும்)

## மண்முனை வடக்கு பிரதேச செயலகம் இலக்கியவிழா போட்டி முடிவுகள் - 2014

**கவிதை பாடல் - கனிஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி தேவராசா தர்மிஷாதேவி | மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித். |
| 2ம் இடம் | செல்வி கோணேஸ்வரன் நிறுசினி | மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித். |
| 3ம் இடம் | செல்வி ஜெயக்குமார் அபிநிதி | மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித். |

**கவிதை எழுதுதல் - சிரேஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி. வாசுதேவன் ஜெகதினி | மட்/புனித சிசிலியா பெ.தே.பா |
| 2ம் இடம் | செல்வி. சுதர்சனன் சுஜாதமிகா | மட்/வி.வே.கா ம.க.வி.த்.தி |
| 3ம் இடம் | செல்வி. விஷாமினி ரஜனிகாந் | மட்/புனித சிசிலியா பெ.தே.பா |

**கட்டுரைப் போட்டி - சிரேஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி. இராசன் மீனா | மட்/அமிர்தகழி ஸ்ரீ.சி.வி.ம.வி. |
| 2ம் இடம் | செல்வன். ஜெய்சங்கர் அஸ்வினி | மட்/புனித சிசிலியா பெ.தே.பா |

**கவிதை பாடல் - சிரேஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வன்.அருணாகரன் ஜனுஜன் | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதி வித். |
| 2ம் இடம் | செல்வன் தேவராசா பிரசித் | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதி வித். |

**பாடல் நயத்தல் போட்டி - சிரேஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வன். இருதயராஜ் யூட்சிஜிதன் | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதி வித் |

**பாடல் ஆக்கப் போட்டி - திறந்த பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அம்பிகா தெய்வராசா | 246/63, 3ம் குறுக்கு, ஆஸ்பத்திரி வீதி |
| 2ம் இடம் | கார்த்திகேசு சிவலிங்கம் | 34/8, வன்னியார் வீதி,மட்டக்களப்பு. |
| 3ம் இடம் | சுந்தரமதி தேவநாயகம் | 16, கலைமகள் வீதி,நொச்சிமுனை |

**நாட்டார் கலைகற்றல் போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | திரு.வேலுப்பிள்ளை புவனேஸ்வரன் | 01,சூரியா வீதி, மட்டக்களப்பு. |
| 2ம் இடம் | திருமதி.சுந்தரமதி தேவநாயகம் | 16, கலைமகள் வீதி,நொச்சிமுனை |
| 3ம் இடம் | திருமதி.அம்பிகா தெய்வராசா 2 | 46/63, 3ம் குறுக்கு, ஆஸ்பத்திரி வீதி |

**விவரணப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | திரு.வேலுப்பிள்ளை புவநேஸ்வரன் | 01, சூரியாவீதி, மட்டக்களப்பு. |
| 2ம் இடம் | திருமதி.அம்பிகா தெய்வராசா | 246/63, 3ம் குறுக்கு, ஆஸ்பத்திரி வீதி |

**சிறுகதைப்போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி.சாருமதி புலேந்திரன் | இல. 12, தாமரைக்கேணி, மட்டக்களப்பு. |
| 2ம் இடம் | திருமதி.ஜெயரஞ்சி தவநாயகம் | இல.30, றொசைரோ வீதி,மட்டக்களப்பு. |
| 3ம் இடம் | செ.குணரெத்தினம் | 3ம், குறுக்குத் தெரு, அமிர்தகழி, |

**கவிதைப்போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செ.குணரெத்தினம் | 3ம், குறுக்குத்தெரு, அமிர்தகழி, மட்டக்களப்பு. |
| 2ம் இடம் | அம்பிகா தெய்வராசா | 246/63, 3ம் குறுக்கு, ஆஸ்பத்திரி வீதி |
| 3ம் இடம் | கார்த்திகேசு சிவலிங்கம் | வன்னியனார் ஒழுங்கை மட்டக்களப்பு. |

**சிறுவர் கதைப்போட்டி**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | திருமதி. சுந்தரமதி வேதநாயகம் | மட்டக்களப்பு. |
| 2ம் இடம் | அம்பிகா தெய்வராசா | மட்டக்களப்பு. |
| 3ம் இடம் | கார்த்திகேசு சிவலிங்கம் | மட்டக்களப்பு. |



பெயர் : **திரு.அன்ரனி சத்தியசீலன் பாய்வா**

பிறந்த திகதி : **27.10.1948**

துறை : **ஆக்க இலக்கியம்**

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மூதூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அ.ச.பாய்வா மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்புத் துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் சாஸ்திரிய, மேற்கத்திய இசையிலும் புலமைபெற்றவர். 1996ம் ஆண்டில் கவிதைக்கான 'சாஹித்திய கலாபரிசாதினி' விருது பெற்றுள்ள இவர் தேசிய மரபுரிமைகள் கலாசார அமைச்சு அரச ஊழியர்களுக்கிடையே நடாத்திய போட்டிகளில் 2005ம், 2008ம் ஆண்டுகளில் சிறுகதைப் பிரிவில் முறையே இரண்டாம், முதலாம் இடங்களையும் 2007, 2008ம் ஆண்டுகளில் கவிதை ஆக்கத்திற்காக ஆறுதற் பரிசையும் பெற்றுள்ளார்.

2005ம் ஆண்டு வீரகேசரி வாரவெளியீடு தனது பவளவிழாவினை யொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றுள்ள இவர், தனது "ஆத்ம விசாரம்" என்ற சிறுகதைத் தொகுப்புக்காக 2008ம் ஆண்டில் சாகித்திய விருது பெற்றதும், மட்டக்களப்பு எழுத்தாளர் மையத்தின் 'தமிழியல் சிறப்பு விருது' பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை பல இலக்கியப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ள அ.ச.பாய்வா இசைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். பல இசை நிகழ்வுகளில் இசை வழங்கியுள்ள இவர் ஒரு சிறந்த இசையமைப்பாளரும், பாடலாசிரியருமாவார். எழுத்தில் புதிய எல்லைகளைத் தொடும் இவர் தனது படைப்புக்களை அ.ச.பாய்வா 'செண்பகக் குழல் வாய் மொழி' போன்ற புனை பெயர்களில் எழுதி வருகின்றார். மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் 'தேனகம்' கலாசார கீதத்தை எழுதி இசையமைத்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலமாக மகுடம் காலாண்டிதழில் பல சர்ச்சைக்குரிய இலக்கிய கட்டுரைகளை எழுதிவரும் இவரது கவிதைத் தொகுதி விரைவில் வெளிவரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கலைஞர் கௌரவம்



பெயர் : **மாரிமுத்து பஞ்சாச்சரக்குருக்கள்**

பிறந்த திகதி : **21.07.1946**

துறை : **கூத்து**

மட்டக்களப்பில் இல.40/38, எதிர்மன்னசிங்கம் வீதி, அமிர்தகழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு வாழும் சிறந்த கூத்துக்களைத் தயாரித்து நெறியாள்கை செய்யும் அண்ணாவியாராகிய இவரை, காசிமா பஞ்சாட்சரக்குருக்கள் என்றே அனைவரும் செல்லமாக அழைப்பர். இவர் கூத்துக் கலையில் தமக்கென ஓர் இடத்தினைப் பிடித்துள்ளார் என்பது ஊர்மக்கள் அவர் மேல் வைத்திருக்கும் மதிப்பும், மரியாதையும் எடுத்துக்காட்டுகின்றது.

1986 இல் கலை வாழ்க்கையில் காலடியெடுத்து வைத்த இவர், ஆலய பூசகராவார். இவர் கலையுலகில் காலடி எடுத்து வைக்க வழி காட்டியாக இருந்தவர் தமது மதிப்புக்குரிய உயர் திரு ஆசிரியர் திலகம் மத்தியூஸ் சிங்கோ ஆவார். இராமநாடகம், பதினெட்டாம் போர் என முப்பதுக்கும் மேற்பட்ட வடமோடிக் கூத்துக்களைத் தயாரித்து ஆலய உற்சவங்களிலும், பொது மேடைகளிலும் மேடையேற்றி பாராட்டுக்களைப் பெற்றவர்.

காமதகனம், மார்க்கண்டேயர், சத்தியவான் சாவித்திரியாகிய வடமோடிக் கூத்துக்களுக்கான பரிசில்களையும், பாராட்டுக்களையும், பொன்னாடை போர்த்தி கௌரவங்களையும் பெற்றுள்ளார். 1996 முத்தமிழ் விழா கூத்து போட்டிகளில் தயாரிப்பாளராகக் கடமையாற்றி பரிசுகளைக் என்பதற்காகப் பெற்றுள்ளார்.

கலைஞர் கௌரவம்



பெயர் : **திருமதி. ஜயந்தி திஸாநாயக்கா**

பிறந்த திகதி : **05.02.1953**

துறை : **வாத்தியம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.35/3, நிரஞ்சன் லேன், சின்ன உப்போடை மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்டுள்ள இவர், கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் வயலின் விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இளமையில் இசையில் ஆர்வம் கொண்டிருந்த இவர், யாழ்/ இணுவையூர் கலாபூஷணம் உ. ராதா கிருஷ்ணன் அவர்களிடம் முறைப்படி வயலின் கற்று தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து யாழ்/ இளங்கலைஞர் மன்றத்தின் இசை ஆசிரியராகப் பணியாற்றிய இவர், 1985இல் யாழ், வீரசிங்க மண்டபத்தில் தனது முதல் கச்சேரியை நடாத்தினார். தொடர்ந்து 1986ல் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் கந்தபுராணப் படிப்பு நிகழ்வில் இசைக் கச்சேரி நிகழ்த்தி பாராட்டுப் பெற்றார். இக்காலத்தில் யாழ் நல்லூரில் வயலின் இசைத்துறையில் பணியாற்றி பல மாணவர்களை உருவாக்கினார். பின் 1989 முதல் கல்லடி சுவாமி விபுலானந்த இசைப் நடனக் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து மட்டக்களப்பில் தனது இசைப்பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். கல்லூரியிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பக்கவாத்தியமாக வயலின் இசைத்து வரும் இவர் விரிவுரைகள் மூலமும், பிரத்தியேக வகுப்புக்கள் மூலமும் பல மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார். மட்டக்களப்பில் இசைத் (வயலின்) துறை மன்றம் ஸ்தாபித்து இளந் தலைமுறையினரை ஊக்கப்படுத்த வேண்டும் என ஆர்வம் கொண்டிருக்கும் இவர், டிப்ளோமா, பொதுக் கலைமாமணி, இசைக் கலைமாமணி, வட இலங்கை சங்கீத சபை டிப்ளோமா முதலிய பட்டங்களையும் பெற்றவராவார்.



பெயர் : **திரு. ஏகாம்பரமூர்த்தி சபாரெத்தினம்**

பிறந்த திகதி : **30.03.1936**

துறை : **சிற்பக்கலை**

மட்டக்களப்பில் புன்னைச்சோலை கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இவர் சிறுவயதிலிருந்தே கலை ஆர்வம் கொண்டவர். இவர் அமைத்த நாகதம்பிரான் சிலை அமிர்தகழி வேம்புப்பிள்ளையார் ஆலயத்திலும், பிள்ளையார், முருகன் சிலைகள் ஊறணி முருகன் ஆலயத்திலும், பிள்ளையார் சிலை கல்லடி பிள்ளையார் ஆலயத்திலும், நவக்கிரக சிற்பங்கள், பிள்ளையார் சிலைகள், கோபுரங்கள் திருப்பெருந்துறை முருகன் ஆலயத்திலும், பிள்ளையார் சிலை களுதாவளை ஆலயத்திலும், அம்மன் சிலை கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயத்திலும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவை தவிர கடற்கன்னிகளின் சிலைகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள சுற்று வட்டாரத்தில் அமைக்கப்பட்டிருப்பதையும், தாமரைப் பூ மட்டக்களப்பு கள்ளியன்காடு இந்து மயானத்திலும், கல்வாரி சிலைகள் புளியடிக்குடா புதிய செபஸ்தியார் ஆலயத்திலும், பல்வேறு சிற்பங்கள் மட்டக்களப்பு புதிய செலான் வங்கி முன்னுள்ள ஈஸ்வரன் பூங்கா விற்பனை நிலையத்திலும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவரினால் தீட்டப்பட்ட சித்திரங்கள் மட்டக்களப்பு சிறுவர் வாசிக சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றி ஓய்வூதியம் பெறும் இவர் தொடர்ந்து சிற்பங்கள் அமைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்.

கலைஞர் கௌரவம்

பெயர் : **திரு.கந்தப்பர் கணேசானந்தன்**

பிறந்த திகதி : **15.08.1940**

துறை : **நாடகம்**



மட்டக்களப்பு நொச்சிமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 1955ம் ஆண்டு முதல் இன்றுவரை பத்து சரித்திர நாடகங்களும், இரண்டு சமூக நாடகங்களும், நடித்துள்ளார். 1969ம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேச கலா மன்றத்தினர் நடாத்திய நாடகப் போட்டியில் இவர் நடித்த ஆரையூர் இளவலின் "சிங்களத்துச் சிங்காரி" என்ற வரலாற்று நாடகமும், 1970ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இவர் நடித்த தர்மம் காத்த தலைவன் என்ற வரலாற்று நாடகமும் முதலாவது இடத்தைப் பெற்றது. இது தவிர ஆரையூர் இளவலின் நீறுபூத்த நெருப்பு துரோணச்சாரி துருபதசாரியார் பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் இவர் நடித்த சிங்கமலை வேந்தன் , மானம் காத்த மாவீரன், துரோணர் சபதம், நிலவறையிலே, வெற்றித் திருமகன் என்பவை மக்களினதும், பத்திரிகைகளினதும் பாராட்டைப்பெற்றன.

இவர் வளர்மதி இலக்கிய மன்றத்தின் தலைவராகவும், இளங்கதிர் நாடக மன்றத்தின் செயலாளராகவும், மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையில் 1993ம் ஆண்டு முதல் உறுப்பினராகவும் கலைப்பணியாற்றியுள்ளார். இப்போது ஒப்பனையாளராகவும், இயக்குனராகவும் பணியாற்றிவருகின்றார். இவர் பொதுப் பணியில் அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உபசெயலாளராகவும், சிவானந்த தேசிய பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளராகவும், பழைய மாணவர் மன்றத்தின் செயலாளராகவும், இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தின் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும், கல்லடி உப்போடை நொச்சி முனை ஸ்ரீ சித்தி விநாயகர், பேச்சி அம்மன் ஆலயப் பரிபாலன சபையின் தலைவராகவும், சமூக அபிவிருத்தி மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பணியாற்றிவருகின்றார்.

2007ம் ஆண்டு முத்தமிழ் விழாவில் நாடகத் துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காக தேனகக் கலைச்சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் 2013ம் ஆண்டு இந்துக் கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கலைஞர் கௌரவம்



பெயர் : **பேராசிரியர். சி. மௌனகுரு**

பிறந்த திகதி : **09.06.1943**

துறை : **நாடகம்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், 45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை வீதியை வதிவிடமாகவும் கொண்ட பேராசிரியர்.திரு.சி.மௌனகுரு அவர்கள் 1965-1971 வரை ஆசிரியராகவும், 1972-1975 வரை பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் பாடநூல் எழுத்தாளராகவும், 1981-1982 வரை பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும், 1983-1991 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளராகவும், 1993-1998 வரை கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீடாதிபதியாகவும் பணிபுரிந்துள்ளார். 1991ம் ஆண்டு தொடக்கம் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை தலைவராகப் பொறுப்பேற்று கடமையாற்றியுள்ளார். சமூகவியல் நோக்கில் ஈழத்து மரபு வழி நாடகங்களை கலாநிதி பட்டத்திற்காக முதன் முதலில் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வு மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் என்ற தலைப்பில் 1998இல் நூலாக வெளிவந்தது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்ட கூத்துக்களில் பிரதானபாகம் ஏற்று நடித்ததுடன், பேராசிரியரின் தயாரிப்புகளுக்கு மிகவும் துணையாகவும் இருந்துள்ளார். சடங்கிலிருந்து நாடகம் வரை (1985), தப்பி வந்த தாடி ஆடு (நாடகம் - 1987), மௌனகுருவின் மூன்று நாடகங்கள் (1987), பழையதும் புதியதும் (1992), சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் (1992), சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும் (1993), ஈழத்து தமிழ் நாடக அரங்கு (1993), கால ஓட்டத்திநூடே ஒரு கலைஞன் நீலாவணன் (1994), சக்தி பிறக்குது (நாடகம் 1997), இராவணேசன் (நாடகம் 1998), ஈழத்து நாடக மரபும் சரத்சந்திராவும் (நாடகம் 1999) என்னும் நூல்களை எழுதியதுடன் பேராசிரியர் சிவத்தம்பியுடன் இணைந்து "அரங்கு ஓர் அறிமுகம்" என்னும் நூலையும் எழுதியுள்ளார். அத்துடன் சுபத்திரன் கவிதை நூலையும் பதிப்பித்துள்ளார்.

மேலும் இவர் இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம் (1984) என்னும் நூலின் இணை ஆசிரியருமாவார். இவற்றுள் தப்பி வந்த தாடி ஆடு, பழையதும் புதியதும், ஈழத்து தமிழ் நாடக அரங்கு, மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் ஆகியன சாகித்திய மண்டல பரிசு பெற்றவை. சிறந்த நடிகரும், நாடக ஆசிரியரும், தயாரிப்பாளரும், கூத்துக் கலைஞரும், சிறந்த ஆய்வாளருமான இவர் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை ஈழத்தில் பல பாகங்களிலும் நடாத்தி அத்துறை வல்லுனர்களை உருவாக்கி வருகின்றார். சிறுவர் நாடகத் துறையில் இவரது பங்களிப்பு கணிசமானது.

அண்மைக் காலமாக ஈழத்தில் பாரம்பரிய இசை மரபு குறித்த தேடல்களில் ஈடுபட்டு, நாட்டார் இசை பற்றிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். தமிழுக்காக இன்னிய அணி ஒன்றினையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கியுள்ளார். அத்துடன் உலக நாடக தின விழாவினை கடந்த பல வருடங்களாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடாத்திவந்துள்ளார். தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிக்காக இலங்கை கலாசார அமைச்சு 1994இல் கலைச் செம்மல் பட்டம் வழங்கி இவரை கௌரவித்தது.

மேலும் 2013இல் கலாசார அமைச்சினால் நாடக கீர்த்தி என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் வட இலங்கை சங்கீத சபையின் அமுத விழா 2013இல் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய மூத்த கலைஞர் என இவரது கலைச் சேவையை பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் 2014ம் ஆண்டு கொடகே நிறுவனத்தால் வாழ்நாள் சாதனையாளர் என கொடகே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கலைஞர் கௌரவம்



பெயர் : **திரு. காசுபதி நடராஜா**

பிறந்த திகதி : **10.04.1941**

துறை : **ஆய்வு**

ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்லடியில் வசித்து வருகின்றார். காசுபதி நடராஜா சமூக சேவகனாக , பத்திரிகையாளராக, சிறுசஞ்சிகை ஆசிரியராக, ஆய்வாளராக பன்முகத்தன்மை கொண்டவர். இவரது ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், நினைவு மலர் கட்டுரைகளாகவும், தனிநபர் கட்டுரைகளாகவும் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. பதினைந்திற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை பல தளங்களிலும் எழுதியுள்ளார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சஞ்சிகைகள், வெளியீடுகளில் வெளியீட்டு ஆசிரியராகவும், ஆசிரியர் குழு உறுப்பினராகவும் வேவையாற்றியுள்ளார்.


பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் ஓய்வு பெறும் போது பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட சங்கங்கள், கழகங்களில் பல பதவி நிலைகளி லிருந்து சமூக சேவையும் ஆற்றிவருகின்றார். 1961 காலப்பகுதியில் ஈழநாடு பத்திரிகையின் காத்தான்குடி நிருபராகவும் கடமையாற்றியுள்ளார்.

மட்டக்களப்பு கலை இலக்கியப் பேரவையால் சேவையின் நாயகன் (2002), மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வைர விழா நிகழ்வில் சமூகநலன், தன்தொழில்(2007) போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சிக்கு பல வழிகளில் பணியாற்றிவரும் காசுபதி நடராஜா மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையில் நீண்ட கால உறுப்பினராக இருந்து தேனகம் மலர் வெளியீட்டுக்கு பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட கிழக்கு மாகாண சபையின் 2013ம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் இலக்கிய வித்தகர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படடுள்ளார். மேலும் அதே வருடம் இந்துக் கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கலைஞர் கௌரவம்

# இனிய நிலம்



பேராசிரியர் சி. மௌனகுரு

மட்டுநகர் மண் - நாங்கள்
வாழும் மண்ணம்மா - அங்கு
வாழுகின்றமக்கள் மன
வளமோபெரிதம்மா

சூழுகின்றவயல் வளமோ
நூறுதொகையம்மா - அதைச்
சுற்றிவரும் நீர் வளத்தைச்
சொல்லமுடியுமா?

வயல் வெளியில் உழவர் நின்று
கதிர் அடிப்பார்கள் - எங்கள்
வாவியிலேதொழிலாளர்
மீன் பிடிப்பார்கள்

காட்டினிலேவிறகெடுப்பர்
கட்டிவருவார் - எங்கள்
கஜு மரத்தில் கனிபறிப்பார்
பருப்புவிற்பார்கள்.

முல்லையிலேமாட்டைமேய்த்துப்
பால் எடுப்பார்கள் - அதை
முட்டிகளில் தேக்கித் தயிர்
ஆக்கிவைப்பார்கள்

காட்டினிலேஉச்சிமரக்
கொப்பினில் ஏறி - கட்டி
கட்டியாகத் தேன் வதைகள்
கொண்டுவருவார்

பால்,தயிர்,தேன்,நண்டு, இறால்,மீன்
பரந்த இடமம்மா - இது
பாருக்குள்ளேஉணவு வகைகள்
பொலிந்தநிலமம்மா

காலினிலேசலங்கைகட்டி
கூத்தைஆடுவார் - மாதர்
வாயினிலேகையைவைத்துக்
குரவைபோடுவார்

கைகளிலேகம்பெடுத்து
வசந்தன் ஆடுவார் - அவர்
பையப் பையநடந்துமகுடிக்
கூத்தும் போடுவார்

கழிகம் பாடிபக்கீர் பைத்
பாட்டுப் பாடுவார் - அவர்
கபறிஞ்சாபைலாஆடிக்
களிப்படைவார்கள்

காலையிலேதேவாரப்பண்
காற்றிலேவரும் - சேர்ந்து
மசூதியிலேவாங்கோசை
காதிலேவிழும்

பான்சாலையில் பிரித் ஓசை
கேட்கின்றபோது - மாதா
கோயில் மணிஓசைஎங்கள்
மனதைவருடும்

உடுக்கு,மத்தளம்,பறை,றபாணம்
ஒலிக்கும் நிலமம்மா - இது
ஒற்றுமைக்குகுறியீடாய்
அமைந்தகுலமம்மா

ஐரோப்பியர்கள் நாட்டுக்குள்ளே
நுழைந்தபோது - அன்று
அனைத்துமக்களும் ஒன்றுபட்ட
அருமைநிலமம்மா

சாதிமதச் சண்டை இல்லாச்
சமரசப் பூமி - இது
மோதவரும் பகை எதிர்க்கும்
மூர்க்கபூமி

வந்தவரைவரவேற்பர்
வாழ்வுதருவார் - இவர்கள்
சொந்தமண்ணில் தாம் கெட்டாலும்
துயரமேகொள்ளார்

இங்குவாழும் மக்களுக்கு
இதயம் பெரிதம்மா
அன்புக்காகஉயிரைக் கொடுக்கும்
அருமை இனமம்மா

வாழுகின்றவாழ்வுஎளிமை
வழமைமுறைகளால் - நமது
இலங்கைக்கேவழிகாட்டும்
இனியநிலமம்மா

### மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில்

# சிற்றிதழ் வளர்ச்சிப் போக்குப்பற்றிய ஒரு பார்வை



எஸ். எதிர்மன்னசிங்கம்

மண்முனைவடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் சிற்றிதழ் (சஞ்சிகை) வளர்ச்சி பற்றி பார்ப்பதற்கு முன்னர் ஈழத்தில் சிற்றிதழின் தோற்றம் கிழக்கில் அதன் வளர்ச்சிப் போக்கு, மட்டக்களப்பு மாநிலத்தில் ஏற்பட்ட தாக்கம் பற்றியெல்லாம் சற்றுநோக்குதல் பொருத்தமான தாகும்

1841ம் ஆண்டு அமெரிக்க மிஷனரியி னால் வட்டுக்கோட்டையில் வெளியிடப்பட்ட "உதயதாரகை" என்னும் சிற்றிதழ் தான் முதன் முதல் ஈழத்தில் வெளிவந்த சிற்றிதழாக நாம் கொள்ளலாம். பரந்துபட்டகலை இலக்கிய செயற்பாடுகளும் சிறப்பாக வெளிக்கொணர்வதற்கு சிற்றிதழின் வளர்ச்சி மிக அவசியமானதென்பது உணரப்பட்டது. தினசரிப் பத்திரிகைகளில் உள் அடக்க முடியாத பலவிடயங்களை வெளிக் கொணர்வதற்கு சிற்றிதழ்களின் தேவை உணரப்பட்டது. இந்தவகையில் திருகோணமலை யிலிருந்து முதலாவதாக "மாதர் மதிமாளிகை" சஞ்சிகை 1927ல் வெளிவந்தது. அடுத்ததாக 1949ல் மட்டக்களப்பு மாநிலத்தின் மண்டூர் கிராமத்திலிருந்து வெளியிடப்பட்ட "பாரதி" சஞ்சிகையைக் குறிப்பிடவேண்டும். சமூகம், அரசியல் எனப் பல்வேறு விடயங்களில் "பாரதி" கவனம் செலுத்தியது. ஆனால் பாரதியின் ஒருசில இதழ்களே கிடைத்துள்ளன. பின்னர் மட்டக்களப்பு மண்முனைப்பற்று ஆரையம்பதி என்னும் கிராமத்தில் எழுத்தாளர்களின் முயற்சியால் 1970ல் திரு. இரா. நாகலிங்கம் அன்புமணி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த"மலர்"சிற்றிதழைக் கூறலாம். "உள்ளத்தினிலே உண்மை பொழிய உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்னும் மகுடவாசகத்துடன் "மலர்" சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. மலரில் பல மூத்தஎழுத்தாளர்கள் தமது ஆக்கங் களை வெளியிட்டனர்.

1982ல் திரு.கணமகேஸ்வரனை ஆசிரியராகக் கொண்டுவெளிவரத் தொடங்கிய "தாரகையை" அடுத்துக் குறிப்பிடலாம். அடுத்து எழுத்தாளர் ரீ. பாக்கியநாயகம் அவர்களை ஆசிரியராக் கொண்டு வெளிவந்த "சுமைதாங்கியை" குறிப் படலாம். இச்சஞ்சிகை கூடுதலாக கிறிஸ்தவ

சமயவிடயங்களைத் தாங்கி வெளிவந்தது. எழுத்தாளர் பாக்கியநாயகம் அவர்களுடைய நண்பர்கள் மத்தியில் விநியோகம் இலகுவாக நடைபெற்றது. திரு இ பாக்கிநாதன் கச்சேரியில் கடமையாற்றியதோடு,பிரதேசகலா மன்றச்செயலாளராகவும் இருந்தமையால் சஞ்சிகைப் பிரதிகளின் விநியோகத்தை அவர் செய்யமுடிந்தது. பின்னர் "சுமைதாங்கியும்" நின்றுபோய்விடுகின்றது.

அரங்கம்: மட்டக்களப்பு மோர்ஸா பிட்டியைச் சேர்ந்த திரு. இ. தவராசா வெண்ணிலாக் கலைக் கழகத்தை நடத்தியதோடு "அரங்கம்" சிற்றிதழ் ஒன்றையும் வெளியிட்டு வந்தார். மட்டக்களப்பின் பல மூத்த எழுத்தாளர்களுக்கு இதன் மூலம் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து பதினேழு வெளியீடுகள் வந்ததோடு அரங்கமும் நின்றுவிட்டது.

போது: பிரபல கவிஞரும் எழுத்தாளருமான "வாகரைவாணன்" திரு. அரியரத்தினம் அவர்களை ஆசிரியராக் கொண்டு ஆயர் பணிமனை மூலம் "போது"சஞ்சிகைவெளிவந்தது. மாணவர்களுக்கான ஆக்கங்களை முன்னிலைப்படுத்தி வெளிவந்த "போது" தொடரமுடியாமல் வழமை போல் நின்றுவிடுகிறது.

"சுவைத்திரள்": எழுத்தாளர் திக்கவயல் தர்மகுலசிங்கம் அவர்களை ஆசிரியராக்கொண்டு "சிரித்திரன்" பாங்கிலே நகைச்சுவை இதழாகத் தொடர்ந்து வெளிவந்த"சுவைத்திரள்" 1993ல் இருந்து இலக்கியம் சம்பந்தமான விடயங்களையும், நல்ல கவிதைகளையும் வெளியிட்டுவந்தபோதும், ஆசிரியரின் மறைவின் பின்னர் நின்று விடுகின்றது.

"தொண்டன்": 1966ம் ஆண்டிலிருந்து நாற்பத்திரண்டு வருடங்களாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. தொண்டன் கிழக்கிலங்கையில் சஞ்சிகைகள் அரிதாக இருந்தகாலத்தில் அவ்வெற்றிடத்தை நிரப்பியதோடு விரிந்த இதழாக ஆரம்பத்திலிருந்து தற்போது இலக்கியம், அரசியல், நகைச்சுவை முதலான பல் அம்சங்களையும் தாங்கி வெளிவருகின்றது. நிகழ்வுகளின் விமர்சனங்கள் கூட சிறப்பாக இடம்பெற்று வெளிவந்தது. தொடர்ந்து இணையாசிரியராகப் பணியாற்றிவரும் "மலர்வேந்தன்" மிகவும் பாராட்டிற்குரியவர். சமய அறிவினை ஊட்டும் வகையில் "வர்ணம் தீட்டும் போட்டியும்" இதழில் இடம்பிடித்துள்ளது. மொத்தத்தில் நீண்டகாலம் நின்றுபிடித்துள்ள சஞ்சிகையாக "தொண்டன்" விளங்குகின்றது. காரணம் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் அனுசரனை இவ்விதழுக்கு தாராளமாகக் கிடைப்பதேயாகும்.

"பெண்": சூரியாப்பெண்கள் அமைப்பினால் வெளிக்கொணர ஏற்றபடும் சஞ்சிகையாக "பெண்" தனித்து நோக்கப்படவேண்டிய ஒரு இதழாக விளங்குகின்றது. முக்கியமாக பெண்ணிலைவாதக் கருத்துக்களைப் பரவலாக்கப்படுவதை நோக்காகக் கொண்டு "பெண்" சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. அத்தோடு பெண் எழுத்தாளர்கள் பலரை உருவாக்குவதும், சமூகத்திற்குவேண்டிய பல இலக்கிய விடயங்களை வெளிக்கொணர்வதும் இவ்விதழின் பணியாகவுள்ளது. சிறந்த பெண் கவிஞர்கள் பலரை இச்சஞ்சிகை உருவாக்கி தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது.

"செங்கதிர்" செங்கதிரோன் திரு. கோபாலக்கிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு "இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை" என்ற மகுடவாசகத்தை முன்னிலைப்படுத்தி வெளிவந்து கொண்டிருக்கின்றது. இலங்கையில் பலபாகங்களில் உள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது. 2008ம் ஆண்டிலிருந்து வெளியிடப்படும் இச்சஞ்சிகைகலை, இலக்கியம், நகைச்சுவை, அரசியல் எனப் பலவிடயங்களையும், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை, சொல்வளம் பெருக்குவோம், மண்வாசனைச்சொற்கள், நேர்காணல் எனப்பல அம்சங்களையும் மாதந்தோறும் வெளிக்கொணர்வதில் முன்னிற்கின்றது.

"தென்றல்" இச்சஞ்சிகை கிருபாகரனை ஆசிரியனாகக் கொண்டு "தேசியபல்சுவைக் குடும்பச் சஞ்சிகையாக" வெளிவருகின்றது. முத்திங்கள் இதழாகவெளிவரும் சஞ்சிகையில் ஆய்வுக்கட்டுரைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், புலமைப்பரிசில் வினாவிடைகள், அலைஓர் கௌரவம் பற்றிய தகவல்களும், படங்களும் என இன்னோரன்ன விடயங்களை வெளியிட்டு வருகின்றது. குடும்ப மருத்துவம் பற்றி தகவல்களும் மக்களுக்கு பெரிதும் உதவக் கூடிய வகையில் இவ்விதழில் இடம்பெறுகின்றது. நாட்டாரியல், நகைச்சுவை அம்சங்களும் தென்றலில் இடம் பிடித்துள்ளன.

"மகுடம்": 2012ம் ஆண்டு தைமாதம் முத்திங்கள் இதழாக "மகுடம்" தாகம் மைக்கல் கொலினை ஆசிரியராகக் கொண்டு முதலாவது மலர்மலர்ந்தது. தாகம் மைக்கல் கொலின் என்று ஏன் குறிப்பிட்டேன் எனின் திருகோணமலையில் கொலின் "தாகம்" என்னும் சஞ்சிகையை வெளியிட்டு அதன் மூலம் அப்பெயரால் அழைக்கப்பட்டார் என்பதனாலேயாகும் மகுடம் இதுவரை ஆறு இதழ்கள் வந்துள்ளது. ஐந்தாவது இதழில் "தமிழ்தூது தனிநாயகம்" அடிகளது சிறப்புமலராக வெளிவந்தது.

இவ்விதழிலே தனிநாயகம் அடிகள் பற்றிய சிறப்பு ஆய்வுக்கட்டுரைகள் பல அடங்கியுள்ளன. "மானிடம் சிறக்க உழைப்பது மகுடம் தானதுவாகதலைப்பதும் மகுடம்" எனும் மகுடவாசத்தைத் தாங்கி இவ்விதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது. முதலாவது இதழிலேயே கவிதைகள், சிறுகதைகள், நூல் பதிப்புரைகள், குறுநாவல் எனப்பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு இதழிலும் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களது சிறந்த ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. மகுடம் சஞ்சிகையில் பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் யோகராசா, சித்திரலேகா மௌனகுரு, தமிழ்நேசன் அடிகள் திரு. மு. பொன்னம்பலம், நந்திினிசேவியர் மற்றும் பலரது கனதியான ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "மகுடம்" நான்காவது இதழ் மலையக சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. இவ்விதழிலே மலையக மக்களின் பண்பாட்டுக்கோலங்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. சிறப்பான விடயமாக தஞ்சாவூரிலே பிறந்து மலையகத்திற்கு வருகைதந்து மலையக மக்களது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் எழுப்பி செயற்பட்டவர்தான் நடேசய்யர் அவரது வாழ்வும் பணியும் பற்றிஎழுத்தாளர் அந்தனி ஜீவாஅவர்கள் எழுதிய கட்டுரை சஞ்சிகையில் சிறப்பிடம் பெறுகிறது.

இறுதியாக வந்துள்ள ஆறாவது மகுடம் இதழில் ஆசிரியர் கொலின் அவர்கள் ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ள "அடுத்தபக்கம் பார்க்க:" விடயம் வாசகர் எல்லோரதும் உள்ளத்தைத் தொடும் விதத்தில் அமைந்துள்ளது. மொத்தத்தில் "மகுடம்" சஞ்சிகை ஒவ்வொரு இதழிலும் காத்திரமான பலவிடயங்கள் இடம் பெற்று இதழுக்குக் கனதியைச் சேர்ந்துநிற்கின்றன.


இனிநாம் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சிற்றிதழ்களின் வளர்ச்சியைப் பார்க்கவேண்டும். முதலில் வெளிவந்து பின்னர் தொடரமுடியாமல் நின்று விட்ட சிற்றதழ்களைப் பார்க்கலாம். அந்த வகையில் "வயல்" "பூவரசு" "படி" ஆகிய மூன்று சஞ்சிகைகளில் "வயல்" பிரபல கவிஞர் "சாருமதி" யோகநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. மற்றைய சஞ்சிகையான பூவரசு கவிஞர் "சாருமதி" மற்றும் கவிஞர் வாசுதேவன் ஆகிய இருவரையும் ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்தது. இவ்விரு சஞ்சிகைகளும் இங்குள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து நல்ல கனதியான விடயங்களைத் தாங்கி வெளிவந்தன. மட்டக்களப்பு விபுலானந்தா அக்கடமியிலும் சாருமதி அவர்கள் விரிவுரையாளராகவிருந்த காரணத்தால் மாணவர்களுக்கான நல்ல பலவிடயங்களும் இடம்பிடித்தன.

"படி": சஞ்சிகை மட்டக்களப்பு சஞ்சிகை வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த சஞ்சிகைகளிலொன்றாகும். 1993 ஆண்டிலிருந்து வெளிவர ஆரம்பித்த இச்சஞ்சிகைக்கு ஆசிரியர்களாக ஜீ.நிர்மலராஜ் கவிஞர் வாசுதேவன் மற்றும் வெ.மனோ (வெ.தவராஜா, பிரதேச செயலாளர், மண்முனைவடக்கு) ஆகியோர் ஆசிரியர்களாக விருந்தனர். இரண்டாவது வெளியீட்டில் ஆசிரியர் குழுவிலிருந்த ஜீ.நிர்மலராஜ் தானாகவே விலகிக் கொள்ள மூன்றாவது வெளியீடடில் கவிஞர் வாசுதேவனும் விலகிக்கொண்டார். நான்காவது மற்றும் ஐந்தாவது வெளியீடுகள் வெ.மனோ அவர்களை மாத்திரம் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தன.

படி சஞ்சிகை ஏற்கனவே மட்டக்களப்பிலிந்து வெளிவந்த சஞ்சிகைகளைவிட வேறுபட்ட விடயங்களை கொண்டு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சிங்கள மொழி சஞ்சிகைகளில் வெளிவந்த ஆக்கங்களை மொழி பெயர்த்து பிரசுரித்தமை புலம்பெயர் தமிழர்களால் எழுதப்பட்ட தொகுப்புக்கள் தொடர்பாக "தொலை தூரவெளிச்சங்கள்" எனும் தலைப்பில் அறிமுகமும் விமர்சனங்களையும் வெளியிட்டமை "மெசேயின் டயறி" எனும் தலைப்பில் கவிஞர் அமரர் ஆனந்தன் அவர்களினால் மலையாள மொழியில் வெளிவந்த சிறுகதைகள் மற்றும் சிலமுக்கிய விடயங்கள் மொழிபெயர்த்து பிரசரித்தமை என பலகாத்திரமான படைப்புக்களுடன் வெளிவந்ததுடன் ஐந்தாவது சஞ்சிகை அமரர் வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராஜா அவர்களது சிறப்பு மலராக வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை மண்முனை வடக்கு செயலாளர் பிரிவில் இருந்து, ஏற்கனவே வெளியிடப்பட்டு நின்றுபோன சஞ்சிகைகள் பற்றியும், தற்பொழுது வந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் பற்றியும் ஓரளவு எடுத்து நோக்கினோம். தவறுதலாக சிலசஞ்சிகைகள் பற்றி குறிப்பிடாமல் விடுபட்டிருந்தால் அது பற்றி தெரியவருமிடத்துக் கட்டுரையில் சேர்த்துக் கொள்ளமுடியும் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.









# முத்தமிழ் விழா நிகழ்வுகள்

பிரதேச செயலக கலாசாரப்பேரவை, மண்முனை வடக்கு